# மஞ்சரி

ஜய - கார்த்திகை

நவம்பர், 1954

பெண்ணாக மாறும் ஆண் பூச்சி

முஸோலினி சிங்க[illegible]டை

கங்கை விழும் இடம்

அரைப் புளுகன் (அரபுக் கதை)

மருமகள் (வங்க நாவல்)

-6-

அணா

# சத்தியமே தர்மம்

சத்தியத்திலேயே சூரியன் பிரகாசிக்கிறான். சத்தியத்தின் மீதே பூமி நிலைநிற்கிறது. சத்தியமே தர்மத்துளெல்லாம் சிறந்தது. அகிலப் பிரபஞ்சமுமே சத்தியத்துக்குள் அடங்கிக் கிடக்கிறது.

—மார்க்கண்டேய புராணம்

## மஞ்சரி


**ஆசிரியர், பதிப்பாளர்:** என். ராமரத்தினம்

**நிர்வாக ஆசிரியர்:** தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கௌரி அம்மாள்
கி. தாமோதரன்
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
மோ. ஸ்ரீ. செல்லம்

**ஓவியர்கள்:** ஸாமி, மகான், சுசி, சுப்பு.

---

**மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8 கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/-. சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.**


**மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.**

ஆண்டு 7] ஸ்தாபிதம்: நவம்பர் '47 : : நவம்பர் 1954 [இதழ் 11

மஞ்சரி
மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

# ஊரும் உலகமும்

★

'நேரு: சமாதானமே என் பணி' - இது 'நியூஸ் கிராணிக்கிள்' என்ற பிரபல லண்டன் பத்திரிகையின் முதல் பக்கத்தில் போட்டிருந்த கொட்டை யெழுத்துச் செய்தித் தலைப்பு. நேருவின் சீனா விஜயம் பற்றிய செய்திதான் இது. சமீபத்தில் கம்யூனிஸ்ட் சீனாவின் பிரதம மந்திரி இந்தியாவுக்கு வந்துவிட்டுப் போனார் இல்லையா? அதற்குப் பதில் மரியாதையாகவே நம் தலைவர் நேரு, அங்கே இப்போது சென்று வந்தார். சீனக் கம்யூனிஸ்ட் புரட்சி வீரரும் இன்று மக்கள் குடியரசின் தலைவருமாய் வீற்றிருச்கும் மா-ஸே-துங்கைச் சந்தித்துப் பேசினார். ஆசியாவில் சமாதானம் நிலவச் செய்யும் விஷயத்தில் சீனா பரிபூர்ணமாய் இந்தியாவுடன் ஒத்துழைக்கும் என்று சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள். நேருவுக்குக் கம்யூனிஸ்ட் சீன மக்கள், இதுவரையில் வேறு எந்த அயல் நாட்டினருக்கும் அளிக்காத பெரும் வரவேற்பளித்து அன்பு சொரிந்திருக்கிறார்கள். கம்யூனிஸ்ட் நாடுகளும், மற்ற ஜனநாயக நாடுகளும் பரஸ்பரம் ஒற்றுமையோடு வாழ முடியும் என்பதை நேருவின் வெற்றிகரமான சீன விஜயம் நன்றாய் எடுத்துக் காட்டுகிறது.

* * *

மகாத்மா காந்தி ஒரு சமயம் "நேரு என் அரசியல் வார்சு" என்று குறிப்பிட்டார். "அரசியலில் வார்சாவது!" என்று அப்போது நேரு கொஞ்சம் மிடுக்காகவே அதை மறுத்தார். ஆனாலும், மகாத்மாவுக்குப் பிறகு அவரே நாட்டுக்கு வழிகாட்டும் தனித் தலைவராக விளங்குகிறார். "ஆமாம்; நேருவுக்குப் பிரகு யார்?" என்ற கேள்வி வெளிநாட்டில் எழுந்திருப்பதுமட்டும் அல்ல; இங்கேயும் மூலை முடுக்குகளில் கூட மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நேரு சீனாவுக்குப் போகுமுன் ஒரு கடிதத்தில் இது பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். ராஜ்யங்களின் காங்கிரஸ் தலைவர்களுக்கு அவர் எழுதியது அந்தச்

சுற்றுக் கடிதம். தாம் பிரதம மந்திரி பதவியைச் சிறிது காலத்துக்காவது விட்டு விலகி ஓய்வு எடுத்துக்கொள்ள எண்ணுவதாக அதில் அவர் தெரிவித்திருக்கிறார். காங்கிரஸ் அக்கிராசனர் பதவிக்கு நிச்சயமாக அவர் போட்டிபோடப் போவதில்லையாம். இது பற்றி மக்கள் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால், பிரதம மந்திரி பதவியை அவர் விடுவதென்றால், தேசத்துக்கே பெரிதும் வருத்தமாயிருக்கும். சகல கட்சியினரும் அன்பு கொண்ட பெருந்தலைவர் அவர். உலகெங்குமே இந்தியாவிடம் மதிப்பு வைக்கும்படி செய்த ராஜதந்திரி அவர். அதிகாரத்தில் இருந்தபடியே தேசத்துக்கு அவர் இன்னும் செய்யவேண்டிய பணிகள் பல இருக்கின்றன. ஆகவே, அவர் பதவியை விடும் யோசனையைக் கைவிடுவார் என்று நம்புகிறோம்.

* * *

இந்தியாவில் பிரெஞ்சு அதிகாரத்தில் உள்ள திட்டுக்களைப்பற்றி, இந்தியாவுக்கும் பிரான்ஸுக்கும் கடைசியாக ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்தத் திட்டுக்களின் ஜனப் பிரதிநிதிகளுடைய சம்மதத்தின் பேரில் இந்தியாவுக்கு அவைகளை மாற்றிவிடுவது என்பதுதான் அந்த ஒப்பந்தத்தின் சாரம். ஒப்பந்தப்படியே, புதுச்சேரிக்குச் சமீபத்தில் உள்ள கீழூர் என்ற இடத்தில், பிரெஞ்சு இந்திய முனிஸிபல் கவுன்ஸிலர்களும், தேர்தலில் வந்த பிரெஞ்சு இந்திய அசெம்பிளி அங்கத்தினர்களும் இந்த அக்டோபர் 18-ஆம் தேதி கூடினார்கள். சுமார் 180 அங்கத்தினர்கள். அவர்களில் ஏழெட்டுப் பேர் வரவில்லை. வந்தவர்களில் எட்டுப் பேரைத் தவிர மற்ற அனைவரும் ஒரே முகமாக இந்திய யூனியனில் பிரெஞ்சுத் திட்டுக்கள் சேரவேண்டும் என்று தீர்மானித்துவிட்டார்கள். இந்தத் தீர்மானத்தை மக்களின் விருப்பமாக மதித்து, உடனடியாகப் பிரெஞ்சு சர்க்கார் நடவடிக்கை எடுத்து இந்தியாவோடு ஓர் ஏற்பாட்டுக்கு வந்திருக்கிறது. நவம்பர் 1-ஆம் தேதி முதல் பிரெஞ்சுப் பகுதிகளின் மக்களும் (சட்டப்படி இல்லாவிட்டாலும் உண்மையில்) இந்தியப் பிரஜைகள் ஆகிவிடுகிறார்கள். சட்டப்படி மாறுதல்கள் செய்யச் சிறிது காலம் ஆகும்.

* * *

ஹைதராபாதிலிருந்து காஜிப்பேட்டைக்குச் செல்லும் பாதையில் செப்டம்பர் மாத இறுதியில் நிகழ்ந்த ரெயில் விபத்து மிகவும் பயங்கரமானது. கர்டர் பாலம் ஒன்றின்மீது பிரயாணி வண்டி ஒன்று சென்றது. எஞ்சின் மறு கரைக்குப் போய்விட்டது. இதற்கிடையில் பாலம் இடிந்தது. ஐந்து காரியேஜுகள் அப்படியே ஆற்றில் விழுந்தன. பூகம்பம் போல எஞ்சின் குலுங்கவே, டிரைவர் பிரேக் போட்டார். பிறகு ஒரே அழுகைக் குரலும் கூச்சலுந்தான். நூற்றுமுப்பது பிரயாணிகளுக்கு மேல் மரணம் அடைந்துவிட்டார்கள். பல சடலங்கள் அகப்படவேயில்லை. இந்த மாதிரி பரிதாபமான ரெயில் விபத்துக்கள் நேரவே நேராதபடி முன்னெச்சரிக்கையான சகல ஏற்பாடுகளையும் கைக்கொள்ளுவது சர்க்காரின் கடமையாகும்.

உலகெங்கும் பெரிய தண்ணீர்ப் பஞ்சம் வரப்போகிறது என்பது நிபுணர்கள் கருத்து; சமாளிக்க என்ன வழி?

# தண்ணீர்த் தட்டு

**கே. எஸ். மகுதூம் முஹையதீன்**

மனிதனின் வாழ்க்கையும் நாகரிகமும் முன்னேற்றமும் போதுமான அளவு தண்ணீர் கிடைப்பதைப் பொறுத்திருக்கின்றன. குடிக்கவும் குளிக்கவும் வீட்டு வேலைகளுக்கும் விவசாயத்துக்கும் மற்றும் தொழிற்சாலைகளில் ஏராளமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கும் நீர் அவசியம். சாதாரணமாக ஒரு மனிதன், ஆண்டு ஒன்றுக்குக் குடிப்பதற்காக 200 காலன் தண்ணீரும் துணி துவைப்பது, சமைப்பது முதலிய காரியங்களுக்குச் சுமார் 15,000 காலன் நீரும் செலவழிக்கிறான். இதை விடப் பல மடங்கு அதிகமாகத் தொழிற்சாலைகளுக்கும் நீர்ப்பாசனத்துக்கும் தண்ணீர் தேவைப்படுகிறது. மக்கள் தொகை அதிகரிப்பதனாலும் புதுப்புது நீர்ப்பாசனத் திட்டங்கள் உருவாவதனாலும், வரும் 25 ஆண்டுகளில் இன்று பயிராகும் நிலங்களைவிட இன்னும் 50 சத விகிதம் அதிகமாகப் பயிராகுமாம். அதனால் இன்று செலவழிவதைவிட இன்னும் 35 சதவிகிதம் அதிகமாகத் தண்ணீர் செலவாகுமென்று விஞ்ஞானிகள் கணக்கெடுத்திருக்கிறார்கள்.

பூமியில் முக்கால் பகுதியைக் கடல் சுமந்திருக்கிறது. தினசரி கடலிலிருந்து பல கோடி காலன் நீர் ஆவியாகச் சென்று, வானம் முழுதும் மேகக் கூட்டமாக நிற்கிறது. சூல் கொண்ட இந்த மேகங்கள் மழையாகப் பொழியும்போது, இது முழுவதும் நமக்குக் கிடைத்து விடுவதில்லை. இதில் 75 சத விகிதம் ஆவியாகிறது; மீதியே நிலத்தில் ஓடி ஆறாகிக் கடலில் கலக்கிறது. வானத்திலிருந்து தரையில் விழும் மழைநீர், பூமியின்கீழ் மண்ணுக்குள்ளும் கற்களுக்குள்ளும் இறங்குகிறது. இதனால் பூமியின் ஆழத்தில் நீர்ச் சுனைகளும் ஊற்றுக்களும் ஏராளமாக இருக்கின்றன. இந்த நீரைக் கிணறுகள் வெட்டியும் 'பம்புகள்' மூலமாகவும் மேலே கொண்டு வருகிறார்கள். இப்படிப் பூமியின் ஆழத்திலிருந்து தரைக்குக் கொண்டு வரும் நீர், மனிதனின் அன்றாட வாழ்வுக்கும் நீர்ப்பாசனத்துக்கும் உதவுகிறது. தரையிலிருந்து பூமிக்குள் இறங்கும் நீரின் அளவைவிட, பூமிக்குள்ளிருந்து மேலே கொண்டுவரும் நீரின் அளவு அதிகம். இந்த நிலை இன்னும் பல ஆண்டுகள் நீடித்தால், பூமிக்குள் மறைந்து கிடக்கும் நீர் ஊற்றுக்கள் வற்றிவிடும் என்று விஞ்ஞானிகள் அஞ்சுகிறார்கள்.

இந்த அபாயத்தைத் தடுக்க ஒரு புது முறையைக் கையாளுகிறார்கள். ஒரு தடவை உபயோகித்த நீரை, மறுபடியும் பயன்படுத்துவதே இந்த முறை. விவசாயத்துக்

மூலம்: மணி விளக்கு (தமிழ்: அக்டோபர் '54),
114, அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை-4.

குப் பயன்படும் நீரில் சிறிதளவையே மறுபடியும் உபயோகப்படுத்தலாம். ஆனால் தொழிற்சாலைகளில் பயன்படும் நீரில் பெரும் பகுதியை மறுபடியும் பயன்படுத்தலாம். தொழிற்சாலையில் பல பொருள்களைக் குளிரச் செய்வதற்காகவே ஏராளமான தண்ணீர் பயன்படுகிறது. இந்த நீரைப் பல தடவை யந்திரங்களின் மூலம் மாற்றி மாற்றி உபயோகிக்கிறார்கள். இதற்கும் ஓர் எல்லை உண்டு. இப்படி நீரைத் திரும்பத் திரும்ப யந்திரங்களின் மூலமாகப் பயன்படுத்துவதால், அந்த நீரும் சூடாகிவிடுகிறது. ஆகவே, அது குளிரச் செய்வதற்குப் பயன்படுவதில்லை. மேலும், தொழிற்சாலையிலிருந்து கழியும் நீரில் தீங்கு விளைவிக்கும் ரசாயனப் பொருள்களும் பல கழிவுப் பொருள்களும் கலந்திருக்கின்றன. இந்த நீரோடு மக்கள் சமூகத்திலிருந்து கழியும் நீரும் கலக்கிறது. இந்த நீர் மனிதருக்கும் கால்நடைக்கும் பாதகமானது. இந்த நீரைச் சரியானபடி சுத்தப்படுத்தாவிட்டால், மறுமுறை பயன்படுத்தத் தகுதியற்றதாகிவிடும். ஆகவே, இந்த முறை உரிய பயனைத் தரவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

உலகிலே மக்கள் தொகை நாளுக்கு நாள் பெருகிவருகிறது. விவசாய விருத்தி, தொழில் முன்னேற்றம், விரிந்த அளவில் சுகாதாரத் திட்டம் இவை காரணமாக வருங்காலத்தில் நீரின் தேவை அதிகமாகும். இப்போதே அணைகளையும் நீர்த் தேக்கங்களையும் கட்டிவருகிறார்கள். பூமியில் மழையாகப் பொழியும் நீரில் பெரும் பகுதி நதியில் ஓடிக் கடலில் கலக்கும் என்ற நிச்சயம் எதிர் காலத்தில் இல்லை. அவ்வளவு அதிகமாக ஜனத்தொகை பெருகி வருகிறது. மக்கள் தொகை அதிகரித்து, நதியின் நீரை அதிக அளவு அவர்கள் உபயோகத்துக்கு எடுத்துக்கொண்டார்களானால், மிகக் குறைந்த அளவு நீரே கடலோடு கலக்கும். தண்ணீர் நெருக்கடியைச் சமாளிக்க நீரிலுள்ள கெட்ட பொருள்களை நீக்குவது, பயன்பட்ட நீரை மறுபடியும் பயன்படுத்தத் தகுதியுடையதாக்குவது, நீர்ச்சாதனங்களை ஒழுங்குபடுத்துவது, நீரூற்றுக்களை விருத்தி செய்வது, நீர் நிலையங்கள் கட்டுவது இந்த முயற்சிகளையெல்லாம் இனி நாம் மேற்கொள்ளவேண்டும். இவற்றுக்குத் தேவைப்படும் மின்சாரத்தின் செலவு அதிகமாகும். அதனால், தண்ணீருக்கும் விலை வைக்க நேரிடும். அப்போது ஒவ்வொரு காலன் நீரையும் சேமித்து, ஆவியாகிறவரைக்கும் மக்கள் பயன்படுத்தினால் வியப்பில்லை.

இந்தப் பிரச்னையைத் தீர்க்க, பரந்து விரிந்த நீலக் கடலை எளிதில் சுட்டிக்காட்டி விடலாம். ஆனால் கடல்நீர், மனிதனுக்கும் பிராணிக்கும் விவசாயத்துக்கும் நேரடியாகப் பயன்படாது. கடல்நீர், பொருள்களை அரிக்கும் தன்மை உடையது. தொழிற்சாலைகளில் அதைப் பயன்படுத்துவது சிக்கனமல்ல. கடலிலிருந்து உப்பை விலக்குவதன் மூலம் ஏராளமான நல்ல நீரைப் பெற முடியும். இதற்கு மின்சாரம் அதிகமாகத் தேவையாகும்; செலவும் அதிகமாகும். கடல் நீரிலிருந்து தயாரிக்கும் நல்ல நீரின் விலை, மற்ற நீரின் விலையை விட அதிகமாகிவிடும்.

மனித சமுதாயம், உலகில் எத்தனையோ நெருக்கடிகளையும், பஞ்

சங்களையும் சமாளித்திருக்கிறது. தேவை ஏற்படும்போது, முயற்சியும் உழைப்பும் மனிதனிடத்திலே பிறந்துவிடுகின்றன. அவனுடைய திறமையும் அறிவும் அவனுக்குப் பக்கபலமாகத் துணை நிற்கின்றன. எதிர் காலத்தில் எப்படிப்பட்ட தண்ணீர்ப் பஞ்சம் வந்தாலும், கடல் நீரைச் சுத்தப்படுத்தும் நிலையங்களை நிறுவலாம்; அதிலிருந்து உப்பு, மக்னீஷியம், காஸ்டிக் சோடா, ஜலவாயு, மற்றும் ரசாயனப் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதன் மூலம், கடல் நீரிலிருந்து உப்பைப் பிரிக்கும் செலவைக் கணிசமாகக் குறைக்க முடியும். அப்போது நீலத்திரைக் கடல், மானிட சமுதாயத்துக்கு, நீரை வழங்கும் வற்றாத ஊற்றாக விளங்கலாம்.

## மிகைபடக் கூறல்

எதைச் சொன்னாலும் மிகைப்படுத்தியே சொல்வது கர்னல் டேவிஸ் என்பவரின் வழக்கம். ஒரு நாள் சில நண்பர்களிடம், "எனக்கு இந்த எக்ஸ்பிரஸ் ரெயில் வண்டியோடு போட்டி போடுவதென்றால் வெகு பிரியம். தினந்தோறும், குதிரைப் பந்தய மைதானத்தில் என் குதிரைமீது சவாரி செய்துகொண்டு, வடக்குக் கோடியிலிருந்து தெற்குக் கோடி வரைக்கும் எக்ஸ்பிரஸ் வண்டியோடு ஓடுவேன். இந்தப் பந்தயத்தில் ஒவ்வொரு தடவையும் என் குதிரைதான் ஜயிக்கிறது" என்று கர்னல் சொன்னார். ஒரு நண்பர் இதை நம்பவில்லை. "இது உங்கள் குதிரையால் முடியவே முடியாது. முடியுமென்று ரூபிப்பீர்களா? நூறு டாலர் பணயம் வைக்கிறேன்" என்று பந்தயம் போட்டார். "இதற்கு நான் சாட்சி" என்றார் இன்னொருவர்.

கர்னல் ஒரு கனவான் இல்லையா? பந்தயத்துக்கு ஒப்புக்கொண்டார்.

மறுநாள் காலையில் சந்தேகப் பேர்வழியும் சாட்சியும் கர்னலின் வீட்டுக்குப் போனார்கள். "கர்னல் இருக்கிறாரா?" என்று விசாரித்தார்கள்.

"இல்லீங்களே. அவர் இப்பத்தான் வாஷிங்டன் நகரிலிருந்து டெலிபோன் செய்தார். ஏதோ சர்க்கார் வேலையாக அங்கே போயிருக்கிறார்" என்றான் வேலையாள்.

"என்னது! இதற்குள் அங்கே போயிருக்க முடியாது. எந்த ரெயில் வண்டியும் இவ்வளவு சீக்கிரம் போயிருக்க முடியாது!" என்றார் சந்தேகப் பேர்வழி.

"இல்லீங்க. அவர் ரெயில் வண்டியிலே போகல்லியாம். குதிரையிலே சவாரி பண்ணியபடி போயிட்டாராம்" என்று அமைதியாகப் பதில் சொன்னான் ஆள்.

—'ஹார்னெட் கண்ட்ரி நியூஸ்'

நம் இடையே உள்ள இந்தக் கலைச்செல்வத்தை எத்தனை பேர் கண்டிருக்கிறோம்?

# சித்தன்னவாசல் சித்திரங்கள்

டி. எஸ். ஜனககுமாரி

தமிழ் நாட்டின் அஜந்தா சித்தன்னவாசல். அது புதுக்கோட்டைக்கு மேற்கே சுமார் 10 மைல் தூரத்தில் இருக்கிறது. இன்றைக்கு ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னாலே எழுதிய அபூர்வமான சித்திரங்களை அங்கே கண்டு மகிழலாம்.

சித்தன்னவாசல் குகைக் கோயில் சிறியதுதான். உள்ளே சதுரமான ஓர் அறை இருக்கிறது. வெளியே நீண்ட தாழ்வாரம் இருக்கிறது. கோயில் முழுவதையுமே கருங்கல் மலையிலே குடைந்திருக்கிறார்கள். உள்ளே நுழைந்ததும் மேல் விதானத்தைப் பார்த்தால், அங்கே ஒரு தடாகம் சித்திரித்திருப்பதைக் காணலாம். இந்தத் தடாகத்தில் இயற்கையைப் பழிக்கும் தாமரை மலர்களும் மொட்டுக்களும் கொடிகளும் இலைகளும் அல்லி செங்கழுநீர் மலர்களும் அவற்றின் மொட்டுக்களும் இலைகளும் கொடிகளும் ஏற்ற வர்ணங்களில் தீட்டியிருக்கிறார்கள். அங்கங்கே விரியும் மலர்களையும் அவற்றின் இதழ்களின் ரேகைகளையும் மிக மிக நுட்பமாகக் காட்டியிருக்கிறார்கள். இந்தத் தாமரைத் தடாகத்தில் பலவகை வெண்மீன்களும் மகரமும் ஊடுருவிச் செல்கின்றன. அன்னம் போன்ற பறவைகள் ஆணும் பெண்ணுமாகப் பலவாறு தம்தம் குஞ்சுகளுடன் ஜோடி ஜோடியாக உலவி மகிழ்கின்றன. யானைகளும் மாடுகளும் நீரைக் கலக்கிக் களிநடம் புரிகின்றன. புதுப்புனல் குடையும் ஆடவர் சிலரையும் அங்கே கண்டு மகிழ்கிறோம்.

கி. பி. 640 முதல் கி. பி. 670 வரை அரசாண்ட புகழ் பெற்ற வீரனும் கலைஞனுமான மன்னன் மகேந்திரவர்மன் குடைந்து கட்டிய கோயில்களில் இது ஒன்றே சமண ஆலயம் ஆகும். சித்திரங்கள் எல்லாம் கல்லின்மேல் சுண்ணாம்பு பூசி, அதன்மேல் என்றும் அழியா வர்ணங்களைக் குழைத்துத் தீட்டியவைதான்.

தாமரைத் தடாகத்தின் ஒரு புறத்தில் கோவணம் தரித்துத் தொள்ளைக் காதுகளுடன் இரண்டு மனிதர்கள் தென்படுகிறார்கள்.



கோயில்

காப்பிரைட்: தமிழ்நாடு (தமிழ்: 15-8-'54), மதுரை.

இவர்களில் ஒருவன் தன் வலக்கையால் தாமரை மலர்களைக் கொய்கிறான். அவனுடைய இடக்கையில் ஒரு பூக்குடலை தொங்குகிறது. மற்றொருவன் தாமரை மலரைக் கொடியுடன் எடுத்துக்கொண்டு, வலக் கையை நீட்டி, ஆள் காட்டி விரலையும் சுண்டு விரலையும் நீட்டி, மற்ற விரல்களை மடக்கி முத்திரையிட்டுக் காட்டுகிறான். ஒருவனுடைய நிறம் சிவப்பு; மற்றவனுடைய நிறம் கிச்சிலி. தடாகத்தின் மற்றொரு புறத்தில் இதே மாதிரி மூன்றாவது மனிதன் ஒருவனும் இருக்கிறான். இவனுடைய வர்ணமும் கிச்சிலியே. இந்த மூன்று பேரின் உருவ வனப்பு, இவர்கள் லாகவமாக நிற்கும் நிலை, மேனி வடிவம், கண்களின் பார்வை, பிடரியளவுள்ள கரிய தலைமயிர், நடுவில் வகிர்ந்திருக்கும் ஒழுங்கு இவை எல்லாம் நம் உள்ளத்தை ஒருங்கே கவர்கின்றன.

தாழ்வாரத்துப் பக்கச் சுவர்களிலே இரண்டு சிலைகள் இருக்கின்றன. வடக்கே பார்த்து இருப்பவர், பார்சுவநாதர். ஜைன தீர்த்தங்கரர் 24 பேர்களில் இவரும் ஒருவர். தலைமீது படம் எடுத்த நாகம் விரிந்து குடை பிடிக்கிறது. தென்புறம் இருப்பவர் ஜைன குரு ஆசாரியர். சாதாரணக் குடையே இவர் தலைக்குமேல் இருக்கிறது. இருவரும் அர்த்த பத்மாசனத்திலே தியானத்தில் அமர்ந்திருக்கிறார்கள்.

அர்த்த மண்டபத்தின் முகப்பிலே தென்புறம் நிற்கும் தூணின் மேல் சதுரத்தில், சிறந்த ஓவியத்தைக் காணலாம். வடபுறத்திலே ஒரு நடன மாதைப் பார்க்கிறோம். அவளுடைய அங்கங்களிலேதான்



அரசர்

என்ன குழைவு! கண்களிலேதான் என்ன கவர்ச்சி! அணிகளிலேதான் என்ன வியப்பு! ரோஜா வர்ண உடல் அழகும், கருங்கூந்தலிலே தாமரை செருகியிருக்கும் நேர்த்தியும், நம் உள்ளத்தைத் தட்டியெழுப்புகின்றன. நிருத்தம் செய்யும் இவள், தன் இடதுபுஜத்தைக் கஜஹஸ்த நிலையில் உடலுக்குக் குறுக்கே தொங்கவிட்டு, தன் வலது கையை மடக்கி அந்தக் கையால் அழகுபெற அபய முத்திரை காட்டுகிறாள். மற்றொரு நாட்டியக்காரி நிருத்தத்தில் இடது புஜத்தை ரேசிதமாக நீட்டி, வலது புஜத்தை மடக்கி, அந்தக் கையால் அபய முத்திரை காட்டி, உடலை லாகவமாக வளைத்து நிற்கிறாள். இந்த இரண்டு நடிகளும் நாட்டியக் கச்சணிந்து பல அணிகலன்களை அணிந்திருக்கிறார்கள். கைகளில் வளையல்கள், காப்புகள், முழங்கைக்கு மேல் கடகம், கழுத்தில் பலவித மணிமாலைகள், காதுகளில் ஓலைகள் (பத்ரகுண்டலங்கள்), கொண்டையிட்ட கூந்த

வில் தாமரை, தழை மடல்கள், சுட்டி முதலிய அணிகள் துலங்குகின்றன. பொன்னிறமான மேனியின் அழகு, குறுகிய இடை, உடலின் பாங்கு, சர்ப்பங்களைப் போல நெளியும் கரங்கள், கண்களின் ஒளி இவை யாவும் ஒருங்கே பொருந்தி 'ஜீவகளை' ததும்பும் இந்தக் கணிகைகள், காவியங்களில் வரும் 'அப்ஸரஸ்' என்ற தேவகன்னிகைகளையே நினைவூட்டுகிறார்கள்.

அடுத்த தூணைப் பார்த்தால், அங்கே காட்சி கொடுக்க மகேந்திரவர்மனே காத்து நிற்கிறான். அவன் பெரிய வீரன், கலாரசிகன், கவிஞன், மத்த விலாச நாடகாசிரியன், சித்திரப்புலி என்றெல்லாம் படித்திருக்கிறோம். அவனுடைய கம்பீரம் அவனுடைய மகுடத்திலேயே தெரிகிறது; முகத்திலே 'வீர'க்களை ஜொலிக்கிறது. 'நான் செய்த இந்தப் பணியை என்றென்றும் எல்லாரும் போற்றிப் பாராட்டுவார்கள்' என்ற திருப்தியை அவன் கண்களிலே காண்கிறோம். கலைக்கண் கொண்டு மிகவும் நிதானமாகக் காண வேண்டும் மகேந்திரவர்மனை!

ஜைனர்கள் கற்பனை செய்துள்ள தெய்வலோகக் காட்சியை, நாம் உள்ளே போனதுமே கண்டு களிக்கலாம். கம்பளம் விரித்தாற்போல் இருக்கும் சித்திரம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது.

இந்தச் சித்திரங்கள் வரைந்திருக்கும் இடங்களில் கல்லின் மேற்பரப்பைச் சமமாகப் பொளிந்து, அதன்மேல் சுண்ணம்புச் சாந்து தீட்டி, வெண் சுண்ணம்புப் பூச்சுப் பூசி, வழவழப்பாகத் தேய்த்து, அது காய்வதற்குமுன் சித்திரங்களின் ரேகைகளையும் வர்ணங்களையும் தீட்டியிருக்கிறார்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இப்படித் தீட்டும் சித்திரங்களுக்கு 'ஃப்ரெஸ்கோஸ்' (Frescoes) என்று ஆங்கிலத்தில் சொல்லுவார்கள். இங்கே உபயோகித்திருக்கும் வர்ணங்கள் எல்லாம் கனிப்பொருள்களே; தாவரப் பொருள்கள் அல்ல. உபயோகித்துள்ள வர்ணங்கள் கறுப்பு, மஞ்சள், பச்சை, கிச்சிலி, சிவப்பு, நீலம், வெள்ளை இவைகளே. இத்தாலி தேசத்தில் இந்தச் சித்திர வேலை தோன்றுவதற்கு வெகு காலத்துக்கு முன்பே இது நம் நாட்டில் வழங்கி வந்தது என்பதை அஜந்தா, சிகிரியா முதலிய இடங்களில் இன்றுள்ள அற்புதச் சித்திரங்களும், வடமொழி நூலிலுள்ள ஆராய்ச்சிக் குறிப்புகளும் தெளிவாக்குகின்றன. மணிமேகலை இரண்டாம் காதை 31-ஆம் அடியிலே குறிப்பிட்டிருக்கும் 'ஓவியச் செந்நூல்' என்ற பதத்திலிருந்து இந்தப் பெயருள்ள நூல் ஒன்றைத் தமிழர் கையாண்டார்கள் என்பது தெளிவாக விளங்கும்.



நாட்டியக்காரி



தாழ்வாரம்

சுண்ணம் தீட்டிய சுவரில் ஓவியம் வரையும் வழக்கம், தமிழ் நாட்டில் ஏழாம் நூற்றாண்டுக்கு முன்பே இருந்தது என்பது மணிமேகலை மூன்றும் காதை (129—131) அடிகளிலிருந்து விளங்கும்.

எவ்வகை உயிர்களும்
உவமங் காட்டி
வெண்சுதை விளகத்து
வித்தகர் இயற்றிய
கண்கவர் ஓவியங்
கண்டு....

என்பவையே அந்த அடிகள். 'ஓவியக் கலையில் கைதேர்ந்த ஓவியர்களால், சிருஷ்டியிலுள்ள எல்லாப் பொருள்களும், வெண் சுண்ணம் தீட்டப்பெற்ற சமமான பரப்பிலே கண் கவரும்படி இயற்றப் பெற்றன' என்று இதற்குப் பொருள்.

இங்கே உள்ள சித்திரங்களை எல்லாம் ஓவிய லட்சணங்கள் அமைய இயற்கைப் பிராணிகளையும் மனித உருவங்களையும் கற்பித்து வரைந்துள்ள ஓவியர்கள், 'மணிமேகலை'யில் குறிப்பிட்டுள்ள 'வரந்தர எழுதிய ஓவிய் மாக்களே' ஆவார் என்பதில் என்ன சந்தேகம்?

## உபசாரம்

சட்ட சபைத் தேர்தலுக்கு நின்று தோற்றுப்போன ஒருவர், பெருந்தன்மையோடு நடந்துகொள்ள எண்ணினர். தம்மைத் தோற்கடித்தவருக்குப் பாராட்டுத் தந்தி அடிப்பதற்காக, டெலிபோனில் தந்தி ஆபீஸைக் கூப்பிட்டார். "உங்களுடைய அமோகமான வெற்றிக்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனி உங்களுக்கு என் மனப்பூர்வமான ஆதரவை அளிக்கிறேன்" என்று தந்தி அடிக்கும் பெண்ணிடம் சொன்னர். ஒரு நிமிஷம் மௌனமாயிருந்தார். பிறகு, மகா வேதனையோடு, "வேண்டாம், அம்மா! வேண்டாம். அதை எனக்குத் திருப்பிப் படித்துக் காட்டாதே! என்னல் அதைத் தாங்க முடியாது" என்றார்.

—'காப்பர்ஸ் வீக்லி'

## உயர்ந்த இன்பம்

அறிய முடிந்ததை அறிவது; அறிய முடியாததை அமைதியாய்ப் போற்றி வணங்குவது - இவைதான் அறிவு படைத்த மனிதனுக்கு மிக உன்னத இன்பம் அளிப்பவை.

—கதே

வேத காலத்து ரிஷி அல்ல இது.
பழங்கால அரசரின் வாகனம்.

# அத்திரி

மயிலை-சீனி. வேங்கடசாமி



அத்திரி என்றால் கோவேறு கழுதை என்பது பொருள். சங்க நூல்கள். அத்திரி (கோவேறு கழுதை)பற்றிச் சில இடங்களில் கூறுகின்றன.

கோவேறு கழுதை வெளி நாடுகளிலிருந்து இந்திய நாட்டுக்கு இறக்குமதியான விலங்கு. எல்லா விலங்குகளும் எல்லா நாட்டிலேயும் ஆதியில் உண்டாகவில்லை; சில விலங்குகள் சில இடங்களிலேதான் தோன்றின. மனிதன் நாகரிகம் பெற்று நாடு விட்டு நாடு சென்ற காலத்தில், இந்த விலங்குகளையும் வெவ்வேறு நாடுகளுக்குக் கொண்டு போனான். ஐரோப்பாக் கண்டத்தில் ஆதிகாலத்திலே, குதிரை இல்லை. இந்த விலங்கு பிற்காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து அங்கே போயிற்று. அதுபோலவே, இந்தியாவில் ஆதிகாலத்திலே குதிரையும் பசுவும் இல்லை; எருமை இருந்தது. பிற்காலத்திலேதான் குதிரையும் பசுவும் இந்தியாவுக்கு வந்தன. அமெரிக்காக் கண்டத்தில், ஐரோப்பியர் போவதற்கு முன்பு பைசன் என்னும் எருமையும், லாமா என்னும் ஒருவகை ஆடும் தவிர, குதிரை, பசு, நாய் முதலிய பிற விலங்குகள் இல்லை. இவை பிற்காலத்தில் ஐரோப்பாவிலிருந்து அங்கே போயின. ஆஸ்திரேலியாக் கண்டத்தைக் கண்டு பிடித்த காலத்திலே, அங்கே கங்காரு என்னும் விலங்கைத் தவிரப் பிற விலங்குகள் இல்லை. பிற்காலத்தில் ஆடுமாடு, குதிரை, குழிமுயல் முதலியவை அங்கே போயின. இப்போது அங்கே ஆடுமாடுகள் மிகுதியாக இருக்கின்றன. இப்படியே மரம் செடி கொடிகளையும் மனிதன் தான் ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்குக் கொண்டு போய்ப் பயிரிடுகிறான்.

அத்திரி என்னும் கோவேறு கழுதை, குதிரையைப் போலவே வெளிநாட்டு விலங்கு. இதை இந்தியாவுக்கு வெளிநாட்டினர் தான் கொண்டு வந்தார்கள். வெளிநாட்டினர் இதை வாகனமாகக் கொண்டு இதன்மேல் சவாரி செய்தது போலவே, தமிழ் நாட்டினரும் சங்க காலத்திலே

காப்பிரைட்: (செந்தமிழ்ச் செல்வி: தமிழ்), சென்னை-1.

இதை வாகனமாகக் கொண்டிருக்கிறார்கள். சங்க நூல்களிலிருந்து இது புலனாகிறது.

கோவேறு கழுதை, பெண் குதிரைக்கும் ஆண் கழுதைக்கும் பிறந்த கலப்பு விலங்கு என்கிறார்கள். முதல்முதல் இந்தக் கலப்பு விலங்கை உண்டு பண்ணியவர், ஆசியாமைனர் பகுதியைச் சேர்ந்த மிசியா (Mysia) நாட்டினராம். ட்ராய் (Troy) நாட்டு அரசனாகிய பிரியம் மன்னனுக்குக் கோவேறு கழுதைகளைப் பரிசாக மிசியா நாட்டினர் வழங்கினார்களென்றும், அந்த மன்னன் கோவேறு கழுதைகளைப் பூட்டிய தேரில் ஏறி உலாச் சென்றான் என்றும், ஐரோப்பாக் கண்டத்தின் முதல் காவியமாகிய 'இலீயத்' (Iliad) மூலம் அறிகிறோம். கோவேறு கழுதை உடல் உரம் கொண்டது; உழைப்பில் சிறந்தது. இது ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு மணி நேரத்துக்கு மேல் தூங்குவதில்லையாம். முன் காலத்தில், யவனர்கள் (கிரேக்கரும் உரோமரும்) வண்டி இழுக்கவும் பொதி சுமக்கவும் இதைப் பயன்படுத்தி வந்தார்கள். இப்போது ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டங்களில் கோவேறு கழுதைகளை உண்டாக்குகிறார்கள்.

இந்தக் காலத்தில் தமிழர் கோவேறு கழுதையைப் பயன்படுத்துவதில்லை. சங்க காலத்திலே, அதாவது கி. பி. 300-க்கு முற்பட்ட காலத்திலே, அரசரும் சிற்றரசரும் செல்வர்களும் கோவேறு கழுதையைப் பெருமையுடன் பயன்படுத்தி வந்தார்கள். இதில் சவாரி செய்வதைப் பெருமையுடைய நாகரிகச் செயலாக அந்தக் காலத்துத் தமிழர் கருதினார்கள். செல்வர்களும் சிற்றரசரும் பேரரசரும் இதை மதித்துப் போற்றியபடியால் தான், இதற்குக் 'கோவேறு கழுதை' என்னும் பெயர் வந்தது. 'கோவேறு கழுதை' என்றால், 'அரசர் சவாரி செய்யும் கழுதை' என்று பொருள். சிலப்பதிகார உரையாசிரியரான அடியார்க்கு நல்லார், இதை 'இராசவாகனமாகிய அத்திரி' என்று கூறியிருக்கிறார்.

> தேரும் யானையும்
> குதிரையும் பிறவும்
> ஊர்ந்தனர் இயங்கலும்
> உரியரேன்ப

என்பது தொல்காப்பியம் (பொருளதிகாரம், பொருளியல் 18-ஆம் சூத்திரம்). தலைமகனாகிய காதலன் தலைவியாகிய தன் காதலியைக் காணச் செல்லும்போது தேர், யானை, குதிரை முதலிய வாகனங்களில் ஏறிச் செல்வதும் உண்டு என்று கூறுவது இந்தச் சூத்திரம். இதில் 'பிறவும்' என்னும் சொல்லுக்கு, உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர், 'பிறவாவன கோவேறு கழுதையும் சிவிகையும் முதலியனவாம்' என்று விளக்கம் கூறுகிறார்.

சிலப்பதிகாரக் காவியத் தலைவனான கோவலன், செல்வனாகிய மாசாத்துவான் என்பவனுடைய அருமந்த மகன். மாசாத்துவான், சோழ மன்னனுக்கு அடுத்தபடியாக மதிக்கத் தக்க பெருஞ் செல்வம் வாய்ந்தவன். இந்தச் செல்வனுடைய ஒரே மகனான கோவலன், அந்தக் காலத்து நாகரிக முறைப்படி சிறப்பாக வாழ்ந்தான். புகார் நகரத்து நாகரிக நங்கையாகிய மாதவியுடன் இந்திர விழாவின் முடிவில் கடலாட்ச் சென்ற

கோவலன், தன் செல்வத்தின் வளப்பத்தையும் நாகரிகத்தின் சிறப்பையும் ஊரார் கண்டு வியக்கும்படி அத்திரி, அதாவது கோவேறு கழுதை ஏறிச் சென்ருன் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இதை விளக்கும்போது தான், மேலே காட்டியபடி அடியார்க்கு நல்லார் 'இராசவாகனமாகிய அத்திரி' என்று உரை எழுதியிருக்கிருர்.

'நெடுவேள் மார்பில் ஆரம்போல' என்னும் தொடக்கத்தையுடைய அகப்பாட்டு (120) நக்கீரர் பாடியது. அதில்,

கழிச்சுற எறிந்த
புட்டாள் அத்திரி
நெடுநீர் இருங்கழிப்
பரிமெலிந் தசைஇ
வல்வில் இளையரோ
டெல்லிச் செல்லாது
சேந்தனை செலினே
சிதைதுவ துண்டோ?

என வரும் அடிகள், தலைமகன் அத்திரி ஊர்ந்து சென்று தலைமகளைக் கண்ட செய்தியைக் கூறுகின்றன. சேந்தன் கண்ணனுர் பாடிய அகம் 350-ஆம் பாட்டில்,

கோடுநுக நுழைந்த
கணைக்கா லத்திரி
வடிமணி நெடுந்தேர்
பூண வேலா
தேந்தெழில் மழைக்கண்
இவள்துறை யாகச்
சேந்தனை சென்மோ
பெருநீர்ச் சேர்ப்ப

என வரும் அடிகளால், கோவேறு கழுதை பூட்டிய தேர் ஊர்ந்து தலைமகன் தலைமகளைக் காணச் சென்ற செய்தியை அறிகிருேம். நற்றிணையில் உலோச்சனுர் பாடிய 278-ஆம் செய்யுளில்,

கழிச்சே றடிய
கணைக்கால் அத்திரி
குளம்பினும் சேயிற
வோடுங்கின...

என வரும் அடிகள், தலைமகன் அத்திரி ஊர்ந்து சென்ற செய்தியைக் கூறுகின்றன.

வைகையாற்றின் புதுப்புனல் ஆடக் கூட்டங் கூட்டமாக நகர மக்களில் சிலர், வண்டிகளிலும் பல்லக்குகளிலும் கோவேறு கழுதைகளின் மேலும் ஏறிச் சென்ற செய்தியைப் பரிபாடல் (10-ஆம் பாடல்: வையை) கூறுகிறது:

அகவரும் பாண்டியும்
அத்திரியும் ஆய்மாச்
சகடமுந் தண்டார்ச்
சிவிகையும் பண்ணி
வகைவகை யூழூழ்
கதழ்புழழ்த் தேறி..

வைகையாற்றின் புதுப் புனல் ஆடச் சென்ற நகர மாந்தரில் சிலர் குதிரை, யானை, கோவேறு கழுதை இவைகள்மீது ஊர்ந்து சென்று வைகைக் கரையில் உள்ள சோலையில் தங்கினர் என்று பரிபாடல் 22-ஆம் பாடல் கூறுகிறது:

செறிவினைப் பொலிந்த
செம்பூங் கண்ணியர்
சீரமை வெட்சி
இதழ்புனை கோதையர்
தார்ரர் முடியர்
தகைகெழு மார்பினர்
மாவுங் களிறு
மணியணி வேசரி
காவு நிறையக்
கரைநெரி பீண்டி.

இதில் வரும் 'வேசரி' என்ற சொல் கோவேறு கழுதையின் இன்னொரு பெயராகும்.

தமிழ் நாட்டில் மட்டும் அல்ல, வட இந்தியாவிலும் முன் காலத்தில் அத்திரியாகிய கோவேறு கழுதையை வாகனமாகப் பயன்படுத்தியிருக்கிறார்கள். அவர்கள் அத்திரியை 'அச்வதரி' என்று அழைத்தார்கள் என்று தெரிகிறது.

வேத அகராதி என்று ஓர் அகராதி உண்டு. இது கிறிஸ்துவரின் விவிலிய வேதத்தைப்பற்றிய அகராதி. இது பவர் ஐயர் என்று வழங்கும் ஹென்றி பவர் எழுதியது; 1841-இல் அச்சானது. இந்த நூல் கோவேறு கழுதையைப் பற்றி இப்படிக் கூறுகிறது:

'கோவேறு கழுதை: இது குதிரையுங் கழுதையுஞ் சேர்ந்து பிறக்கிறபடியினாலே இந்த இரண்டினுடைய வடிவு முதலிய குணங்களுடையதாயிருக்கும். இது மிகவும் பெலனும் வீரமும் விரைவுமுள்ளது. பாரமான சுமைகளைச் சுமந்துகொண்டு எந்த மலைகளின் மேலும் ஏறிப்போகும். எபிரேயர் அநேகங் கோவேறு கழுதைகளை வைத்திருந்தார்கள். தாவீதும் அவனுடைய குமாரர்களும் கோவேறு கழுதைகளின்மேல் ஏறிக்கொண்டு போய்வந்தார்கள்.'

## நவீன மனத்தத்துவம்

அநாதையாயிருப்பது ஆபத்து; ஒரே குழந்தையாயிருப்பது அபாயம்; வாலிபனாயிருப்பது தொல்லை; நடுத்தர வயதினனாயிருப்பது வேதனை; கிழவனாயிருப்பது கஷ்டம்— இப்படியெல்லாம் சொல்லுகிறார்கள் நவீன மனத்தத்துவ சாஸ்திரிகள். இதையெல்லாம் பார்க்கும்பொது, ஒரே வழி உண்டென்று தோன்றுகிறது; அதாவது, பிறக்கும்போதே வயதுவந்த ஆளாகப் பிறந்தால்தான் விமோசனம் உண்டு.

—'சிக்காகோ நியூஸ்'

## விருந்தாளி

நாட்டுப்புறத்தான் ஒருவன், நகரத்து உறவினன் ஒருவன் வீட்டுக்கு விருந்தாளியாகச் சென்றான். நகரத்துத் தம்பதிகள் மிக்க அன்புடன் அவனை உபசரித்தார்கள்.

நாட்டுப்புறத்தானுக்கு இந்த உபசாரம் மிகுந்த ஆனந்தமாயிருந்தது. பலநாள் வரைக்கும் இங்கேயே தங்கிவிட்டான். நகரத்துத் தம்பதிகளுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

கடைசியில் ஒரு நாள் நகரத்தான் தலுக்காக, "ஆமாம். இத்தனை நாளாக உன்னைக் காணாமல் உன் மனைவியும் மக்களும் வருத்தப்பட மாட்டார்களா?" என்று கேட்டான்.

"ஆஹாஹா! மறந்தே போனேன். நல்ல வேளையாக ஞாபகப்படுத்தினாயே. இதோ அவர்களுக்குக் கடிதம் போட்டு விடுகிறேன், உடனே வரச் சொல்லி" என்றான் விருந்தாளி.

—'ஃப்ரீ இந்தியா', சென்னை.



# ஞானம் அருளிய குழந்தை

நந்தகோபன் வீட்டில் யசோதையின் மகனாகவே பகவான் வளர்ந்து வந்தார். குழந்தைக்குக் 'கிருஷ்ணன்' என்று பெயரிட்டார்கள். சகடாசுரன், திருணவர்த்தன், பூதனை முதலியோரைப் பகவான் தாம் சிறு குழந்தையாக இருக்கும்போதே கொன்றுவிட்டார். இது எல்லாருக்கும் ஆச்சரியமாக இருந்தது. இப்படியே அழகிய சிறு பையனாக வளர்ந்தார். அப்போது யாதவச் சிறுவர்களுடன் கன்று மேய்க்கப்போனார். அங்கே வத்ஸாசுரன், பகாசுரன், மலைப்பாம்பு வடிவங் கொண்ட அகாசுரன் இவர்களை யெல்லாம் கொன்றார்.

ஒருநாள் மாடு மேய்க்கும் அந்தச் சிறுவர்களை அழைத்துக்கொண்டு யமுனையில் ஒரு மணல் திட்டுக்குப் போனார். அவர்களைப் பார்த்து, "நண்பர்களே, இந்த இடம் எவ்வளவு அழகாக இருக்கிறது! தாமரைப் பூக்கள் மலர்ந்திருக்கின்றன. அதன் இனிய மணமும் அதில் மொய்க்கும் வண்டுகளின் ரீங்காரமும் எவ்வளவு இனிமையாக இருக்கின்றன! பசி எடுக்கிறது. இங்கேயே சாப்பிடலாம், வாருங்கள். கன்றுகள் நீர்குடித்துவிட்டு இங்கே மேய்ந்துகொண்டிருக்கட்டும்" என்றார்.

மற்றச் சிறுவர்களும் அப்படியே செய்வதென்று தீர்மானித்தார்கள். கன்றுகளுக்குத் தண்ணீர் காட்டிப் பசும்புல் அடர்ந்த இடத்தில் ஓட்டிவிட்டார்கள். பிறகு, உறி கட்டி எடுத்து வந்த சோற்று மூட்டையைப் பிரித்துச் சாப்பிடலானார்கள். நடுவில் கிருஷ்ணர் உட்கார்ந்தார். மற்றவர்கள் அவரைச் சுற்றி இருந்தார்கள். அந்தக் காட்சி, மலர்ந்த தாமரைபோல் இருந்தது; யாதவச் சிறுவர்கள் அதன் இதழ்கள் மாதிரியும் கிருஷ்ணர் அதன் நடுவே இருக்கும் கர்ணிகை மாதிரியும் விளங்கினார்கள். சிலர் பூக்களிலும், சிலர் இலைகளிலும், சிலர் பழங்களிலும், சிலர் மரப்பட்டைகளிலும், சிலர் கல்லின்மேலும் வைத்துக்கொண்டு உணவைச் சாப்பிட்டார்கள். அவ



**பாகவதத்தில் முக்கியமான பகுதி தசமஸ்கந்தம். அது கிருஷ்ண பகவானின் லீலைகளைச் சொல்லுவது.**

ரவர் தம் தம் சோற்றின் ருசியைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லிச் சிரித்துக்கொண்டும் அவர்களைச் சிரிக்க வைத்துக்கொண்டும் கிருஷ்ணருடன் சாப்பிட்டார்கள். அவர் தம் இடுப்பில் புல்லாங்குழலைச் செருகி அக்குளில் பிரம்பை இடுக்கிக்கொண்டு இடது கையில் சோற்றை வைத்து, வலது கையால் சாப்பிடுவதைத் தேவர்கள் பார்த்து வியந்தார்கள்.

இப்படி இருக்கும்போது புல்லை மேய்ந்துகொண்டிருந்த கன்றுகள் வெகுதூரம் போய் எங்கோ கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துவிட்டன. இதைப் பார்த்ததும் யாதவச் சிறுவர்கள் பயந்துவிட்டார்கள். கிருஷ்ணர், "பயப்படாதீர்கள்! இங்கேயே சாப்பிட்டுக்கொண்டிருங்கள். நான் போய்க் கன்றுகளை இங்கே அழைத்து வருகிறேன்" என்று சொல்லிக் கையில் இருந்த சோற்றோடு ஓடினார். கன்றுகளை மலைகளிலும் குகைகளிலும் தேடினார்.

இதற்கிடையில் பிரம்மா, பகவானுடைய பெருமையைக் கண்டு களிக்க விரும்பினார். அந்தக் கன்றுகளையும் யாதவச் சிறுவர்களையும் எங்கேயோ மறைத்துவிட்டார். கிருஷ்ணர் எவ்வளவு தேடிப் பார்த்தும் கன்றுகளைக் காணவில்லை. திரும்பி வந்து மணல் திட்டில் பார்த்தார்; நண்பர்களையும் காணவில்லை. அப்போது பகவானுகிய அவருக்கு இது பிரம்மாவின் செயல் என்று தெரிந்துவிட்டது.

உடனே பகவான் தம் மாயா சக்தியால் தம்மையே அந்த யாதவச் சிறுவர்களாகவும், கன்றுகளாகவும் ஆக்கிக்கொண்டார். அந்த அந்த யாதவச் சிறுவர்களின் புல்லாங்குழல், பிரம்பு, ஆடை, அணி எல்லாவற்றோடும் அப்படி அப்படியே விளங்கினர்; அப்படியே பலவகைக் கன்றுகளாகவும் ஆனர். பிறகு அத்தனை வடிவங்களோடும் புல்லாங்குழல் ஊதிக்கொண்டே போய் அவரவர் வீட்டில் தம் வடிவமான கன்றுகளை மாறுமல் கட்டினர். அந்த

அந்த வீட்டைச் சேர்ந்த யாதவச் சிறுவனாக அவரவர் வீட்டில் நுழைந்தார். குழல் ஓசை கேட்டதும் ஒவ்வொரு தாயும் தன் தன் குழந்தைதான் வந்திருப்பதாக எண்ணி ஓடிவந்து வாரி அணைத்துக்கொண்டாள். அவர்களுக்குப் பால் குடிக்கக் கொடுத்துப் பேரின்பம் அடைந்தார்கள். வீடு திரும்பிய பசுமாடுகள் கொட்டிலுக்கு ஓடின. பகவானுடைய வடிவமான கன்றுகள் பாலூட்டும்படி அந்தப் பசுமாடுகள் தம் மடியைக் காட்டின. பகவான் பசுக்களிடம் அவைகளின் சொந்தக் கன்றுகளைப் போலவே நடந்துகொண்டார். இப்படி ஏறக்குறைய ஒரு வருஷம் ஆயிற்று.

ஒரு நாள் யாதவர்கள் மாடுகளைக் கோவர்த்தன மலையின் மேல் மேய்த்துக்கொண்டிருந்தார்கள். அதன் அடிவாரத்தில் பகவான் தம் வடிவமான யாதவச் சிறுவர்களுடன் கன்றுகளை மேய்த்துக்கொண் டிருந்தார். மலையின் உச்சியில் இருந்த மாடுகள் கீழே கன்றுகளைக் கண்டதும் வாலைத் தூக்கிக்கொண்டு கீழ் நோக்கி ஓடிவந்தன. யாதவர்கள் எவ்வளவு தடுத்தும் அவைகளை நிறுத்த முடியவில்லை. மேடுபள்ளம் ஒன்றையும் கவனிக்காமல் அவை ஒரே தாவாகத் தாவிக் கீழே சென்றன. இது யாதவர்களுக்கே வியப்பாக இருந்தது. இதேபோல் யாதவர்களுக்கும் அவர்கள் மனைவிமாருக்கும் தங்கள் குழந்தைகளிடம் உள்ள அன்பு மிகுதியாயிற்று. ஒரு கணம் அவர்களைப் பிரிந்திருப்பதும் சிரமமாக இருந்தது. இதையெல்லாம் பலராமர் கவனித்தார். 'இது என்ன தேவ மாயையா? அசுரர்களின் மாயையா?' என்று அவர் யோசித்தார். கடைசியில் பகவானுடைய மாயையாகத்தான் இருக்க வேண்டும் என்று தீர்மானித்தார். பிறகு கிருஷ்ணரிடம் போய், "பகவானே, இந்தக் குழந்தைகளும் கன்றுகளும் தேவர்களும் அல்ல; முனிவர்களும் அல்ல. தாங்களே இப்படிப் பல வடிவம் எடுத்திருக்க வேண்டும். தயை செய்து உண்மையைச் சொல்லுங்கள்" என்று கேட்டுக்கொண்டார். பகவான் அவருக்குப் பிரம்மாவின் செயலை எடுத்துச் சொன்னார்.

ஒரு வருஷத்துக்குப் பிறகு பிரம்மா தம் செயலால் கோகுலம் எந்த நிலையில் இருக்கிறது என்று பார்க்க வந்தார். அங்கே ஒரு மாற்றமும் காணவில்லை. முன் போலவே பகவான் தம் நண்பர்களோடு கன்றுகளை மேய்த்துக் கொண்டிருப்பதைக் கண்டார் பிரம்மா. 'நம்முடைய மாயையால் மயங்கி அறிவின்றிக் கிடக்கும் யாதவச் சிறுவர் கன்றுகளுடன் நாம் வைத்த இடத்திலேயே இருக்கிறார்களே! இவர்கள் யார்? இந்தக் காட்சிகளில் எது மாயை? எது உண்மை?' என்று யோசிக்கலானார். தம் மாயையினால் தாமே அறிவிழந்து நின்றார். அப்போது அவர் கண்ணுக்கு யாதவச் சிறுவர்களெல்லாருமே பீதாம்பரம் உடுத்து, நாலு கையோடு சங்கு சக்கரம் முதலியவைகளை ஏந்தி, கிரீட குண்டலங்களுடன் விளங்கும் பகவானாகத் தோன்றினார்கள்.

பிரம்மா உடனே கண் திறந்து நாலு திசையும் பார்த்தார். அழகிய மரங்கள் செறிந்த பிருந்தாவனம் தெரிந்தது. அங்கே பல பிராணிகள் பகைமையை விட்டு அன்புடன் இன்புற்றிருப்பதையும், அங்கே

சிறுவர்கள் தம் கையில் குழலை வைத்துக்கொண்டு ஆடுவதையும் கண்டார். இடது கையில் சோறு வைத்துக்கொண்டு நண்பர்களையும் கன்றுகளையும் தேடித் திரியும் கிருஷ்ணரையும் பார்த்தார். உடனே பூமிக்கு வந்தார். தம் நாலு கிரீடமும் கிருஷ்ணரின் காலில் படும்படி வணங்கினார். ஆனந்தக் கண்ணீரால் கிருஷ்ணரின் பாதத்தைக் கழுவினார். மெய் சிலிர்க்க அவரைத் துதித்தார். பிறகு, "கிருஷ்ண பகவானே, எனக்கு விடை கொடும். தாங்களே உலகம் அனைத்துக்கும் நாதன். நான் படைத்த உலகத்தைத் தங்களிடம் அர்ப்பணம் செய்துவிட்டேன்" என்று பகவானை மூன்று முறை வலம் வந்து மீண்டும் வணங்கிவிட்டுப் போனார்.

கிருஷ்ணர் அவரை அனுப்பியதும், பழைய யாதவச் சிறுவர்களை முன்போல் யமுனையின் கரைக்கு அழைத்து வந்தார். ஒரு வருஷம் ஆகியும் அவர்கள் கிருஷ்ணருடைய மாயையால் அதை அறியாமல் சகஜமாகவே நடந்துகொண்டார்கள். "கிருஷ்ணா வா, வா! நீ ஒரு பிடி சாதங்கூடச் சாப்பிடவில்லையே! கன்றுக்குட்டிகளை ஓட்டி வந்துவிட்டாயா?" என்று கேட்டு அவருக்குச் சோறு கொடுக்க வந்தார்கள். கிருஷ்ணரும் சாப்பிட்டார். பிறகு பாம்பு வடிவமான அகாசுரனின் தோலை அவர்களுக்குக் காட்டினார். எல்லாரும் அதனுள்ளே போய்ச் சற்று நேரம் விளையாடினார்கள். பிறகு கோகுலத்துக்குப் போய், "அகாசுரன் பாம்பு வடிவம் எடுத்து எங்களைக் கொல்ல வந்தான். அவனைக் கிருஷ்ணன் கொன்று எங்களைக் காப்பாற்றினான்" என்று ஒரு வருஷத்துக்கு முன் நடந்த செய்தியை அன்று நடந்ததாக வீட்டில் போய்ச் சொன்னார்கள். பெற்றோர்களும் அதைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தார்கள்.

## விட்டுப்போன பெயர்

மஞ்சரி செப்டம்பர் 1954 இதழில் வெளியாகியிருந்த 'இலங்கையின் புனித மலை' என்ற கட்டுரையில் வெளியான படங்கள் இலங்கையிலுள்ள ஹல்ஞானேயா டி. ரி. செல்வநாயகம் அவர்கள் எடுத்தவை.

## பணமும் உழைப்பும்

பணம் கிடைக்காதென்றால் யாரும் உழைக்க மாட்டார்கள். சிலர்தான் பணத்தைப்பற்றி ஒருபோதும் கவலைப்படுவதில்லை. அவர்கள் யார் என்றால், பணம் உள்ளவர்களே. நான் பணக்காரனாகவும் இருந்திருக்கிறேன்; ஏழையாகவும் இருந்திருக்கிறேன். நான் சொல்வதை நம்புங்கள்; பணக்காரனாயிருப்பதே சுகம். சொற்ப வருமானத்தைக் கொண்டு வாழ முடியாதென்பதில்லை. சொற்ப வருமானமே உங்களுக்கு வருகிறது என்ற ரகசியத்தை வெளி விடாதிருப்பதற்காக, நீங்கள் மிதமிஞ்சிச் செலவு செய்யும்போதுதான் சங்கடம் விளைகிறது.

—ஸாஃபீ டக்கர்

# நீலகிரிப் படுகர்

அ. சு. சந்திரராஜ்

'பழகி மணம் புரிவோர்' என்ற தலைப்பில் 'மஞ்சரி' ஜூன் இதழில் வெளிவந்த கட்டுரையில் உள்ள சில விவரங்கள் சரியல்ல என்று, 'படுக சமூக ஊழிய'ரான இவர் இதை எழுதியனுப்பியிருக்கிறார்.

நீலகிரியில் படுகர்தான் பெரும்பான்மையோர்; படகர், வடுகர், வடகர், கௌடர் என்பவர்கள் இல்லை. சுமார் 500 ஆண்டுகளுக்கு முன் மைசூரிலுள்ள உம்மத்தூர் ராஜபுஜலிங்க அரசு, அவர் மகன் ருத்திரைய அரசு, பிஜ்ஜண்ண அரசு இவர்களுடைய தலைமையில் படுகர்கள் நீலகிரிக்கு வந்தார்கள். இந்த மூன்று பேரும் வெவ்வேறு இடங்களில் கோட்டைகளைக் கட்டிக்கொண்டு வாழ்ந்து, தங்களுடன் வந்த படுகர்களிடமிருந்தும், கோத்தர், தொதவர்களிடமிருந்தும் 'கிருதி' என்னும் கப்பம் வாங்கிவந்தார்கள். 1782-முதல் 1799 வரைக்கும் ஆண்ட திப்புசுல்தான் ஆட்சியில், நீலகிரியில் இவர்கள் வாசம் செய்தகொண்டிருந்தார்கள்.

சிகூர்க் கணவாய் வழியாக மைசூருக்கும் நீலகிரிக்கும் சுலபமாகச் செல்லலாம். படுகர்கள் இந்தக் கணவாய் வழியாகத்தான் நீலகிரிக்கு வந்திருக்கிறார்கள். சிகூர்ப்பக்கத்தில் செம்பநாத்தா என்னும் இடத்தில் ராஜபுஜலிங்க அரசு ஒருசமயம் முகாம் போட்டு, அங்கே ஒரு மடமும் வீடும் கட்டியிருக்கிறார். பிறகு அதை உல்லத்தி ஹாலிமண்டே கவுடருக்கு இனமாகக் கொடுத்திருக்கிறார். குரும்பர்களின் ஆதரவைப் படுகர் நாடியதுமில்லை; வேஷம் மாறியதுமில்லை. படுகர்களைப் போலவே குடகிலும் மக்கள் இருக்கிறார்களென்றால், அவர்களை எந்தக் குரும்பர்கள் வேஷம் மாற்றிவிட்டார்கள்?

மேலே சொன்ன அரசுகள் நீலகிரிக்கு வரும்போது, தங்களுடன் 'கல்வியறிவு இல்லாத'வர்களை அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று நினைக்க இடமில்லை. இந்த அரசர்களின் கீழ்க் கணக்கு வேலை செய்யவந்த சிவலிங்கையாவும், ஜம்புலிங்கையாவும், ஜோதிட சாஸ்திரத்தில் நிபுணரான கிடெபொட்டே கவுடரும், கப்பம் வசூலித்துக் கொடுக்கும் கின்னரி செவணகவுடரும் 'கல்வியறிவு இல்லாத'வர்களாக இருந்திருக்க முடியாது. படுகர்கள் மற்றவர்களைப்போல்

பெண் வீட்டில் திருமணம் நடத்து வதில்லே. மாப்பிள்ளேயின் வீட்டுக்குத்தான் பெண்ணே அழைத்து வருகிறுர்கள். இதவும் போது விடிர்த பிறகுதான். எந்தக் காரணத்தைக் கொண்டும் இரவில் பெண்ணேக் கூட்டிக்கொண்டு வருவதில்லே. மணம் நடக்கும் நாளில் விருந்து நடக்கும்போது, தம்பதிகளே ஒரு வீட்டில் தனிமையாகக் கலந்து பேசவிடமாட்டார்கள்.

எந்தத் தம்பதிகளுக்குமே சீக்கிரத்தில் குழந்தைப்பேறு உண்டாக வேண்டும் என்ற ஆசை இருப்பது சகஜம். குழந்தைப் பாக்கியம் இல்லாவிட்டாலும் படகர் தம்பதிகள் சந்தோஷமாக இருப்பார்கள். குழந்தை உண்டாக 'இரண்டு மூன்று ஆண்டுகள் வரையில் கெடு'வைக்க மாட்டார்கள்.

மனேவி முதல் தடவையாகக் கர்ப்பமுற்ற ஐந்தாவது அல்லது ஏழாவது மாதத்தில் சீமந்தம் போல் ஒன்று நடத்துவார்கள். 'இதுதான் உறுதியான திருமணம்' என்பது தவறு. புருஷன் வீட்டில் பெண் தன் வலதுகாலே முதலில் வைத்துப் பிரவேசித்த நாளிலேயே திருமணம் பூர்த்தியாகிவிடும். கர்ப்பமுற்ற காலத்தில் நடக்கும் சடங்கு இப்போது நின்று வருகிறது. இதை, 'அரக்கோல் மதுவை' என்பது தப்பிதம்; 'கண்ணி கட்டுவ மதுவை' என்பதுதான் சரி.

படுக சமூகத்தில் ஓர் ஆண் இரண்டு மூன்று பெண்களே மணந்துகொண்டு ஒரே வீட்டில் நிம்மதியாக வாழ்வதும் உண்டு. மகப்பேறு இல்லாவிட்டால் மாத்திரம் மனேவியைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டு இரண்டாந் தாரம் கொள்வதில்லே. மூத்த தாரத்தின் தங்கையையோ அல்லது உறவினள் ஒருத்தியையோ மூத்த மனேவியின் சம்மதத்தோடு இரண்டாந் தாரமாகக் கொள்வதுண்டு. புருஷன் மனேவி இருவருக்குமே விவாக ரத்து செயதுகொள்ளும் உரிமை சமமாக உண்டு. விவாக ரத்து செய்துகொண்டவர்கள் வேறு ஒருவரை மணம் செய்துகொள்ளவும் உரிமை உண்டு.

ஒரு பெண்ணுடைய திருமணத்தின்போதோ அதற்குப் பிறகோ சீதனம் கொடுப்பதுண்டு. பரம்பரையாகவே கால்நடைகளேத்தான் சிறந்த செல்வமாகக் கருதி, பசு, எருமை முதலியவைகளேயும் தானியங்களேயும் சீதனமாகக் கொடுத்து வருகிறுர்கள். அதிகமாகக் கொடுக்கச் சக்தி இல்லாதவர்கள் ஒரு கன்றுக்குட்டியையாவது கொடுக்கிறுர்கள். ஆனல் சீதனம் கொடுப்பது கட்டாயமில்லே. 'முறம், உலக்கை, உரல், துடைப்பம்' முதலியவைகளேக் கொடுப்பதே இல்லே.

திருமணமான பிறகு பெண்ணின் தகப்பனுருக்கு மாப்பிள்ளே ரூ 100 அல்லது ரூ. 200 கொடுப்பதுண்டு இதை 'ஹொன்னு' என்கிறுர்கள். மாப்பிள்ளே இந்தப் பணம் கொடுக்காவிட்டால், அந்தப் பெண்களேக் கேவலமாகக் கருதுகிறுர்கள். இந்தப் பணத்தைக் கொண்டுதான் பெண்ணுக்கு நகைகள் செய்கிறுர்கள் என்பதில்லே. இப்போது படகப்பெண்மணிகள் தங்க நகைகளேத்தான் அதிகமாக விரும்புகிறுர்கள். தங்கச் சங்கிலியும், காசுமாலேயும், கல் இழைத்த கம்மல்களும், பேசரி

களும், வளையல்களும் எங்கும் படுகப் பெண்களின் உடம்பில் காணப்படுகின்றன.

சுமார் இருபது முப்பது வருஷங்களுக்கு முன் வரையில் படுகர்கள் தெருவில் நடந்து போகும்போது விளையாட்டாகவோ அல்லது வேண்டுமென்றோ தமிழ் முஸ்லிம் சகோதரர்கள் ஒரு கோடு போட்டுவிட்டால், அவர்கள் அதைத் தாண்டி அப்பால் செல்லமாட்டார்கள். அந்த முஸ்லிம்களுக்குக் காசு கொடுத்து அந்தக் கோட்டை அழித்த பிறகுதான், மேலே செல்வார்கள். இப்படிப்பட்டவர்கள் வாழும் 'ஹட்டி'களில் முன்பு திருட்டுப் பயம் இல்லாதிருந்தது. இப்போது தமிழ் நாட்டின் பல பாகங்களிலிருந்து வயிற்றுப் பிழைப்புக்காக நீலகிரிக்கு வந்து படுகர்களின் ஆதரவில் 'ஹட்டி'பக்கங்களில் வாசம் செய்பவர்களால் தான், திருட்டும் மற்ற அநாகரிகச் செயல்களும் நடைபெற்று வருகின்றன.

ஊரை விட்டு வெளிக் கிளம்பும் ஆண்கள் எங்கே வேண்டுமென்றாலும் சாப்பிடுவார்கள். பெண்கள் சாதாரணமாக எங்கேயும் போவதில்லை. அயலூரிலுள்ள ஓட்டல்களில் சாப்பிடும் வழக்கம் க்ஷேத்திரங்களுக்குச் செல்லும்போது மட்டும் இருந்துவருகிறது. ஆனால் இந்தக் காலத்தில் பிற வகுப்பினரில் அநேகர் படுகர்களின் நண்பர்களாக இருக்கிறார்கள். நண்பர்களின் வீடுகளுக்குத் தம்பதிகள் போய்வருவதையும், தங்கள் வீட்டுக்கு நண்பர்களை அழைத்து விருந்தளிப்பதையும், ஓர் உயர்ந்த பண்பாக மதிக்கிறார்கள். அந்நிய வகுப்பாரின் வீட்டில் சாப்பிடுவதைப் படுகர் வித்தியாசமாகக் கருதுவதில்லை. ஜாதிமத பேதத்தை ஒழிக்கும் ஸ்தாபனமாகிய இந்தியத் தேசியக் காங்கிரஸ், ஸ்ரீ ராமகிருஷ்ண மடம் முதலியவைகளில் படுக சகோதரர்கள் தீவிரமாகப் பங்கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றால், ஆச்சரியமாக இருக்கிறதில்லையா?

படுகர்கள் மைசூரிலிருந்து வரும்போது 'இரியவுடைய ஐயா' (ஈசுவரன்), 'மசினியம்மன்' என்ற விக்கிரகங்களைத் தங்களுடன் கொண்டுவந்திருக்கிறார்கள். இவர்களுடைய குலதெய்வம் 'இரியவுடைய ஐயா'தான். இவரை 'மாதேசுவரர்', 'மாதப்ப சாமி', 'மகாலிங்கசாமி' என்றெல்லாம் அழைக்கிறார்கள். பத்தினித் தெய்வமான கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் கோயில் கட்டுவித்ததைப் போல், படுக சமூகத்தில் மிகவும் சக்திவாய்ந்த தியாகத்தின் சிகரங்களான 'எத்தையம்மன்மார்கள்' இரண்டு பேரைப் படுகர்கள் பத்தினித் தெய்வங்களாகப் பூசித்து வருகிறார்கள். மற்றும் 'மகாகாளி,' 'ஜடையப்பசாமி,' 'ரங்கசாமி' முதலிய பிற தெய்வங்களையும் வழிபடுகிறார்கள்.

புருஷனோ மனைவியோ இறந்துவிட்டால், உயிருடன் இருக்கும் மனைவி அல்லது புருஷன் 'ஒரு கத்தியையும் ஒரு பிடி சாமை அல்லது நெல்லையும்' கையில் பிடித்துத் தலைமேல் வைத்து எடுத்துப் பிறகு பிரேதத்தின் காலடியில் கொஞ்சங் கொஞ்சமாக மூன்றுமுறை வலம் வந்து போடுவார்கள். குடும்பத்தில் இறந்தவருக்கு இளையவர்களான மற்றவர்கள், இதேபோல் எதிர்த்

திசையில் மூன்று முறை நெல் அல்லது சாமையைப் பிரேதத்தின் மூடிய வாய்மீது போடுவார்கள். மனைவி 'புதுக்கூடை' பிடித்துக் கொண்டு புருஷனின் பிரேதத்தைச் சுற்ற மாட்டாள்.

படகர்களின் தொகை நீலகிரியில் வாழும் பிற வகுப்பினரைக் காட்டிலும் அதிகம். தொதவர், கோத்தர், குரும்பர் இவர்களைத்தான், ஆதி 'மலைவாசிக'ளென்று ஆராய்ச்சியாளர்கள் மதிக்கிறார்கள். படகர்களையும் 'மலைவாசிகள்' என்று கருதினால், அவர்களுக்குப் பிறகு நீலகிரிக்கு வந்திருக்கும் இருளர், முஸ்லிம்கள், தமிழர், கன்னடியர், மலையாளிகள் இவர்கள் எல்லாரையுமே மலைவாசிகள் என்றுதான் கொள்ளவேண்டும். படகர்கள் நீலகிரி மலையில் வாழ்வதால், மலைவாசிகள் ஆகிவிட மாட்டார்கள். ஐரோப்பியர்களும், சீனக்காரர்களும், வடநாட்டார்களுங்கூட நீலகிரியில் வாழ்ந்து வருவதால், அவர்களும் மலைவாசிகள் தானே?

## சர்க்கார் பணம் போகிற வழி

எலியட் பால் என்பவர் பிரபல ஆசிரியர். அவருடைய கீர்த்தி காரணமாக மஸாசுஸெட்ஸ் ராஜ்ய சர்க்காரில் அவருக்கு ஓர் உத்தியோகம் கிடைத்தது. 'யுத்தமுனையிலிருந்து திரும்பிய வீரர்களின் நடவடிக்கைகளைக் கவனிக்கும் டைரக்டர்' என்று உத்தியோகத்துக்கு ஒரு தினுசாகப் பெயர் கொடுத்தார்கள்.

ஷார்ட்ஹாண்ட் - டைபிஸ்ட் ஒருவரை வேறே காரியதரிசியாக ஆசிரியர் அமர்த்திக்கொண்டார். அந்த அம்மாளுக்குக் கொடுக்க வேலை ஒன்றும் இல்லை.

யுத்தத்திலிருந்து திரும்பிய 2,50,000 வீரர்களின் ஜாபிதா ஒன்று புழுதியடைந்து சர்க்கார் ஆபீஸில் கிடந்தது. அதை எடுத்து அவளிடம் கொடுத்து, "இந்தா, இதற்கு நான்கு பிரதிகள் டைப் அடித்துக் கொடு" என்று சொன்னார். மூன்று மாதகாலம் உல்லாசப் பிரயாணம் செய்யப் போய்விட்டார். ஜாபிதாவின் பிரதிகள் பூர்த்தியாகிவிட்டன.

வரும் தேர்தல்பற்றிய பேச்சு இந்தச் சமயத்தில் மும்முரமாய் எழுந்தது. ஜாபிதாவின் பிரதிகளில் ஒன்றை ரிப்பப்ளிக்கன் கட்சிக்கு 350 டாலருக்கு விற்றார். பாரபட்சம் இல்லாமல் டெமொகிராட்டிக் கட்சிக்கும் ஒரு பிரதியை 500 டாலருக்கு விற்றார்.

மீதி இரண்டு பிரதிகளின் அடுக்குகளையும் ஒரு டிராக்கில் போட்டு, ராஜாங்க ரெக்கார்டு ஆபீஸுக்கு அனுப்பிவிட்டார். "இன்னும் அவை அங்கேதான் இருக்கும்; யார் கேட்டாலும் விலைக்குக் கிடைக்கும். எவராவது இலக்கியச் சங்கத்தாருக்கு விருப்பமானால், வாங்கிக்கொள்ளலாமே..." என்கிறார், இப்போது பால்.

—பென்னட் ஸெர்ஃப், 'ஆம்னிபுக்.'

இயற்கையில்தான் எத்தனை எத்தனை அதிசயங்கள் மலிந்துகிடக்கின்றன!

# பெண்ணாக மாறும் ஆண் பூச்சி

★

இருபத்தைந்து ஆண்டுகளாக விஞ்ஞானிகளின் கண்ணுக்கு அகப்படாமல் மறைந்து கிடந்த ஒரு விநோதப் பூச்சி மறுபடியும் தட்டுப் பட்டிருக்கிறது. இது சமுத்திரத்தில் வசிப்பது; பிறக்கும்போது ஆணாக இருந்து முடிவில் பெண்ணாகி இறக்கிறது. இப்படி மாறுவதோடு இன்னும் பல விசித்திரப் பழக்கங்களும் இதற்கு உண்டு. 'லெவ்னெகா கான்வெக்ஸா' என்ற இந்தப் பூச்சி அரை அங்குல நீளத்துக்கு மேல் இராது. இதற்கு ஏராளமான கால்கள் உண்டு. இது மீன்களின் சுவாச உறுப்புக்களிலும் வாய்ப் பாகத்திலும் வாழ்கிறது.

ஸ்க்ரிப்ஸ் இன்ஸ்டிடியூஷன் என்ற ஸ்தாபனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் சமீபத்தில்தான் இதை மீண்டும் கண்டு பிடித்தார்கள். இதற்குமுன் 1883 - இல் இதே இனத்தைச் சேர்ந்த ஒரே ஒரு பூச்சியைப் பனமா வளைகுடாவிலிருந்து கண்டெடுத்து, பென்ஸில்வேனியா யூனிவர்சிட்டியைச் சேர்ந்த மிருகக் காட்சிச் சாலையில் வைத்திருந்தார்கள். ஆனால் சுமார் 25 ஆண்டுகளுக்கு முன் அதுவும் இறந்து போய்விட்டது.

சமீபத்தில் இந்த வகையைச் சேர்ந்த பூச்சிகளில் 200-க்கு மேல், கலிஃபோர்னியாவிலுள்ள ட்யூனாவைச் சேர்ந்த சில செம்படவர்கள் மீன் பிடிக்கும்போது கிடைத்தன. கலிஃபோர்னியாவைச் சேர்ந்த விஞ்ஞான சம்பந்தமான ஒரு ஸ்தாபனத்தார், இவை காணமற்போன அந்தப் பழைய பூச்சி வகையைச் சேர்ந்தவை தான் என்று ஆராய்ந்து கண்டறிந்தார்கள்.

இந்தப் பூச்சி, மீனின் சுவாச உறுப்பில் வளர்ந்து ஆணாகி, அதன் தசைக்குள் கெடுதல் உண்டு பண்ணுகிறது. பிறகு திடீரென்று தன்னுள்ளேயே பிறவி முதல் அடங்கியிருக்கும் ஏதோ ரசாயன விசேஷத்தால் பெண்ணாக மாறுகிறது.

இப்படிப் பெண்ணானதும் இது மீனின் வாயில் குடி புகுந்து அது உண்ணும் உணவைத் தானும் தின்று வாழ்கிறது. பெண்ணான பிறகு மீனுக்கு இதனால் எவ்விதக் கெடுதலும் நேராது. உயிர்நூல் அறிஞர்கள் இந்தப் பூச்சிகளைப் பற்றி ஆராய்வதில் மிகுந்த ஊக்கம் செலுத்தி வருவதற்குக் காரணம் உண்டு. இதைப் போல் பல பூச்சிகளின் வளர்ச்சியைப்பற்றிப் பல விஷயங்களை இந்த ஆராய்ச்சி மூலம் அறியலாம்.

ஸ்மித்ஸோனியன் இன்ஸ்டிடியூஷன் என்ற ஸ்தாபனத்தார் இந்தப் பூச்சியில் ஆண் - பெண் இரண்டு வகையையும் வளர்த்துப் பாதுகாத்து வருகிறார்கள்.

மூலம்: ஸண்டே க்ரானிக்கிள் (ஆங்கிலம்: 3-10-'54), பம்பாய்.

# என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

**வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டில் பதிலளிக்க இந்த டாக்டர் இசைந்திருக்கிருர். இவர் வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர்; ரத்தப் பரிசோதனை நிபுணர்; கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர். நோயுள்ளவரின் தனித்தனி நிலையை நேரில் கவனித்தே டாக்டர் வைத்தியம் செய்ய வேண்டும். ஆகவே, இதில் வரும் பதில்களைப் பொதுவாகக் கொள்ளலாமே தவிர, வைத்தியமே இவற்றைக் கொண்டு செய்துகொள்ளலாம் என்று நண்பர்கள் நினைக்கக் கூடாது.**

**வி. சங்கரன், கல்கத்தா:**

கேள்வி: சரியான நேரங்களில் நல்ல ஆகாரங்களை உட்கொள்கிறேன்; சுகாதாரமுள்ள இடங்களில் வசிக்கிறேன். இப்படியிருந்தும் சில வருஷ காலமாக என் உடல் மெலிந்தும் பலவீனமாகவும் இருக்கிறது. உட்கொள்ளும் ஆகாரத்தை உடல் சரியாகக் கிரகிக்காததே இதன் காரணம் என்று உணர்ந்தேன். இதை நிவர்த்திக்க என்ன உபாயம்? யோகாசனங்களால் பிரயோசனம் உண்டா?

விடை: உடலின் பருமன் குடும்பவாசியாகவும் ஏற்படுகிறது. சரியான நேரங்களில் நல்ல ஆகாரம் சாப்பிடுவதாக இவர் சொல்லுகிருர். சரியான நேரங்கள் என்ன என்று சொல்லவில்லை. நல்ல ஆகாரங்கள் என்ருல் என்ன? இதையும் சொல்லவில்லை. யோகாசனங்கள் செய்தால் தேக ஆரோக்கியம் ஏற்படலாம். ஆனல் அவைகளை நல்ல குருவிடம் கற்றுக்கொள்ள வேண்டும். மெலிந்திருப்பதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஆனல் பலவீனமாக இருக்கக் கூடாது; இதுதான் முக்கியம். வியாதி ஏதும் இல்லையானல், பலவீனத்தைப் போக்கத் தினந்தோறும் சுமார் மூன்று அல்லது நான்கு மைல் தூரம் நடந்தால் போதும். வெண்ணெய், பால், பழம் இவைகளை அதிகமாய்ச் சேர்ப்பது ஆரோக்கியம் அளிக்கும்.

**வலம்புரி துமணன், திருச்சி:**

கே: தழும்பை மறைக்க விளம்பர மருந்துகளை வாங்கலாமா? அவை பலிக்குமா?

வி: விளம்பரக் கம்பெனிகள் எவ்வளவோ இருக்கின்றன. நல்ல மருந்துகள்மட்டும் அல்ல; போலி மருந்துகளும் எவ்வளவோ விளம்பரமாகின்றன. எல்லாவற்றையும் நம்பி வாங்கி உபயோகித்தால் அபாயம் நேரலாம். தழும்பு இயற்கையாகவேதான் மறைய வேண்டும். பெரிய தழும்புகள் எத்தனை ஆண்டுகளானலும் மறைய மாட்டா. அவைகளுக்கு ரண சிகிச்சை செய்து சரும

ஒட்டு முறையைக் கையாளலாம். இதைத் தவிர வேறு உபாயம் இருப்பதாக நான் அறியேன்.

சியாமளா, சென்னை:

கே: என் குழந்தைக்கு ஒரு வயது. சிலரைக் கண்டால் அழத் தொடங்குகிறது; சிலரிடம் உற்சாகமாய்ப் போகிறது. இதற்கென்ன காரணம்?

வி: முகபாவத்தைக் கண்டு நம்முடைய உள்ள நிலையை அறிந்து கொள்ளும் சக்தி, குழந்தைக்கு



உண்டு. தாயிடம் சில சமயம் கோபம் கொள்வதும், சில சமயம் சந்தோஷமாய் விளையாடுவதும் கொஞ்சுவதும் தாயின் முகத் தோற்றங்களை நோக்கியேதான். இதே காரணத்தை ஒட்டியே பிறரிடமும் குழந்தைகள் நடந்து கொள்ளும்.

எம். ஏ. ராமசாமி, திருப்பூர்:

கே: இரண்டு முழங்கால்களிலும் சில ஆண்டுகளாக ரோமக் கால்களில் சிறு கொப்புளங்கள் உண்டாகின்றன. நீரும் பெருகிக் கொண்டேயிருக்கிறது. அக்ரோமைசின், பெனிசிலின் போன்ற மருந்துகளைப் பிரயோகித்தால் குணம் ஏற்படுகிறது. பிறகு ஒன்றிரண்டு மாதங்களில் மீண்டும் கொப்புளிக்கிறது. இதைத் தடுக்கப் பரிகாரம் வேண்டும்.

வி: இரண்டு காரணங்களால் காலில் இந்தக் கொப்புளங்கள் எழுகின்றன. ஒரு வகைப் பூஞ்சண விதைகள் ரோமக்கால்களில் புகுந்து நோய் விளைவிக்கின்றன. சீழ் பிடிக்கும் கிருமிகள் அந்த விதைகளோடு சேர்ந்து சீழைத் தோற்றுவிக்கின்றன. சீழ் எளிதில் பெனிசிலின் போன்ற மருந்துகளுக்கு வசமாகிறது. ஆனால் பூஞ்சண விதைகள் இந்த மருந்துகளுக்கு வசமாகாமல், தங்கிவிடுகின்றன. இதற்குத் தக்க சிகிச்சையை வைத்தியரிடமே செய்துகொள்ள வேண்டும். முழங்கால்களில் ரத்தம் தங்காமல் ரத்த ஓட்டம் தக்க அளவில் ஏற்படும்படி 'பாண்டேஜ்' கட்டிக்கொள்ள வேண்டும்.

எம். கண்ணன், வாணியம்பாடி:

முதல் கேள்விக்கு விடை: நீங்கள் சொல்லியிருக்கும் குறிகள் ஆண்களுக்கு இயற்கையாயுள்ளவை. அந்த எம். பி., பி. எஸ். வைத்தியர் சொல்லியது உண்மைதான். குறித்துள்ள வேறு விஷயங்கள் உங்கள் பிரமையே தவிர வேறில்லை.

இரண்டாம் கேள்விக்கு விடை: தேமலுக்குச் சுலபமான மருந்து இருக்கிறது. 'போட்டோகிராபர்' உபயோகிக்கும் 'ஹைப்போ' என்ற உப்பை நீரில் கரைத்துத் தடவிக் கொண்டால், குணமாகிவிடும். மருந்து தடவி இரண்டு மணி நேரங் கழித்துக் குளித்துவிடலாம்.

கே. 3: 'சர்க்கரை வியாதி' (நீரிழிவு), உப்பு வியாதி உள்ள பெண்களை மணக்கும் ஆண்களுக்கு அந்த நோய்கள் தொத்திக்கொள்ளுமா? அந்த நோய்களை முற்றும் போக்க முடியுமா?

வி: இந்தக் காலத்தில் ஒரு தாரத்துக்குமேல் மணப்பது சாத்தியமில்லை. இதை நண்பர் உணரவில்லை போல் இருக்கிறது! இது போகட்டும்; நீரிழிவு நோய், உப்பு நோய் இவைகள் தொத்து நோய்கள் அல்ல. ஆகையால், அந்த நோய்கள் உள்ள பெண்ணை மணந்த ஆண்களை அவை தொத்திக் கொள்ளா.

வி. ஆர். ஜோஷி:

கே. 1: 'எக்ஸிமா' நோய் நிரந்தரமான நோயா? அல்லது அதை கண்டிருந்தால் அதை நிவர்த்திக்க முடியுமா? அது ஓரிடத்தில் காய்ந்தால் மற்றொரிடத்தில் தோன்றுமா? 'சிக்ஸொடர்ம்' என்ற மருந்தை உபயோகித்தால் பூரண குணம் உண்டா?

வி: 'எக்ஸிமா' நோய் பல காரணங்களால் உண்டாகிறது. 'எக்ஸிமா' என்ற பெயரால் பல நோய்களைக் குறிப்பது வழக்கம். பூஞ்சண வகைகள் சருமத்தில் புகுந்து கொள்வது 'எக்ஸிமா'வுக்கு ஒரு காரணம். சில மருந்துகள் சருமத்தின்மீது அடிக்கடி படுவதாலும் இந்த நோய் உண்டாகலாம். குழந்தைகளுக்குக் கரப்பான் பூச்சிக்கடியால் உண்டாகும் ரணத்தையும் 'எக்ஸிமா' என்றே குறிப்பிடுகிறார்கள். இவைகளுக்கெல்லாம் காரணங்களை ஆராய்ந்து தக்க பரிகாரங்களை வைத்தியருடைய உதவியோடு கையாண்டால் எளிதில் குணம் அடையலாம். நீடித்த சரும நோய்கள் சில வேளை 'எக்ஸிமா'வாக வெகுநாள் குணமாகாமல் இருந்துவிடும். இதற்கு 'எக்ஸ்-ரே' சிகிச்சை பயன்படும்.

கே. 2: குழந்தை இரவிலும் விடாமல் தாயிடம் பால் குடித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம் என்ன? தடுக்க என்ன வழி?

வி: குற்றம் தாயைச் சேர்ந்ததே. குழந்தை அழுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளை ஆராய்ந்தறியாமல் தாய், பாலூட்டிப் பழக்கினால், எப்போதும் பால் வேண்டுமென்று தாயிடம் குடிக்க



முயலும். இரவிலும் அதற்காகக் குழந்தை அழும். தடுக்க முயல்வதைவிட மெதுவாகக் குழந்தைக்குச் செயற்கை முறையில் பாலூட்ட வேண்டும். வீட்டில் வேறு பெரியோர்கள் இருந்தால், அவர்களைக் கொண்டு குழந்தையை இரவில் தூங்க வைக்க வேண்டும்.

கே. 3: கருவை மருந்து முதலியவைகளால் அழிக்க முயல்வதால், பின் காலத்தில் விரும்பிக் கர்ப்பம் தரிக்கும்போது பலவீனம் ஏற்படுமில்லையா?

வி: கேட்டவரே இதற்கு விடை சொல்லிவிட்டார். கேடு விளைவிக்கத்தான் விளைவிக்கும். கருப்பையில் அழற்சி ஏற்பட்டுக் கரு வானது சீராக வளர்ந்து பிரசவிக்கத் தடைகள் ஏற்படலாம். கரு வளர்ந்த பிறகு அழிப்பதைவிட, அதைத் தடுப்பதே நலம்.

தேனீ ஆச்சரியமான ஜந்து; அது சேகரிக்கும் தேன் அற்புத சக்தி வாய்ந்தது.

# நலம் தரும் தேன்

'கிரண்'

உடலின் எந்தப் பகுதியிலாவது கபம் சேர்ந்து பாரம் அழுத்துவதுபோல் இருந்தால் அதற்கு உரிய மருந்துடன் தேனையும் சேர்த்து உள்ளுக்குக் கொடுப்பார்கள்; அல்லது கபம் சேர்ந்த பகுதியில் வெளிப் பூச்சாகத் தேனை உபயோகிப் பார்கள். உடனே கபம் கரைந்து நோய் குணமாகும். தேன் சிறந்த அநுபானம் ஆகிறது.

நாள்பட்ட அஜீரணம், அமித மான உணவினால் தோன்றிய அவஸ்தை, உடம்புக்கு ஒவ்வாத உணவுகளைச் சாப்பிட்ட பலன் இவற்றால் ஆகாரப் பையும் ஜீரண உறுப்புக்களும் மந்தமாகிவிடும். அதற்குத் தேனைத் தனியாகவோ, வேறு பதார்த்தங்களுடனோ சாப் பிட்டால், ஆகாரப் பையின் சுரப்பி கள் சுறுசுறுப்பாக வேலை செய்யத் தொடங்கிவிடும்; ஜாடராக்கினி தீவிரமாகும்; நல்ல பசி எடுக்கும். இதனால் தேன் 'தீபகம்' என்று பெயர் பெற்றது.

சிறு குடல்களில் கபம் சுற்றிக் கொண்டால் நாளடைவில் அதி சாரம், கிராணி, மலச்சிக்கல் முதலிய நோய்கள் உண்டாகும். அதற்குத் தேனை 'எனிமா' மூலம் குடலில் ஏற்றினால் குடலில் தங்கிய கபம் பிரிந்து, அதி விருந்து ஜீரண ரசம் சுரக்கும். ஜீரண ரசம் ஒழுங்காக வெளிப் பட்டால் உடல் முழுவதற்கும் உணவுச் சத்துச் செல்லும். மலச் சிக்கல் முதலிய நோய்களும் நீங்கும். இதனால் தேனுக்குக் 'கிராஹி' என்ற பெயர் உண்டா யிற்று.

தினம் ஒரு முறை கண்களுக்கு மை இடுவதுபோல் தேனை உபயோகித்தால் கண்ணில் பீளை கட்டுவதோ, மற்றக் கண்ணோய் கள் வருவதோ இல்லை. அதனால் தேனைச் 'சக்ஷுஷ்யம்' என்பார்கள்.

தொண்டை வலி, குரல் கெடு வது போன்ற கப நோய்கள் கண்டபோது ஒரு நாளைக்கு நாலைந்து தடவை தேனைத் தடவினால் நோய் குணமாகும். இதனால் தேன் 'ஸ்வர்யம்' எனப் படும்.

மிக இளைத்தவர்களுக்கும் குடல் நோய் உள்ளவர்களுக்கும் சத்து நிறைந்த ஆகாரங்கள் ஜீரணமாவதில்லை. பால், தயிர், நெய், சர்க்கரை போன்றவை ஜீரணமாவது கடினம். இவர் களுக்குத் தினந்தோறும் தேனை உள்ளுக்குச் சாப்பிடக் கொடுத் தால் நரம்புகள் உறுதி பெறும். இதனால் தேன் 'வ்ருஷ்யம்' என்று பெயர் பெற்றது.

தொடர்ந்து சில தினங்கள் தேனைச் சாப்பிட்டுவந்தால் ஞான தந்துக்களில் சக்தி ஏற்பட்டு மூளையின் சோர்வு அகலும்; அறிவு

மூலம்: பிரக்ருதி (தெலுங்கு), விஜயவாடா.

விசாலமாகும். இதனால் தேன் 'மேத்யம்' என்று பெயர் பெற்றது.

ஆரூத ரணங்களில் கபத்தின் விளைவால் ரத்தமும் சீழும் அதிகமாக வெளிப்பட்டால் ரணத்தின் மேல் தேனைத் தடவவேண்டும். உடனே ரணத்தில் சேர்ந்த துர்நீரோ, சதையோ ஊன் தண்ணீராய் வெளிவந்துவிடும். அதனால் தேன் ரணசுத்திப்பொருள் ஆகிறது.

பெரிய காயங்கள் பட்ட சமயத்தில் சீக்கிரத்தில் சதை வளர்ந்து ஒன்று சேரவேண்டும். அப்போதுதான் புண் ஆறும். ரணத்தின்மேல் தேனைத் தடவினால் புண் ஆறிவரும். இதனால் தேன் 'விரணரோபம்' என்று பெயர் பெற்றது.

தேனில் இன்னும் பல விசேஷ குணங்கள் அமைந்திருக்கின்றன. உலகத்து வைத்திய நிபுணர்கள் தேனைப்பற்றிக் கொடுத்த அபிப்பிராயங்களை இங்கே காணலாம்.

பிரசித்தி பெற்ற மகாத்மா சுலைமான் என்பவர் தேனின் உபயோகத்தை அறிந்து தேனைச் சாப்பிடும்படி எல்லாருக்கும் உபதேசித்தார். ஒரு சமயத்தில் ஒருவன் முகம்மது நபியிடம் போய், "என் தம்பி வயிற்று வலியால் துடிக்கிறான். சீக்கிரம் நோய் நீங்கும்படி தாங்கள் அருள் செய்யவேண்டும்" என்று வேண்டினான். தேனை உள்ளுக்குக் கொடுக்கும்படி அவர் சொன்னார். சற்று நேரத்தில் வயிற்றுவலி மறைந்தது.

அரிஸ்டோன் என்பவர் எழுதிய ஒரு நூலில் ஒலிம்பிய மக்கள் தேனைக் கொண்டு தயாரித்த ஓர் உணவுப் பொருளைச் சாப்பாட்டு வேளைகளில் பரிமாறுவதாகக் கூறியிருக்கிறது.

ஹதீம் ஜாலிமான் என்பவர், 'சீதளம் சம்பந்தப்பட்ட நோய்களுக்குத் தேனைவிடச் சிறந்த மருந்து இல்லை' என்கிறார். காது நோய் வந்தால் தண்ணீரில் நாலைந்து சொட்டுத் தேனையும் பொட்டிலுப்பையும் சேர்த்துக் காதில் விட்டால் உடனே காது நோய் தீர்ந்துவிடும் என்று எழுதியிருக்கிறார்.

டாக்டர் டபிள்யூ. ஜெவின் என்பவர் இப்படிச் சொல்லுகிறார்:

"குழந்தைகளின் நோய்களுக்குத் தேன் சிறந்த ஔஷதம். குழந்தைகளுக்கு வரும் ஈரல் நோய், இருதய நோய் இவைகளுக்கு இது சஞ்சீவி. உப்பும் ஆல்புமினும் குறைவதால் உண்டாகும் மூத்திர நோய்களுக்கும் தேன் ஒப்பற்ற மருந்து. சரும நோய்களைத் தேன் குணப்படுத்தும்; பெரிய சிரங்குகளும் நோய்க்கு முன் தோன்றும் கட்டிகளும் தேனைத் தடவி வந்தால் குணமானதைக் கண்டிருக்கிறேன். ரண சிகிச்சைக்குப் பிறகு காயங்களுக்குத் தேனை இட்டுக் கட்டுக் கட்டுவதால் நன்மை இருக்கிறது. தேன் பட்ட காயங்களில் சீழ் பிடிப்பதே இல்லை. காயம் ஆறிய பின் தோலின்மேல் தழும்புகளும் தங்குவதில்லை. தேனைத் தடவினால் புண்களுக்கு வேறு களிம்புகள் தேவை இல்லை. அழுகிய புண்களைச் சுத்தப்படுத்த 'லோஷன்' போல் தேன் உபயோகப்படுகிறது."

டாக்டர் ப்ளினி என்பவர், "தேனை உள்ளுக்குச் சாப்பிடுவதால் பித்த ரசம் தாராளமாகச்

சுரந்து வரும். தொண்டை, இருதயம் சம்பந்தப்பட்ட நோய்களும் ஜுரமும் இதனுல் நீங்கும்'' என்று சொல்லுகிருர்.

மகாத்மா காந்தி அடிகள் பச்சையாக உணவைச் சாப்பிடும் போதெல்லாம் தம் உணவில் நாலு தோலா அளவு தேனைச் சேர்த்துக்கொள்வாராம்; தினந்தோறும் வெந்நீருடன் தேனைக் கலந்து மூன்று வேளைகள் சாப்பிடுவாராம். பண்டித மதன் மோகன் மாளவியா காயகல்பம் செய்துகொண்டபோது நெல்லிக்காயைத் தேனில் ஊறவைத்துச் சாப்பிட்டாராம்.

உயிர்நூல் துறையில் பட்டம் பெற்ற சேடியன் என்பவர் சமீபத்தில், ''தேனீக்கள் சிறிய ஜந்துக்களே; ஆனுலும், அவை பல விஷயங்களில் மனிதரை விட அறிவு மிகுந்தவை. அவற்ருல் நமக்கு எவ்வளவோ லாபம் இருக்கிறது. ஆயுர்வேத மருந்துகள் பல வற்றைத் தேனுடனேயே சேர்த்துச் சாப்பிட வேண்டியிருக்கிறது. அதனுல் தேன் நமக்கு மிக அவசியமான பொருள் ஆகும்'' என்ருர்.

பூஜைகளில் தேன் முக்கியத்துவம் பெறுகிறது. தெய்வங்களுக்குத் தேன் அபிஷேகம் செய்வதைப்பற்றி யஜுர் வேதத்திலே காணலாம். தயிர், நெய், தண்ணீர், தேன், சர்க்கரை இவற்றை ஒன்று சேர்த்தால் 'மதுபர்க்கம்' எனப்படும். இந்தக் கலவையை வெண்கலப் பாத்திரத்தில் இட்டு, ஹோமம், அசுவமேதம், யாக காரியங்கள், பூஜை முதலியவை நடக்கும்போது தானம் செய்வது வழக்கம். தேனைத் தானம் செய்பவன் நல்ல கதியை அடைவானென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

தேன், பால், சர்க்கரை, தயிர், நெய் இவற்றின் கலவையே பஞ்சாமிர்தம்.

## அந்த யந்திரம்

ஒரு சலவைக் கம்பெனிக்குள் ஒரு கனவான் நுழைந்தார். ''உங்கள் சலவைக் கருவிகளையெல்லாம் நான் கொஞ்சம் பார்க்கலாமா?'' என்று கேட்டார்.

அவரை அழைத்துக்கொண்டு போய், சலவை யந்திரத் தொட்டி, காயப்போடும் யந்திரச் சட்டம், இஸ்திரி செய்யும் யந்திரம் எல்லாவற்றையும் சலவை மானேஜர் விமர்சையாகக் காட்டினர்.

கடைசியில், ''விருப்பமான எல்லாவற்றையும் பார்த்து விட்டீர்களா?'' என்று கேட்டார்.

''பார்த்துவிட்டேன். வந்தனம். ஆனுல், ஒன்று: நான் ஓர் எஞ்சினீரிங் மாணுக்கன். எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. என் ஷர்ட் பொத்தான்களையெல்லாம் ஒன்று விடாமல் பிய்த்து, என் ஸ்டாக்கிங்குகளில் போட்டுவிடுகிறதே, அந்த மெஷின் எப்படித்தான் இருக்குமோ என்று என்னுல் கற்பனையே செய்ய முடியவில்லை'' என்ருர் வந்தவர்.

—'டாட்லர்'

எல்லாப் பெற்றோருமே இந்தப் பிரச்னையைச் சமாளிக்க வழி தெரியாமல் தவித்திருப்பார்கள்.

# குழந்தையின் கேள்வி

**கிராண்ட் மாக்கன்ஸீ, எம். டி.**

பெற்றோர்களுக்கு இது புதிய விஷயமல்ல. குழந்தை கொஞ்சம் பெரிதாகிவிட்டது. தொட்டதற்கெல்லாம் அழுகை. பல் முளைக்கும் அவஸ்தை எல்லாம் தாண்டியாகிவிட்டது. இனி அவனால் கஷ்டமில்லை என்று நாம் சந்தோஷப்பட்டுக்கொண்டிருக்கும்போது, திடீரென்று புதிய சங்கடம் ஒன்று முளைக்கிறது. முன்னெச்சரிக்கை எதுவும் இல்லாமல், நாம் சர்வக்ஞர்களாய் - உலகிலுள்ள சகல விஷயங்களையும் அறிந்தவர்களாய் - அவனுக்குக் காட்சி அளிக்க வேண்டும் என்பது தான் அந்த நிலைமை. குழந்தை கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் நாம் பதில் கூறியாக வேண்டும்.

இப்படிக் குழந்தை கேள்விகள் கேட்பதும் நாம் பதில் சொல்லுவதும் ஒரு விளையாட்டாக இருக்கும் என்று எண்ணி, நான் அதற்குச் சித்தமாகத் தொடங்கினேன். 'விஞ்ஞானப் பொக்கிஷம்,' 'எல்லாருக்கும் எளிய உயர்ந்த கணிதம்' என்ற பிரபல புத்தகங்களை விழுந்து விழுந்து படித்து, ஏராளமான விஷயங்களைச் சேகரித்து வைத்துக்கொண்டேன். குழந்தை கேட்கும் கேள்விகளுக்குச் சரியாய்ப் பதில் சொல்ல வேண்டும் என்று நான் உண்மையாகவே சிரத்தையுடன் தீர்மானித்துக் கொண்டேன். இப்படிக் குழந்தை கேட்டுப் பதில் சொல்லுவது, பெற்றோருக்கும் குழந்தைக்கும் தனி உறவை உண்டாக்குகிறது. சிறுவயதில் குழந்தை கேட்கும் கேள்விகளுக்கு நாம் சிரத்தையோடு பதில் கூறினால், பையன் பெரியவனான பிறகு, காதல், வாழ்க்கை போன்ற முக்கிய விஷயங்களைப்பற்றியும் நம்மிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள வருவான் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

ஒரு நாள் மாலை நான் பேப்பரைப் புரட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தேன். என் பிள்ளை ஜோனத்தான், 'அப்பாவைக் கேட்டால் எல்லாம் தெரியும்' என்று எதிர்பார்க்கும் பார்வையுடன் என்னிடம் வந்தான்.

"அப்பா, கிராவிடி (ஆகர்ஷண சக்தி) என்றால் என்ன?" என்று கேட்டான்.

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லுவது எளிதுதான். "எந்தச் சாமானையும் கீழே விழும்படி செய்யும் சக்தி இருக்கிறதே. அதற்குத்தான் இந்தப் பெயர்" என்றேன்.

"சக்தி என்றால்?"

"அதுவா? வந்து...அதுதான் உள்ளே இருக்கும் ஆற்றல். நகரும் கனமான ஒரு வஸ்து வேறொன்றின்மீது மோதும்போது அல்லது அதைத் தள்ளும்போது—"

"அது சரி. என்னவோ 'ஆற்றல்' என்றாயே; அது என்ன,

காப்பிரைட்: பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்: மே '54), சிக்காகோ.

அப்பா?'' என்றான் அவன், மேலும் விடாமல்.

நான் பதில் சொல்லத் தெரியாமல் விழித்தேன். என் திண்டாட்டத்தைப் பார்த்துவிட்டு என் மனைவி எனக்கு உதவி புரிய முன் வந்தாள்.

"கிராவிடி என்றால் என்ன என்றுதானே கேட்கிறாய்? அது என்ன என்று சரியாய்ச் சொல்ல முடியாது. ஆனால் ஒவ்வொரு சமயம் அது செய்வதை மட்டும் உனக்குக் காண்பிக்கிறேன்'' என்று என் மனைவி அன்போடு அவனிடம் கூறத் தொடங்கினாள்: "நீ நாற்காலியிலிருந்து விழுவதாக வைத்துக்கொள்வோம். அப்போது நீ கீழே தரையில் விழுகிறாயா அல்லது மேலே போகிறாயா?'' என்று கேட்டாள்.

"பூ! இது தெரியாதா? கீழே தான் விழுவேன்'' என்றான் ஜோனத்தான்.

"உன்னை அப்படிக் கீழே விழும்படி செய்யும் சக்தியைத் தான் கிராவிடி என்று சொல்லுகிறோம். ஓர் ஆப்பிள் பழமோ, மழைத் துளியோ, அல்லது மரத்திலிருந்து ஓர் இலையோ கீழே விழும்போது, கிராவிடிதான் அதை அப்படிக் கீழே இழுக்கிறது. நீ சறுக்கி விழும் விளையாட்டு விளையாடுகிறாயே; அப்போது ஏதோ ஒன்று உன்னைக் கீழே இழுக்கிறது இல்லையா? அதைத் தான் கிராவிடி என்று சொல்லுகிறோம். இதோ பார்! இந்தப் பத்திரிகையை என் கையிலிருந்து விட்டுவிடுகிறேன். அது நேரே தரையில் போய் விழுகிறது; இல்லையா? இப்படி அதைக் கீழே விழும்படி செய்வதுதான் கிராவிடி.''

"சரிதான்; ஆனால் அது ஏன் கீழே விழுகிறது?''

"அட கஷ்டமே!'' என்று நான் மனத்துக்குள் கூறிக்கொண்டேன்.

"அது ஏன் என்று சொல்ல முடியாது. ஏதோ ஒரு சக்தி அதைக் கீழே விழும்படி செய்கிறது என்பது மட்டுந்தான் நமக்குத் தெரியும். அந்தச் சக்தியைக் கிராவிடி என்று சொல்லுகிறோம்'' என்று என் மனைவி அவனுக்கு மீண்டும் விளக்கிக் கூறினாள்.

"அம்மா, நீ தேவலையே! அப்பாவைக் காட்டிலும் உனக்கு எவ்வளவோ தெரிந்திருக்கிறதே!'' என்று என்னை அநுதாபத்தோடு பார்த்துக்கொண்டே கூறினான் ஜோனத்தான். சில நாட்களுக்குப் பிறகு அவன் மறுபடியும் என்னிடம் வந்து, "அப்பா, ஊதா என்றால் என்ன?'' என்று கேட்டான்.

"ஊதா என்பது ஒரு நிறத்துக்குப் பெயர்'' என்றேன்.

"நிறம் என்றால்?''

"என்னடா இது? நிறம் என்றால் தெரியாதா? நம்மைச் சுற்றிலும் எவ்வளவு நிறங்கள் தெரிகின்றன? பச்சை, சிவப்பு, மஞ்சள், நீலம், ஊதா...'' என்று நான் சிறிது எரிச்சலோடு கூறினேன்.

"ஊதா, அப்பா; ஊதா என்றால் என்ன என்றுதான் கேட்டேன்.''

"எவ்வளவோ நிறங்களில் ஊதா என்பதும் ஒரு நிறம்'' என்றேன்.

"சரி. ஆனால் நிறம் என்றால் என்ன என்று தெரியவில்லையே?'' என்றான் அவன் மறுபடியும்.

ஊதா நிறத்தை அவனுக்கு எப்படி விளக்கிக் கூறுவது என்று

நான் யோசிக்கத் தொடங்கி னேன்.

"வந்து, நாம் ஏதாவது ஒரு வஸ்துவைப் பார்க்கும்போது, நம் கண்ணுக்கு ஒருவிதமாய்த் தோன்றுகிறது இல்லையா?..." இதற்குமேல் சொல்லத் தெரியாமல் உதவிக்கு என் மனைவியைக் கூப்பிட்டேன். அவள் வந்து, "மறுபடியும் என்ன சங்கடம் வந்துவிட்டது!" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை, அம்மா! ஊதா என்றால் என்ன என்று அப்பாவைக் கேட்டேன். அப்பாவினால் சொல்ல முடியவில்லை" என்றான் ஜோனத்தான்.

"இதோ பார்: அப்பாவின் கழுத்துப் பட்டையில் ஒரு கோடு தெரிகிறதே! அதன் நிறந்தான் ஊதா. என் கண்ணுக்கு ஊதாவாகப் படுகிறது. உனக்கும் அந்த மாதிரிதான் படும் என்று நினைக்கிறேன். இந்தப் புஸ்தகத்தின் மேல் அட்டை இருக்கிறதே, இதுவும் ஊதா நிறந்தான்."

"அம்மா! நீ ஜோராய்ச் சொல்லிவிட்டாய்" என்று சந்தோஷத்துடன் கூறிவிட்டு, ஜோனத்தான் விளையாடப் போய்விட்டான்.

தொங்கிய முகத்துடன் நாற்காலியில் நான் உட்கார்ந்திருந்தேன். என் மனைவி என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டாள். "குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கு எப்படிப் பதில் சொல்லுவது என்ற சூட்சுமத்தை என்னை அறியாமலே இப்போது நான் கண்டுபிடித்துவிட்டேன்" என்று அவள் சொன்னாள்.

"ஆமாம்! என்ன பெரியதாய்க் கண்டுபிடித்துவிட்டாய்?" என்று நான் கேட்டேன். 'நான் இதற்காக எத்தனையோ படித்ததெல்லாம் வீணாய்ப் போச்சே!' என்று எனக்குக் கொஞ்சம் எரிச்சலாய்த்தான் இருந்தது.

"நம் கண்ணால் பார்த்தோ, கையால் தொட்டோ, மூக்கால் மோந்தோ, காதால் கேட்டோ அறிந்துகொள்ளக் கூடிய வஸ்துக்களைக் காட்டி விளக்கிச் சொன்னால், நமக்கும் எளிது; குழந்தைகளும் சுலபமாய்ப் புரிந்துகொள்ளும். அகராதியிலிருந்து ஒரு வார்த்தையைக் கூறி விளக்கினால், அது மேலும் குழப்பத்தையே உண்டாக்கும். ஜோனத்தான் என்னை ஏதாவது கேட்டால், கேள்விக்குச் சம்பந்தப்பட்ட ஒரு பொருளையே அவனுக்குக் காட்டுகிறேன். தானே கண்டோ தொட்டோ, மோந்தோ, கேட்டோ அவன் தெரிந்துகொண்டு விடுகிறான். புரியாத வார்த்தைகளைச் சொல்லித் திண்டாட வேண்டிய அவசியம் இல்லாமல் போகிறது" என்றாள் என் மனைவி.

"அதெல்லாம் சரிதான். அவன் சந்திரனைப்பற்றிக் கேட்டால் ஆகாயத்தில் இருக்கும் சந்திரனையே அவனுக்குக் காட்டித் தெரியப்படுத்தி விடுவாய். ஆப்பிளைப் பற்றிக் கேட்டால் ஓர் ஆப்பிள் மரத்தைத் தேடிப் பிடித்து அதிலிருந்து ஒரு பழத்தைப் பறித்துக் காண்பித்துவிடுவாய். ஒரு நாய்க்குட்டியைப்பற்றிக் கேட்டாலும் அதைக் காட்டி அவனுக்குச் சொல்லிவிடுவாய். ஆனால், 'கடவுள் என்றால் என்ன? நீதி என்றால் என்ன?' என்றெல்லாம் அவன் கேட்டால் அப்போது எப்படிச் சொல்லி விளக்குவாய்?" என்று கேட்டேன்.

“அது ஒன்றும் அவ்வளவு கஷ்டமில்லை” என்றாள் என் மனைவி: “இன்று காலையில் அவன் என்னை, ‘அம்மா, அன்பு என்றால் என்ன?’ என்று கேட்டான். கண்ணால் பார்க்க முடியாத அன்பு போன்ற விஷயங்களைப் பற்றி அவன் கேட்கும்போது, அவனுக்கு அநுபவமாயுள்ள சிறு சொற்கள், சிறு செய்கைகள் போன்றவை மூலந்தான் அவைகளை விளக்கிக் கூற வேண்டும். இன்று காலையில் அவன் கேட்டபோது நான் என்ன கூறினேன், தெரியுமா? ‘நீ எப்போதும் என் கூடவே இருந்தால், எனக்குச் சந்தோஷமாயிருக்கிறது. இதற்குக் காரணம் அன்புதான். இரவில் நீ தூங்கும்போது நான் உனக்குக் குளிராதபடி போர்த்து விடுகிறேன். தெருவைத் தாண்டிச் செல்லும்போது உன் கையைப் பிடித்துப் பத்திரமாய் அழைத்துச் செல்லுகிறேன். ராத்திரி நீ தூங்கு முன் உனக்குக் கதை சொல்லுகிறேன். அடிக்கடி உன்னைக் கட்டி முத்தம் கொடுக்கிறேன். இதெல்லாம் உன்மீது எனக்கிருக்கும் அன்பைத்தான் வெளிப்படுத்துகின்றன’ என்று கூறினேன்.”

“ஜோனத்தான் கூறியது சரி. நீ என்னைவிடக் கெட்டிக்காரி தான்” என்றேன் அரைமனசுடன்.

மறுநாளே அவள் சொன்னபடி நடந்து பார்க்கத் தீர்மானித்தேன். ஜோனத்தான் வேகமாய் ஓடி வந்து, “அப்பா, அப்பா, பொறாமை என்றால் என்ன?” என்றான்.

“பொறாமைதானே? சொல்லுகிறேன், கேள்” என்று ஆரம்பித்தேன்: “பிறரிடம் இருக்கும் ஒரு பொருளை நமக்கு வேண்டும் என்று நினைப்பதுதான் பொறாமை. அம்மா உன் தம்பிப் பாப்பாவுக்கு ஆகாரம் கொடுத்துக்கொண்டிருக்கும்போது உனக்கும் அப்படியே அம்மா ஆகாரம் கொடுக்க வேண்டும் என்று நீ விரும்பினால், அது பொறாமையாகும். தம்பி ஒரு பந்து வைத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தவுடன், உனக்கும் அதே மாதிரி பந்து வேண்டும் என்றால், நீ அவன்மீது பொறாமை கொண்டிருக்கிறாய் என்று அர்த்தம்.”

“ஏன்? அது தப்பா?”

“அப்படி ஒன்றுமில்லை. எல்லாருக்குமே ஒவ்வொரு சமயம் பொறாமை தோன்றுவது சகஜந்தான். ஆனால், நீ இப்போது என்ன தெரிந்துகொள்ள வேண்டும் என்றால், அம்மாவும் அப்பாவும் உன்னிடமும் தம்பியிடமும் ஒரே விதமாகவே அன்பு வைத்திருக்கிறார்கள் என்பதைத்தான். தம்பி கீழே விழும்போது அப்பா ஓடி வந்து தூக்கி எடுத்தால், நீ அப்போது, ‘என்னையும் இந்த மாதிரி அப்பா எவ்வளவோ தடவை தூக்கி எடுத்திருக்கிறாரே’ என்றுதான் நினைக்க வேண்டும்; பொறாமை கொள்ளக்கூடாது.”

“சரி சரி! புரிந்தது” என்று சந்தோஷமாய்ப் பதில் கூறித் திருப்தியோடு அவன் சென்றான். எனக்கும் நான் அடைந்த வெற்றியைக் குறித்துப் பரம திருப்தி.

இப்போதெல்லாம் குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கு அவர்களுக்குப் புரியும்படி பதில் சொல்லுவது எனக்கும் என் மனைவிக்கும் வெகு சுலபமாகவே இருக்கிறது. எங்களுக்கு இது ஒரு பொழுது போக்காகவே தோன்றுகிறது. இதன் மூலம் வாழ்க்கையிலேயே எங்களுக்கு ஒரு தனி ருசி ஏற்பட்டிருக்கிறது.

'எண் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானம்' என்பார்கள்; இருதயமும் பிரதானந்தான்.

# மனித இருதயம்

## ருஸ்தம் ஜால் வக்கீல்

மனித இருதயத்தின் கதை ஐயாயிரம் வருஷங்களுக்கு முன் எகிப்திலே ஆரம்பிக்கிறது. அங்கே கலைகள் மிக உயர்ந்த நிலையை எட்டியிருந்தன; நாகரிகம் வளர்ச்சியுற்றிருந்தது. இறந்தவரின் சவங்களைப் பாதுகாத்து வைப்பது ('மம்மி' செய்வது) எகிப்துப் புரோகிதர்களின் வழக்கம். இந்தக் கலை அவர்களுக்குப் பழக்கமாகியிருந்ததால், மனித இருதயத்தின் உள் அமைப்பு அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டும். பாதுகாத்த சவத்தில், இருதயத்தை மாத்திரம் அப்படியே வைத்துவிடுவது அந்த நாளில் வழக்கம். மற்ற உள் ளுறுப்புக்களையெல்லாம் எடுத்துவிடுவார்கள். பழங்கால எகிப்தியர்களுக்கு இருதயத்தைப்பற்றி எவ்வளவு உயர்வான மதிப்பு இருந்தது என்பதையே இது காட்டுகிறது. பொருள்களைக் குறிப்பிட உருவங்களையே எழுத்துக்களாக வரையும் 'ஹைரோக்ளிஃப்' முறை பழங்கால எகிப்தியரிடம் இருந்தது. இப்படி இருதயத்தைக் குறிப்பிட அவர்கள் மனித இருதய உருவத்தை வரைவதில்லை; எருதின் இருதய உருவத்தைத்தான் வரைவார்கள். 'பாப்பிரஸ்' என்ற ஒரு வகை நாணல் தட்டை மட்டையை உரித்து ஒட்டித் தயாரித்த காகிதத்தில் அந்தக் காலத்து எகிப்தியர் எழுதிவந்தார்கள். அப்படி அவர்கள் எழுதிய சில காகிதச் சுருள்களைச் சமீபத்தில் சவக் குழிகளிலிருந்து ஆராய்ச்சிக்காரர்கள் தோண்டியெடுத்திருக்கிறார்கள். பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட இந்தக் காகிதச் சுருள்களில், இருதயம், நாடி இவைகளைப்பற்றிய ரசமான குறிப்புக்கள் காணப்படுகின்றன.

சீனா, இந்தியா இரண்டிலும் பழங்காலத்தில் நோய்களை நிதானிப்பதற்கு நாடி பார்ப்பதில் விசேஷ கவனம் செலுத்தி வந்தார்கள். சீனாவில் நாடி பார்ப்பவர்கள், வெகு நேரம் செலவிட்டு, மிக விரிவான முறைகளைக் கையாள்வார்கள். ஒவ்வொரு கை மணிக்கட்டுக்கு முன்பும் மூன்று இடங்களில், லேசாகவும் சற்று அதிகமாகவும் வெவ்வேறு விதமாக அழுத்திப் பிடித்து நாடியைக் கவனிப்பார்கள். அறுநூறு விதமான நாடித் துடிப்புகளைப் பழங் கால ஆயுர்வேத வைத்தியர்கள் குறித்து வைத்திருக்கிறார்கள். பட்சிகள், விலங்குகள், ஊரும் பூச்சிகள் இவைகளின் கதிகளை உவமையாகச் சொல்லி, அந்த நாடி ஓட்டங்களை வர்ணித்து வகைப்படுத்தி யிருக்கிறார்கள்.

மூடிய கைஅளவுக்கு மேல்

மூலம்: புக் யூனிவர்ஸிட்டி ஜர்னல் (ஆங்கிலம்: 12-9-'54), பம்பாய்-7.

இல்லை மனித இருதயம். இவ்வளவு சிறியதாயிருக்கும் அது செய்யும் வேலைகள்தான் மகா அற்புதமானவை. சுமாரான மனித இருதயம் ஒன்று, 60 வருஷ காலம் ரத்தத்தைப் 'பம்ப்' மாதிரி இறைக்கிறது. நிமிஷம் ஒன்றுக்கு 75 தடவை விகிதம் இப்படி இறைக்கிறது. ஒரு மனிதனின் உடம்பில் உள்ள அத்தனை ரத்தக் குழாய்களையும் ஒன்றுக்குப் பின் ஒன்ருக நீட்டிவைத்தால் 60,000 மைல் நீளம் இருக்கும். அறுபதினுயிரம் மைல் என்ருல், பூமியின் சுற்றளவைப் போல் இரண்டரை மடங்கு நீளமாகும். இத்தனை ரத்தக் குழாய்களுக்கும் ரத்தத்தை இறைத்துப் பாய்ச்சுவது இருதயந்தான். இருதயம் ஒரு வருஷத்தில் 3 கோடியே 70 லட்சம் தடவையும் அறுபது வருஷத்தில் 222 கோடி தடவையும் அடித்துக்கொள்கிறது. ரத்தத்தை ஒரு முறை இறைப்பதும் களைப்பாறுவதும், மறு முறை இறைப்பதும் களைப்பாறுவது மாகவே இருதயம் வேலை செய்கிறது. அறுபது வருஷத்தில் இப்படி அது வேலை செய்யும் நேரம் 22 வருஷந்தான். மீதி 38 வருஷமும் களைப்பாறும் நேரமாகும்.

இருதயம் தன் முழுச் சக்தியையும் கொண்டு எந்த நேரமும் வேலை செய்வதில்லை. இருப்பாக அபாரமான சக்தியை வைத்துக் கொண்டிருக்கிறது. நெருக்கடியோ அவசரத் தேவையோ வரும்போது, அந்த இருப்புச் சக்தி உபயோகமாகிறது. தேகத்துக்குக் கடுமையான சிரமம் ஏற்படும்போது, இருதயத்தின் சகஜமான உழைப்பு நான்கு மடங்காகக்கூடப் பெருகிவிடும்.

இருதயம் நின்ருல் மரணந் தான் என்றே சில வருஷங்களுக்கு முன் வரைக்கும் நிபுணர்கள்கூட எண்ணியிருந்தார்கள். நின்று போன இருதயத்தை மீண்டும் ஓடச் செய்து, பிழைப்பூட்டுவது சாத்தியமே என்று இப்போது நிரூபண மாகிவிட்டது. ஐக்கிய அமெரிக்காவில் இருதயம் நின்று போன 322 பேரில் 110 பேரை மீண்டும் பிழைப்பூட்டி யிருக்கிருர்கள்.

சென்ற சில வருஷங்களில் நிபுணர்கள் கண்டு பிடித்துள்ள அதிசயங்களுக்குள்ளே மிகவும் அபூர்வமான ஒன்று 'யந்திர இருதயம்' (மெக்கானிக்கல் ஹார்ட்) அல்லது 'செயற்கை இருதயம்' (ஆர்ட்டிஃபிஷல் ஹார்ட்) என்பதுதான். மனிதனின் இயற்கையான இருதயத்துக்கும் சுவாசப் பைக்கும் சற்று நேரம் ஓய்வு கொடுத்துவிட்டு, அவைகளுக்குப் பதிலாக வேலை செய்யக் கூடியது இந்த 'யந்திர இருதயம்.' அந்த நேரத்தில் இயற்கை இருதயத்திலோ சுவாசப் பையிலோ அவசியமான ரணசிகிச்சையைச் செய்கிருர்கள்.

'இருதய நோய்' (ஹார்ட் டிஸீஸ்) என்பதை இப்போது மிகவும் விரிவான பொருளில் வழங்குகிருர்கள். நேரே இருதயத்தில் ஏற்படும் கோளாறுகளைத் தவிர, தேகத்தில் உள்ள ரத்தக் குழாயில் ஏற்படும் கோளாறுகளையும் 'இருதய நோய்' என்றே குறிப்பிடுகிருர்கள். ஐக்கிய அமெரிக்காவில் இருதய நோயால் பத்துச் சாவுகள் ஏற்பட்டன என்ருல், அவைகளில் ஒன்பது சாவுகள் ரத்தக் குழாய்கள்

சம்பந்தப்பட்ட 'கிளை நோய்கள்' (ஸெகண்டரி டிஸீஸ்) காரணமாகவே நேர்கின்றனவாம். அந்த நாட்டில் ஏற்படும் மொத்தச் சாவுகளிலேயே பாதி இப்படி ரத்தக் குழாய்கள் சம்பந்தப்பட்ட 'கிளை நோய்கள்' காரணமாக நேர்கின்றனவாம். இதைப் பார்க்கும்போது, 'இருதய நோய்' என்பது எவ்வளவு கடுமையான பிரச்னை என்பது புலனாகும்.

'இருதயம் நின்றது' (ஹார்ட் ஃபெயிலியர்), அதாவது மாரடைப்பு என்றால், திடீர் மரணம் என்றே சாதாரண ஜனங்கள் எண்ணிவிடுகிறார்கள். வைத்திய நிபுணர்கள் இப்படி எண்ணுவதில்லை. உடலுக்கு வேண்டிய போஷணைத் தேவைகளைச் சமாளிக்க முடியாததாலேயே இருதயம் நின்றுவிடுகிறது என்றுதான் நிபுணர்கள் நினைக்கிறார்கள்.

மனித இருதயம் எவ்வளவு சிறியது! அதன் நிறை எவ்வளவு அற்பமானது! இதைப் பார்க்கும் போது, அது எத்தனையோ இடையூறுகளுக்கும் தொல்லைகளுக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு, ஒரு மனிதனின் ஆயுள் காலம் முழுவதும் செய்யும் வேலை எவ்வளவு பெரிய அற்புதம் என்று நாம் வியக்காமல் இருக்க முடியாது.

## வருமானம் கரையும் விதம்

ஜெர்மனியின் பெரும் பகுதிக்குப் பிரஷியா என்று முன்பு பெயர். அதற்கு அரசராக இருந்த ஒருவர் மகா ஃப்ரடெரிக். அவர் ஒரு சமயம் தம் மந்திரிகளையும் பிரபுக்களையும் அழைத்து ஒரு விருந்தளித்தார். அப்போது, "வரிகளையோ ஏராளமாக விதித்து வசூலிக்கிறோம். அப்படி இருந்தும் வருமானம் ஏன் குறைந்துகொண்டே போகிறது?" என்று அவர்களைக் கேட்டார்.

ஹுஸ்ஸார் படையின் கிழத்தளபதி ஒருவர் எழுந்து, "மாட்சிமை தங்கிய மன்னரே, அது எப்படி என்பதை இதோ உங்களுக்கு நான் காட்டுகிறேன்" என்றார். இப்படிச் சொல்லிவிட்டு, ஒரு பெரிய பனிக்கட்டியைத் தம் கையில் எடுத்துச் சிறிது திருப்பித் திருப்பிப் பார்த்தார். பிறகு, அடுத்தவரிடம் கொடுத்து, "நீர் பார்த்துவிட்டு, அடுத்தவரிடம் கொடும். இப்படியே கைமாறிக் கடைசியில் மன்னரிடம் இது போய்ச் சேரட்டும்" என்றார்.

அரசரிடம் பனிக்கட்டி போய்ச் சேர்ந்தபோது, அது ஒரு சிறு பட்டாணிக் கடலை அளவாகச் சிறுத்துவிட்டது.

—'கிறிஸ்தியன் ஸயின்ஸ் மானிட்டர்'

# கங்கை விழும் இடம்

ஜயந்த் பானர்ஜி

'பகீரதன் கங்கை கொண்டு வந்தான்' என்றால், ஆச்சரியப்படுகிறோமே; ஏன்? சித்திரகாரர் பானர்ஜியின் பிரயாணக் கட்டுரையைப் படித்தாலே அது புலனாகும்.

இமயமலையின் சாரலில் யமுனை உற்பத்தியாகும் இடத்துக்குப் போகும் வழிதான் மிகவும் கரடுமுரடானது. எங்கும் குண்டுக்கற்கள். அவைகளை வாரி அடித்துக்கொண்டு சில இடங்களில் யமுனை வேகமாகச் சென்றது.

வழியில் தாங்க முடியாத வெயில்; அக்கம் பக்கம் மலைச் சரிவுகள், பிளந்து வைத்த சுவர் போல் இருந்தன. இந்தக் காட்சி சலிப்பையே தந்தது. இருந்தாலும் யமுனோத்தரி போய்ச் சேர்ந்த போது உள்ளுக்குள் சொல்ல முடியாத மகிழ்ச்சி ஏற்பட்டது. எதிரொலியைத் தவிர வேறு எந்தச் சத்தமும் இராத அந்த இடம் தன்னந்தனியே யாரோ யோக நித்திரையில் ஆழ்ந்திருப்பதுபோல் இருந்தது. அதைப் பார்த்ததும் பக்தியினால் எனக்கு மயிர்க்கூச்செறிந்தது.

கங்கோத்தரிக்குப் போவதற்கு ஒரு மேட்டுப் பிரதேசத்தைக் கடந்தாக வேண்டும். கங்கையும் யமுனையும் கூடும் இடத்தைத் தாண்டியதும் கங்கை பாகீரதி என்ற பெயருடன் இடது பக்கம் அளித்த காட்சி அற்புதமாக இருந்தது.

சிறிது தூரம் சென்றதும் வழி காட்டிப் பலகையில் 'நேலாங் போகும் ரஸ்தா' என்று ஆங்கிலத்தில் எழுதியிருந்தது. திபேத்திய வியாபாரிகள் இந்த வழியாகத் தான் வந்து போவது வழக்கம். தொலைவில் எங்கோ திபேத்தின் எல்லை, தொடுவானத்தில் கலப்பது மங்கலாகத் தெரிந்தது; அதையே சற்று நேரம் மெய்மறந்து பார்த்தபடி இருந்தேன். பிறகு பைரவ காடி என்ற மேட்டுப் பிரதேசம் இருக்கும் வழியே நடந்தேன். இது மிகவும் செங்குத்தாக இருந்தது. ஏறக்குறைய ஏதோ சுவரில் தடியை ஊன்றிக்கொண்டு போகிற மாதிரியே இருந்தது வழி.

எப்படியடா இதைத் தாண்டப் போகிறோம் என்று திகில் மூண்டது. இருந்தாலும், அதே சமயம், "தாண்டுவதுதான் பெரிய காரியம். அதை நாம் சாதித்தே தீர வேண்டும்" என்ற துணிவு ஏற்பட்டது.

யமுனோத்தரிக்கு எப்படியோ சிரமப்பட்டு வந்து சேரவில்லையா? அதுபோல் மூச்சைப் பிடித்துக் கொண்டு நடந்தேன். மூன்று மைல்தான் இப்படி இருந்தது. அதற்கப்புறம் வழி சமமாகச்

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி: செப்டம்பர் '54); கல்கத்தா.

சென்றது. கங்கைத் தாய் அருள் சுரந்தாள். அதைத் தாண்டினதும் ஒரு மலை ஏற வேண்டியதுதான் பாக்கி; இறங்கினால் கங்கோத்தரி. அப்பாடா என்று நிம்மதியோடு பெருமூச்சு விட்டேன். உச்சியில் பைரவகாடி என்ற ஊரில் அன்று தங்கிவிட்டுப் போகலாம் என்று எண்ணியிருந்தேன். ஆனால் அங்கே பெயருக்கு ஏதோ சத்திரம் என்று ஒன்று இருந்ததே யொழிய அது இரவில் தங்கத் தகுதியான இடமாகப் படவில்லை. டீக்கடை ஒன்று இருந்தது; பால் அங்கே கிடைத்தது. அங்கே ஓர் அரை மணி நேரம் இளைப்பாறி விட்டு மறுபடியும் நடக்க ஆரம்பித்தேன். அங்கிருந்து கங்கோத்தரி ஆறு மைல் தூரம். ஒரே நேர் வழிதான். துளிக்கூட அலுப்புத் தட்டவில்லை. தேவதாரு முதலிய மரங்கள் அடர்ந்து நிழல் செறிந்த பாட்டை. வழியில் மனித நடமாட்டமே இல்லை. நாலு மைல்



கங்கோத்தரியில் உள்ள கோயில்

ஆனதும் ஓர் அற்புதக் காட்சி தெரிந்தது. நம் இதிகாச புராணங்களில் கங்கை தோன்றியதாக வர்ணித்திருக்கும் அதே மலைக் காட்சிதான். இரண்டு மலைகளின் நடுவிலிருந்து அது வளைந்து வெளி வரும் பெரும் பரப்பு அசல் மனிதனுடைய காதுபோலவே இருந்தது. இது, ஜன்னு முனிவரின் காது வழியாகக் கங்கை வந்தாள் என்ற ஐதிகத்துக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. ஆதி காலத்திலிருந்தே கங்கை வழிந்தோடி வருகிறாள்; இதுவரையில் பல தடவை வெள்ளம் வந்தும் இந்தக் காதுபோன்ற வடிவம் இன்னும் அப்படியே இருப்பது தான் ஆச்சரியம்.

கடைசியில் கங்கோத்தரிக்கே வந்து சேர்ந்துவிட்டேன். யமுனோத்தரிக்கும் இதற்கும் வித்தியாசம் இருந்தது. இங்கே ஜனங்கள் ஏராளமாக இருந்தார்கள். இதற்குக் காரணம், யமுனோத்தரியைப்போல் இங்கே வரும் வழி அவ்வளவு கஷ்டமாக இராததுதான். வீடு வாசலுக்குக் குறைவில்லை. சத்திரங்களும் இருந்தன. ஊர் எல்லைக்கு வெளியிலேயேகூடச் சத்திரம், கடைகள் எல்லாம் இருப்பதைப் பார்த்தேன். சற்றுத் தொலைவில் பாகீரதிக் கரையருகில் கோயில் தெரிந்தது. அங்கே ஜனநடமாட்டம் அதிகமாக இல்லை. பய பக்தியோடு புனிதமான பாகீரதியில் ஸ்நானம் செய்தேன். அருகில் இருந்த சத்திரத்தின் மாடியில் ஓர் அழகான அறை கிடைத்தது. எதிரே வராந்தா. அங்கிருந்து மலைச் சாரலைக் கவனித்தேன். தூரத்தில் மரப் பாலத்துக்கு அப்பால் ஒரு குடிசை தெரிந்தது. காஷாயம் உடுத்த ஒரு பெண் பிள்ளை அங்கே யாரோ யாத்திரிகர்களோடு பேசிக்கொண்டிருந்தாள். மலையின் பசுமை நடுவே அந்தக் குடிசையின் செந்நிறமும் அவளுடைய காஷாய உடையும் எடுத்துக் காட்டின.

முதலில், 'கங்கோத்தரியைத் தாண்டி என்ன இருக்கப் போகிறது?' என்று எண்ணியிருந்தேன். ஆனால் இந்தக் காட்சியைப் பார்த்த பிறகு என்னவோ ஒன்று அந்தப் பக்கம் என்னை இழுத்தது.

டீ சாப்பிட்டதும் தரம் சிங் என்ற வேலையாளுடன் மலைச்சாரல் பக்கம் போனேன்.

கங்கை தோன்றும் கோமுகியைப் பார்த்துவிட்டு அப்போது ஒரு சாது திரும்பி வந்துகொண்டிருந்தார். பனிக்கட்டி சூழ்ந்த மலைப் பிரதேசத்திலிருந்து கங்கை எப்படி வழிந்து வருகிறாள் என்பதை வர்ணித்தார். துணைக்கு ஓர் ஆளைமட்டுந்தான் அழைத்துக் கொண்டு போனாராம்.

மறுநாள் கோமுகிக்கு அதே துணையாளுடன் புறப்படுவதாகத் திட்டம் போட்டுக் கொண்டேன்.

பாலத்தைத் தாண்டி இப்போது மலைச்சாரல் பக்கம் நடந்தோம். செந்நிறக் குடிசை தெரிந்த பக்கம் போனோம். அங்கிருந்த அம்மாளுக்கு 50 வயதுக்கு இருக்கும். சாந்தமான முகம். நாங்கள் இருவரும் அவளை வணங்கினோம். அப்போது அவள் சமீபத்தில் இருந்த இன்னொரு குடிசையைக் காட்டி, "அங்கே ஒரு மகான் இருக்கிறார். அவர் பெயர் கிருஷ்ணஸ்வாமி. 30 வருஷமாக இங்கே இருந்து வருகிறார். மகா ஞானி" என்றாள் இந்தியில்.

"உங்கள் பெயர் என்ன?"

இதே சித்திரகாரர் '**கோமுகி**', அதாவது 'கங்கை பிறக்கும் இட'த்துக்குப் பிரயாணம் செய்த வரலாற்றை, அழகிய சித்திரங்களோடு 'மஞ்சரி'யின் அடுத்த இதழில் காணலாம்.

என்று விசாரித்தேன். "பகவத் பிரசாத்" என்றாள். ஆண்களின் பெயர்போல் இருக்கவே எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. பூர்வாசிரமத்தில் என்ன பெயர் என்று கேட்டேன். அவள் புன்சிரிப்போடு பேசாமல் இருந்து விட்டாள். பிறகு அவளுடன் கிருஷ்ணஸ்வாமி இருந்த குடிசைக்குப் போனோம். குடிசையின் கதவைத் திறந்து அவளே உள்ளே அழைத்துப்போனாள். பூர்ஜ இலையின்மேல் அசையாமல் தியானத்தில் ஆழ்ந்திருந்தார் கிருஷ்ணஸ்வாமி. அவர் முகத்தில் தான் என்ன தேஜஸ்! சற்று நேரம் அவரையே பார்த்தபடி இருந்தோம். பிறகு மௌனமாக வணங்கிவிட்டு வெளியே வந்தோம். அந்த அம்மாளைப் பார்த்து, "கங்கா தாஸ் எங்கே இருக்கிறார்?" என்று நான் கேட்டேன். அவள் வியப்போடும் பக்தியோடும், "அவரை எப்படி உங்களுக்குத் தெரியும்? பெரிய மகான். அவர் கோமுகிக்கு அருகில் இருக்கிறார்" என்றாள். ஏற்கனவே காசியில் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டதாகக் கூறினேன்.

இன்னும் சிறிது தூரத்தில் ராமானந்தர் என்ற யோகி இருப்பதாகக் கேள்விப்பட்டிருந்தேன். அந்த அம்மாளிடம் விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டோம். தேவதாரு மரங்கள் செறிந்த காட்டின் ஒற்றையடி வழி ஒன்றில் சென்றோம். ஓர் இடத்தில் எங்களைப் பார்த்ததும் மரத்தடியிலிருந்து ஏழடி உயரத்துக்கு ஜடை தொங்க அவதூதர் ஒருவர் எழுந்து கையில் தடியை ஊன்றி வேகமாக முன்னே நடக்கலானார். ஏற்கனவே ராமானந்தருடைய உடல் அமைப்பைப் பற்றிக் கேள்விப்பட்டதிலிருந்து இவர்தான் அந்த மகான் என்று தெரிந்துகொண்டேன். நாங்களும் தம்மைப் பின் தொடர்வதைப் பார்த்ததும் அவர் ஓர் இடத்தில் உட்கார்ந்துவிட்டார். பய பக்தியோடு அவரை வணங்கினோம்.

திரும்பி வரும் வழியில் இன்னும் அநேக சாதகர்களின் குடிசைகள் அங்கங்கே தெரிந்தன: நன்றாகக் கட்டிய செங்கல் கட்டிடங்கள்தான்! பலகையில் தங்கள் பெயரைக்கூட எழுதித் தொங்கவிட்டிருக்கிறார்கள்! இந்த மாதிரி 'விளம்பரப்படுத்திக்கொள்ளும் சாதகர்'களைப் பார்த்து ஆகப் போவது ஒன்றுமில்லை என்று எண்ணிக்கொண்டு நாங்கள் கோயிலுக்கு வந்தோம். உத்தரகாசி விசுவநாதரையும் கர்ப்பக்கிருகத்தில் பொன் முலாம் பூசிய மேடையில் கங்கைத் தாயின் உருவையும் தரிசித்தோம். கர்ப்பூர ஆரத்தி முடிவதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. மறுபடியும் சத்திரத்தின் மாடிக்கு வந்து பார்த்தபோது, தொலைவில் மலைச் சாரலில் மினுக் மினுக் என்று விளக்குகள் தெரிந்தன. பகீரதன் தவஞ் செய்த கங்கோத்தரியையும் அங்கிருந்த சாதுக்களையும் தரிசிக்கும் பெரும் பாக்கியம் கிடைத்ததை எண்ணிப் பூரித்தேன.

நாலே நாலணாத்தான் அதன் விலை;
ஆனால் அதைத் தயாரிக்க எத்தனை பேர்
எவ்வளவு சிரமப்பட்டு உழைக்கிறார்கள்!

# ரெயில்வே அட்டவணை

**'அப்ரேல்'**



"ஸார், கால அட்டவணைப் புஸ்தகம் ஒன்று கொடுங்கள்."

சில அணாக்களைக் கொடுக்கிறார் பிரயாணி. டிக்கட் விற்கும் குமாஸ்தாவோ, ரெயில்வே புஸ்தகக் கடைக்காரரோ ரெயில்வே கால அட்டவணைப் புஸ்தகம் ஒன்றை எடுத்துத் தருகிறார்.

இவர் வெகு தூரம் ரெயில் பிரயாணம் செய்யப் போகிறார் போல் இருக்கிறது. ஸ்டேஷன்களின் பெயர்கள், வண்டிகள் போகும் நேரம், புறப்படும் நேரம், எங்கெங்கே வண்டி மாற்ற வேண்டும், கிளைப் பாதைகளில் செல்ல வேண்டியிருக்குமா, பிராட் கேஜ் பாதையிலிருந்து மீட்டர் கேஜ் அல்லது நாரோ கேஜ் பாதைக்கு மாறவேண்டியிருக்குமா, எங்கே உண்டிகள் கிடைக்கும் இந்த மாதிரி அநேக விதமான தகவல்களை அந்த அட்டவணைப் புஸ்தகத்திலிருந்து தம் பிரயாணம் சம்பந்தமாக இவர் அறிந்துகொள்ள விரும்புகிறார்.

அட்டவணைப் புஸ்தகத்தைப் பிரயாணி பிரிக்கிறார். அதில் எவ்வளவு கணக்காக, ஜாக்கிரதையாக வண்டிகளின் நேரங்களைக் குறித்திருக்கிறார்கள் என்பதைக் காண்கிறார். 'எப்படி இவ்வளவு கணக்காக நேரங்களைக் குறித்திருக்கிறார்கள்!' என்று ஆச்சரியப்படுகிறார். கோடிக்கணக்கான பேர் ரெயில் பிரயாணம் செய்கிறார்கள். அவர்களுக்கும் சரி, ரெயில்வே ஊழியர்களிலுமே ஏராளமான பேருக்கும் சரி, இந்தக் கால அட்டவணையைத் துளியும் பிசகில்லாமல் ஆப்பரேட்டிங் இலாகாதார் எப்படித் தயாரிக்கிறார்கள் என்பது தெரியாது.

பிரயாணி வண்டிகளை மூன்று வகையாக ரெயில்வேக்காரர்கள் பிரிக்கிறார்கள். மெயில், எக்ஸ்பிரஸ், பாஸஞ்சர் என்பவை அந்தப் பிரிவுகள். மெயில், எக்ஸ்பிரஸ் இரண்டும் மிக வேகமாக ஓடும்; ஒன்றுக்கு மேற்பட்ட பாதைகள் பிரியும் ஜங்ஷன்களில்மட்டும் நிற்கும். நீண்ட தூரப் பிரயாணம் செய்வோருக்காகவே இந்த வண்டிகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவைகளில் ஒரே வண்டித் தொடர், பல ரெயில்வேக்களுக்குரிய பாதைகளில் ஆயிரம் மைல் வரைக்குங்கூடச் செல்லும். பாஸஞ்சர் வண்டிகள் மெதுவாகச் செல்லும்; ஒவ்வொரு

மூலம்: ஸவுத் ரெயில்வேஸ் (ஆங்கிலம்: செப்டம்பர் '54), சென்னை-1.

ஸ்டேஷனிலும் நிற்கும். ஒரே ஒரு ரெயில்வேயின் ஒரு பகுதியிலோ, சிறிது தூரமே உள்ள கிளைப் பாதையிலோ இவை செல்லும்.

பொது ஜனங்களுக்கு விற்கும் கால அட்டவணைப் புஸ்தகங்களில் குட்ஸ் (சாமான்) வண்டிகளின் போக்குவரத்து நேரங்களைக் குறிப்பதில்லை. என்றாலும், இவைகளும் அதே பாதைகளிலும் அதே பகுதிகளிலும் ஓடுகின்றன. ஆகவே, கால அட்டவணையைத் தயாரிக்கும் போது, இவைகளையுந்தான் கவனிக்க வேண்டியிருக்கிறது.

ரெயில்வே கால அட்டவணைப் புஸ்தகம் ஒன்றை மேலெழுந்தவாரியாகப் பார்த்தாலும் போதும்; ஒவ்வொரு பெரிய ஜங்ஷன் அல்லது டெர்மினஸ் (கடைசி) ஸ்டேஷனிலும் இருபது முதல் நாற்பது மெயின் லயன் வண்டிகள் வரைக்கும் வந்து சேர்வதையும் புறப்பட்டுப் போவதையும் காணலாம். இவை மாத்திரமா? கிளைப்பாதை வண்டிகள், மெயின் லயனிலேயே ஒரு பகுதியில் மட்டும் ஓடுகிற வண்டிகள், குட்ஸ் வண்டிகள் ஆகியவையும் பல வருவதும் போவதுமாயிருக்கும். நாலு பாதை, இரண்டு பாதை, ஒருபாதை இப்படி மூன்று விதத் தண்டவாளங்கள் போட்ட பிளாட்பாரங்களிலிருந்து பல வண்டிகள் ஒரே சமயத்தில் சில மைல் தூரம் சேர்ந்தாற்போல் ஓடுவதுண்டு. இப்படிப்பட்ட ஒவ்வொரு வண்டிக்கும் கால அட்டவணை தயாரிக்க வேண்டுமென்றால், மிகவும் திட்டமாகக் கணக்கிட்டாக வேண்டியிருக்கிறது. இரண்டு திசைகளிலும் வண்டிகள் சரளமாகவும் பத்திரமாகவும் ஓட வசதியாக அட்டவணை நேரங்களை அமைக்க வேண்டும்.

இதெல்லாம் போக, வண்டிகளை ஓட்டுவதில் உள்ள தொழில் நுட்பங்களையும் சிரமங்களையும் அட்டவணை தயாரிப்போர் கவனித்தாக வேண்டும்.

முதலில் எஞ்சினை எடுத்துக் கொள்ளலாம். எஞ்சினில் ஸ்டீம், டீஸெல், எலெக்ட்ரிக் இப்படி மூன்று வகைகள் இருக்கின்றன. இந்தியாவில் ஸ்டீம் எஞ்சின்கள் தான் அதிகம். ஒவ்வொரு வகையிலும் எவ்வளவு எஞ்சின்கள் இருக்கின்றன, ஒவ்வொன்றும் இழுக்கக் கூடிய சக்தி என்ன என்ற விவரங்களை, ஆப்பரேடிங் இலாகாதாருக்கு மெக்கானிக்கல் எஞ்சினீர்கள் தெரிவிப்பார்கள். கால அட்டவணை தயாரிக்கும் பொறுப்பு, ஆப்பரேடிங் இலாகாதாரையே சேர்ந்தது.

அடுத்தபடியாக, பிரயாணிகளை ஏற்றிச் செல்லக் கூடிய வண்டிகள் எத்தனை இருக்கின்றன, அவற்றில் எவ்வளவு பிரயாணிகள் செல்ல முடியும் என்ற புள்ளி விவரங்கள் வேண்டும். இவை ஆப்பரேட்டிங் இலாகாதாரிடமே இருப்பவை.

வண்டிகள் போகும் நிரந்தரமான பாதைகளின் நிலைமை என்ன? அவை எந்த வகையைச் சேர்ந்தவை? அவைகளைப் போட்டிருக்கும் பூமியின் ஏற்ற இறக்கம் போன்ற அமைப்பு எப்படி? இந்த விவரங்களையும் கவனிப்பது அவசியம். கனமான தண்டவாளப் பாதைகளில் வண்டிகள் வேகமாய்ச் செல்லலாம்; லேசான தண்டவாளப் பாதைப்

பகுதிகளில் மெதுவாகவே வண்டிகள் செல்லவேண்டும். வெகுதூரம் ஒரே மட்டமான நிலத்தில் அமைத்த பாதையில் வண்டிகள் நல்ல வேகத்தில் போகும். ஏற்ற இறக்கங்கள் உள்ள குன்றுப் பிரதேசங்களில் வேகம் குறையும். பாலங்கள், வளைவுகள், டன்னல்கள், மேட்டைக் குடைந்த 'கட்டிங்' என்ற பகுதிகள் இவைகளிலெல்லாம் வண்டிகள் இவ்வளவு வேகம் வரையில்தான் போகலாம் என்ற வரம்பு உண்டு. அதை மீறினால் அபாயம் நேரும். இந்த மாதிரி அம்சங்கள்பற்றிய தகவல்களை ஆப்பரேட்டிங் இலாகாதாருக்கு எஞ்சினீரிங் இலாகாதார் தெரிவிப்பார்கள்.

சில ரெயில்வேக்களில் வெகு தூரம் வரைக்கும் இரட்டைப் பாதைகள் போட்டிருக்கும். இவைகளில் ஓடும் வண்டிகளுக்குக் கால அட்டவணை தயாரிப்பது சுலபம். ஆனால் ஒற்றைப்பாதையே அதிகமாயிருக்கும் ரெயில்வேக்களுக்குக் கால அட்டவணை தயாரிப்பதென்றால், மிகவும் ஜாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டும். நேரங்களைக் கொஞ்சமும் பிசகில்லாமல் கணக்கிட வேண்டும். வேகமாக ஓடும் வண்டிகள் நேரந் தவறாமல் செல்ல இடங் கொடுப்பதற்காக, மெதுவான வண்டிகள் எங்கெங்கே நிற்கவேண்டும் என்பதைக் கணக்கிடவேண்டும். ஒற்றைப் பாதையில் எதிர் எதிரே வரும் வண்டிகள், எங்கே ஒன்றை ஒன்று கடக்க வேண்டும் என்பதைக் கணக்கிடுவது ஒரு பெரிய தொல்லை.

ஒரு பாதையில் குறிப்பிட்ட அளவு தூரத்துக்குள் ஒரு வண்டி இருக்கும்போது மற்றொரு வண்டி அதில் புகாதிருக்கும்படி 'ஸிக்னல்'களை அமைப்பதற்காக, பாதையைச் சில மைல் தூரத்துக்கு ஒரு பகுதியாகப் பிரிக்கிறார்கள். இதற்கு 'ப்ளாக் ஸெக்ஷன்' என்று பெயர். இந்த 'ப்ளாக் ஸெக்ஷன்'களைப் பூமியின் ஏற்ற இறக்கங்களில் சற்று நீளமாகப் பிரிப்பார்கள். குட்டையான 'ப்ளாக் ஸெக்ஷன்'களில் வண்டிகளைச் சீக்கிரமாக வரவேற்கவும் அனுப்பவும் முடியும். நீளமான 'ப்ளாக் ஸெக்ஷன்'களில் அப்படிச் செய்ய முடியாது. பாதையில் இந்த 'ப்ளாக் ஸெக்ஷன்'கள் எத்தனை இருக்கின்றன, எவ்வளவு நீளம் இருக்கின்றன என்ற விவரங்களையும் கால அட்டவணை தயாரிப்போர் கவனிக்கவேண்டும்.

ஸ்டேஷன்களின் 'யார்டு', அதாவது முற்றம் எவ்வளவு பெரியது, அதில் எத்தனை தண்டவாளங்கள் உண்டு என்பதைக் கவனிப்பதும் அவசியம். யார்டு அளவு, தண்டவாளங்களின் எண்ணிக்கை இவைகளை அநுசரித்தே, ஒரு ஸ்டேஷனில் வண்டிகளை வரவேற்கவும் அனுப்பவும் முடியும். அசௌகரியமாகக் கட்டிய ஸ்டேஷன் யார்டுகளால் வண்டிகள் தாமதிக்க நேர்கிறது. இந்தமாதிரி ஸ்டேஷன்கள் இடையிடையே இருந்தால், வண்டிகளின் மொத்தப் பிரயாண நேரத்தை அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது.

புதிய கால அட்டவணையைத் தயாரிக்கப் பல மாத காலத்துக்கு முன்பே, அதற்கு வேண்டிய தகவல்களையெல்லாம் ஆப்பரேடிங் இலாகாதார் சேகரிக்கத் தொடங்குகிறார்கள். தகவலெல்லாம் கைக்குக் கிடைத்த பிறகு, அட்டவணை நேரங்களைக் கணக்

கிடும் கடினமான வேலை ஆரம்ப மாகிறது. வண்டிகள் ஓடும் விதத்தை ‘க்ராப்’ (கோட்டுப் படம்) ரீதியாக ஆப்பரேட்டிங் அதிகாரி காண்பதற்காக ‘மாஸ்டர் சார்ட்’டுகள் என்ற கட்டமிட்ட கோட்டுப் படங்களை, பகுதி பகுதியாகத் தயாரிக்கிருர்கள். இந்தக் கோட்டுப் படங்களில், ஒவ்வொரு வண்டியின் முழுப் பிரயாணத்தையும் கோட்டு உருவில் வரைகிருர்கள். இந்தக் கோட்டுப்படங்களைப் பார்த்தாலே போதும்; வண்டிகள் எந்த எந்த ஸ்டேஷன்களில் நிற்கின்றன, எங்கே ஒன்றை ஒன்று கடக்கின்றன, எது எதை முந்தவேண்டும், ஓரிடத்திலிருந்து மற்ருேரிடத்துக்குப் போகும் நேரம் என்ன, நேராகப் போகும் வண்டிகளிலிருந்து எந்தக் கிளைப்பாதை அல்லது பகுதிப்பாதை வண்டிகளுக்கு வண்டி மாற வசதி (கனெக்ஷன்) கொடுக்கலாம் என்பவை போன்ற ஏராளமான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

கால அட்டவணை அதிகாரியும் அவருடைய உதவி அதிகாரிகளும் மிகுந்த சிரமப்பட்டு உழைத்துத் தயாரித்த கால அட்டவணை, பிறகு அச்சுக்குத் தயாராகிறது. ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சாகி, டிக்கட் விற்கும் குமாஸ்தாக்களிடமும் ரெயில்வே புஸ்தகக் கடைகளிடமும் போய்ச் சேர்கின்றன.

கால அட்டவணைப் புஸ்தகம் ஒன்றை ஒரு பிரயாணி வாங்கி, அதில் தமக்கு வேண்டிய தகவல்களை இமை நேரத்தில் பார்த்தறிந்துகொள்கிருர். ஆனுல், எவ்வளவு பேர் எத்தனை மாத காலம் எவ்வளவு சிரமப்பட்டு, எத்தனை சிக்கலான கணக்கெல்லாம் போட்டு, இந்த அட்டவணையைத் தயாரித்திருக்கிருர்கள் என்பதை அப்போது அவர் துளியும் உணர்ந்திருக்க மாட்டார். இத்தனை பேரின் இவ்வளவு உழைப்பின் பலனையெல்லாம் நாலே நாலணுக் காசைக் கொடுத்து, அவர் பெற்றுவிடுகிருர்.

### ஆபத்தில் உதவினுல்

ஒரு மனிதனுக்கு நீங்கள் ஆபத்தில் உதவினுல், ஒன்று மாத்திரம் நிச்சயம். அவன் மறுபடியும் ஒரு சமயத்தில் கண்டிப்பாய் அதை நினைவு கூர்வான்; அதாவது, அவனுக்கு மறுபடியும் ஆபத்து வரும்போது!

—‘தி இங்கிலீஷ் டைஜெஸ்ட்’

### பயன் இல்லாதவை

கருமியிடம் பணம் இருந்து என்ன பயன்? அயோக்கியனிடம் அறிவிருந்து என்ன பயன்? நற்குணங்களும் வீரமும் இல்லாதவனிடம் அழகிருந்து என்ன பயன்? ஆபத்துக் காலத்தில் உதவாத நண்பன் இருந்து என்ன பயன்?

—பிருகஸ்பதி நீதி ஸாரம்

**சரித்திரத்துக்கும் முந்திய காலத்துக் கலையைப் புலப்படுத்தும் இடம்—**

# புராதன மாளவம்

**வி. எஸ். வாகண்கர்**

இந்தியா ஆதிகாலத்திலிருந்தே நாகரிகத்தில் சிறந்த நாடு. மத்திய ஆப்பிரிக்கா, மலாயா முதலிய நாடுகளும் உஷ்ணப் பிரதேசங்களே என்றாலும், அங்கே அடிக்கடி மழையும் பெய்து கொண்டேயிருக்கும். அதனால் அங்கே காடுகள் விசேஷம். ஆனால் இந்தியாவின் சீதோஷ்ண நிலை அந்தமாதிரி இல்லை; இங்கே காடுகள் குறைவு. பழங்காலத்திலும் ஏறக்குறைய இதேமாதிரி தான் இருந்திருக்க வேண்டும்; அப்படி அதிகமான வித்தியாசம் இருந்திராது.

கிரீஸ், இத்தாலி, பாலஸ்தீனம், எகிப்து போன்ற நாடுகளில் ஆராய்ச்சியாளர், தீவிரமாகப் பழம் பொருள்களைத் தோண்டி எடுக்கும் வேலையில் பல வருஷ காலமாக ஈடுபட்டு வருகிறார்கள். ஆயினும் அவைகளை விடப் பழஞ்சிறப்புள்ள இந்தியாவில் இப்போதுதான் அந்தத் துறையில் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். காடுகள் அப்படி அதிகமாக இராமல் கற்பாறைகள் கொண்டது தென்னிந்தியா. அடிக்கடி புதிது புதிதாகப் பழங்கால நகரம், நாகரிகம் இவற்றின் சின்னங்களை, அங்கே தோண்டி எடுத்து வருகிறார்கள். சிந்து வெளியில் மொஹஞ்சதாரோ, ஹரப்பா இந்த இடங்களில் பழைய நாகரிகச் சின்னங்களைக் கண்டுபிடித்தது முதல், தொடர்ந்து எல்லைப்புரம், ஹஸ்தினாபுரம், பிஹார், நர்மதை, சம்பல், பிரம்மபுத்திரா பிரதேசம் முதலிய இடங்களில் இப்படிப் பல பொருள்கள் கிடைத்தன. இந்துக்கள் பூமியை 'ரத்தினகர்ப்பா' என்பார்கள்; அதாவது, வயிற்றுக்குள் அரிய ரத்தினக்கற்களைப் புதையலாக வைத்திருப்பவள் என்று அர்த்தம். இப்போது கிடைக்கும் பழங்கால மனிதர்களின் எலும்புகள், கல் கருவிகள், பானை, ஜபமாலைக்குப் பயன்படும் படிகமணி, நாணயம் இவைகளையும் இந்த மாதிரி அரும் புதையல் என்றே சொல்ல வேண்டும். சிந்துநதிப் பிரதேசத்தில் கிடைத்த பழம் பொருள்களைக் கவனித்தால், இந்திய நாகரிகம் கி. மு. 4000 ஆண்டுக்கு முன்பே சிறந்து விளங்கியத தெரியவரும்.

மத்திய இந்தியாவில் காட்டுப் பிரதேசத்தில் ஒரு சமயம் சுற்றுப் பிரயாணம் செய்ய நேர்ந்தது.



சம்பல் பிரதேசத்தில் அகப்பட்ட மண் பாண்டங்கள்

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்: அக்டோபர் '54), கல்கத்தா.



மண்பாண்டம் ஒன்றின்மீதுள்ள மான் சித்திரம்

அங்கே மனிதர்கள் குறைவு. அங்கிருந்து தான் அருமையான பல பழம் பொருள்கள் கிடைத்திருக்கின்றன. அவைகளில் பலவற்றை மியூசியங்களில் காணலாம். ஸ்காந்த புராணத்தில் மாளவ நாட்டுப் பழங்குடிகளான பில்லர்கள், நிஷாதர்கள் முதலியவர்கள் வேனனின் துடையைக் கடைந்தபோது தோன்றினார்கள் என்று ஓர் இடத்தில் வருகிறது. வேனனுடைய மகனான பிரிது வைன்யன் என்பவன் சாக்ஷுஷ மன்வந்தரத்தில் மனித சமூகத்தின் முதல் அரசனாக இருந்தான் என்ற வரலாறும் ரசமானது. இவன் நர்மதைப் பிரதேசத்தில் ஒரு நாட்டை ஸ்தாபித்தான். அதற்கு முன்னமே அங்கே ஆற்றங்கரையிலும் ஏரிப் பக்கங்களிலும் உள்ள காடுகளில் பல மக்கள் வாழ்ந்து வந்ததாகத் தெரிகிறது. அவர்கள் கனியும் கிழங்கும் உண்டு வந்தார்கள். இப்படி மாளவம் அல்லது அவந்தி நாட்டுப் பழங்கால நாகரிகத்தைப்பற்றி முதல் முதலாகப் பத்ம புராணத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. அது முதல் மாளவ நாடு கலை, பண்பு, வீரம், செல்வம் இவைகளில் முன்னணியில் நின்று வருகிறது.

இந்த அவந்தி நாடு என்ற உஜ்ஜயினியில்தான் சிவபெருமானின் மாமனாரான தட்சப்பிரஜாபதி தவம் செய்தார். இங்கேதான் அந்தகாசுரனைச் சிவபெருமான் கொன்றார். திரிபுராசுரனையும் அவர் இங்கேதான் வென்று அவன் சொத்துச் சுதந்தரத்தைக் கைப்பற்றினாராம். (சம்ஸ்கிருதத்தில் 'உத்' என்றால் செல்வம், 'ஜைனி' என்றால் வென்றவர் என்று பொருள்.) அவந்தி நாட்டுக்கு உஜ்ஜயினிதான் தலைநகராக இருந்தது. ('அவ' என்றால் காத்தல் என்று பொருள்.) அசுரர்களின் கோபத்தினின்றும் காத்ததால் அதற்கு அந்தப் பெயர் வந்தது. உஜ்ஜயினிக்கு இன்னொரு பெயர் பிராதிகல்பம்; அதாவது, கல்பகாலம் முதல் இருப்பது என்று பொருள். நாம் சுவேத வராக கல்பத்தில் வைவஸ்வத மன்வந்தரத்தில் வாழ்ந்து வருகிறோம்.

இதுவரையில் சரித்திர காலத்துக்கு முந்திய நாகரிகங்களுக்குள் சிந்துப் பிரதேசத்து நாகரிகந்தான் மிகப் பழமையானது என்று எண்ணி வந்தார்கள். சமீபத்தில் பிக்கானீர், நர்மதைப் பிரதேசம், ரங்கபூர், சம்பல் பிரதேசம், தக்காணம் இங்கெல்லாம் கற்கால நாகரிகத்தின் சின்னங்கள் பல கிடைத்திருக்கின்றன. போபாலில் கண்டெடுத்த சரித்திர காலத்துக்கு முந்திய சித்திரங்களும், மேல் நர்மதைப் பிரதேசத்து ஆதிக் கற்காலக் கருவிகளும் இதுவரையில் கிடைத்தவற்றுள் பழமையானவை. நுணுக்கமான சிறு கற்களில்

செதுக்கிய கருவிகள் பலவற்றை இப்போது கண்டெடுத்திருக்கிறார்கள்.

சிந்துப் பிரதேசத்தில் ஆதி காலத்தில் மண் வினைஞர்கள் பானை முதலியவற்றை வனைந்த முறையும் இந்தக் காலத்தில் இந்தியாவில் வழங்கும் முறையும் ஒரே மாதிரிதான் இருக்கின்றன. நிறம், வகை, மண்ணின் தரம் இவைமட்டும் மாறியிருக்கின்றன. ஆதிகாலத்தில் தயாரித்த பாண்டங்களின்மேல் ஒருவித மெருகு எற்றி வந்தார்கள். பாண்டம் சூடாக இருக்கும்போதே, களிமண் வில்லையையும் மணலையும் அதன்மேல் தேய்ப்பது வழக்கம். மரக்கோந்து, அரக்கு, எண்ணெய் இவைகளையும் உபயோகிப்பார்கள்; அப்போது பாண்டங்களில் மெருகேறிப் பளபளவென்று காட்சி அளிக்கும். அமெரிக்காவிலும் ஆப்பிரிக்காவிலும் இது சர்வ சகஜம். இந்தியாவில் 'அபேடிஷன் இண்டிகம்' என்ற ஒருவகைப் பச்சிலையின் சாற்றைப் பிழிந்து மெருகேற்றி வந்தார்கள். அதனால் பாண்டங்கள் கறுப்பாகவும் நிகுநிகுப்பாகவும் விளங்கின. இப்போதும் எண்ணெய் விட்டுச் செங்காவி வில்லையால் தேய்த்தும் இரண்டொரு நாள் உலர விடுவார்கள். பிறகு 'அகேட்', 'க்வார்ட்ஸ்' என்ற ரத்தினக் கற்களையோ, படிகக் கல்லையோ அதன்மேல் தேய்த்து மெருகேற்றுகிறார்கள்.

அந்தக் காலத்தில் உபயோகித்த வர்ணங்களை இப்போதும் பயன்படுத்துகிறார்கள். உள்ளூர்க் களிமண்ணிலிருந்தே இப்படிச் செய்கிறார்கள். இந்த வகைக் களிமண்ணை மிகவும் சன்னமாகப் பொடி செய்து, மைரபோலன், இங்கிக்காய், வேல் போன்ற சில மரப்பட்டைகள், கோந்து இவைகளோடு குழைத்து வர்ணம் தயாரிக்கிறார்கள்.

சிந்துப் பிரதேசத்தில் ஆதி காலத்து மக்கள் சூளை போட்டு வந்த இடங்களை ஆராய்ச்சியாளர் கண்டெடுத்தாலும், இந்தச் சம்பல் பிரதேசத்தில் அப்படி ஒன்றும் காணவில்லை. இங்கே கிடைத்த பழம் பானைகளைக் கவனித்ததில் சில அரைகுறையாகச் சுட்டும் அதிகமாகச் சூடேறியதால் பல பானைகள் தீய்ந்து போய் நிறம் மாறியும் இருந்தன.

வேதத்தில் மண் பாண்டங்கள் செய்வதைப்பற்றிப் பல இடங்களில் சொல்லியிருக்கிறது. இருந்தாலும், அதைச் செய்பவன் இன்னான் என்று அதில் குறிக்கவில்லை. ஓர் இடத்தில் மட்டும் ஏழு வகைத் தொழிலாளிகளைப்பற்றி வருகிறது: "சொர்க்கத்திலிருந்து ஏழு கைத்தொழில் நிபுணர்களை அழைத்து வந்தார்கள். அவர்கள் நாள்முழுதும் பாடிக்கொண்டே வேலை செய்தபடி இருந்தார்கள்."

நம் சாஸ்திரங்களில் இவர்களை ஓவியர்கள், சிற்பிகள், நட்டுவர்கள், கவிஞர்கள், பாடகர்கள், கொல்லர்கள், வாத்தியக்காரர்கள் என்று குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். மண்வினைஞன் சிற்பி வகையைச் சேர்ந்தவன். உணாதி சூத்திரத்தில் அவனைக் குலாலன் என்று குறிப்பிட்டிருக்கிறது; பராசரரும் உசனஸ் என்பவரும் அவனைக் 'கும்பகாரன்' என்கிறார்கள்.

வேதத்தில் பாண்டங்களுக்குரிய சில சம்ஸ்கிருதப் பெயர்கள்

இவை: கடம், கலசம், பாத்ரம், பாஜனம், ஸ்தாலி, ஊகம், ரிஜூஷ ணம், சமஸம், கும்பம், கும்பினி, கடபர்த்தா, கடமேதானகம், கட ராஜம் முதலியவை.

பாண்டம் செய்யும் முறையை யஜூர் வேதத்தில் காணலாம்; மகாவீர யக்ஞத்துக்குரிய பானை செய்யும் முறையை அதில் வர்ணித் திருக்கும் விதம் இது: "ஒளிர்ந்து விளங்கும் த்யாவா ப்ருதிவியே, இந்த உலகத்தில் யக்ஞ பூமியி லிருந்து கொண்டுவந்த நீர், மண் இவைகளின் துணைக் கொண்டு பானை வனைகிறேன். யக்ஞத்தில்



நாகதா பிரதேசத்தில் கிடைத்த நாணயங்கள்

அதுதான் முக்கியமானது. உன்னை எடுத்து நீரோடு கலக்கிறேன். உன்னைத் தொட்டுத் தட்டி மெரு கிடுகிறேன். குதிரைச் சாணியை எரித்து, அந்தத் தீயில் உன் னைச் சுட்டு வேக வைக்கிறேன். அடுக்களையிலிருந்து ஆட்டுப்பால் எடுத்து உன்மேல் தெளிக்கிறேன். ஓ மகாவீரமே! நீ சந்திர சூரியர் களைப்போல் ஒளிர்கிறாய்!"

யஜூர் வேதம் 39-ஆம் காண்டி கையில் மேலே சொன்ன ஒவ் வொரு காரியமும் வெவ்வேறு தேவதைகளுக்கு அர்ப்பணம் செய் யப் பெற்றிருக்கிறது.

மாளவத்தில் மண்ணால் செய்த பொம்மைகள் ஏதோ சில மட்டும் கிடைத்தன: இரண்டு காளை உரு வங்கள், அலங்கார வேலைப்பாடு அமைந்த முத்திரை, மொஹஞ்சதா ரோவில் கிடைத்தது போன்ற ஒரு தலை (குஷான வம்சத்தைச் சேர்ந்த தாக இருக்கலாம்), களிமண்ணால் ஆன பூச்சு மட்டைகள், வண்டிச் சக்கரங்கள் இவைதான். $19 \times 9 \times 3\frac{1}{2}$ அங்குலம், $15 \times 15 \times 3$ அங்குலம், $19 \times 15 \times 4$ அங்கு லம். அளவுள்ள செங்கற்களும் பொதுவாக அங்கங்கே கிடைத் தன. பல இடங்களில் மேடுகளை வெட்டி எடுத்த பாகங்களில் கட்டிட அமைப்புக்களைத் தெளிவாகக் காணலாம். தாடவாடா கோட் டைச் சுவரில் அமைத்த கற் கள் நன்றாகத் தெரிகின்றன. இந்தியாவில் செங்கல்லை ஆதியிலிருந்தே பயன்படுத்தி வருகிறார்கள். அங்கீரஸ் என் பவரே இந்தக் கலையைச் சிருஷ்டித்தவர்.

ஆதியில் பல நகரங்கள் இந் தப் பிரதேசத்தில் இருந்ததாக வும் பழைய நூல்களிலிருந்து தெரி கிறது. சரித்திர காலத்துக்கு முந்திய இந்த இடங்களெல்லாம் தாசாபுர், உஜ்ஜயினி, தாரா, மாகிஷ்மதி இந்தமாதிரி பழைய நகரங்களை இணைக்கும் வழியில் இருக்கின்றன. இவை பொதுவாக அங்கங்கே உள்ள ஆற்றங்கரை யின் கிழக்குப் பகுதியில் உள்ளன.

இவ்வளவு சிறந்த கலாசாரத்தை வளர்த்த மக்கள் யார் என்பதை அறிவதுதான் சிரமமாக இருக் கிறது. அவர்கள் அசுரர்களா, ஆரியர்களா, நாகர்களா எந்த

இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவில்லை. புராணங்களில் அந்தகாசுரனைக் கொன்று, திரிபுரனைச் சிவபெருமான் வென்றதாக வருகிறதே, இதிலிருந்து அசுரர்களின் கலாசாரம் அங்கே ஏற்கனவே இருந்திருக்க வேண்டுமென்று சொல்லலாம்.

இங்கே தோண்டி எடுக்கும் போது சில பாகங்களில் இடை இடையே பூமியில் மண்கருகிச் சாம்பலும், கரிந்த மண் பாண்டத் துண்டுகளும் மனித எலும்புகளும் கிடைக்கின்றன. இதிலிருந்து சில காலத்துக்கு ஒருமுறை மாளவ நாட்டில், யாரோ பலம் மிக்க பகைவன் வந்து அங்கே வாழ்ந்து வந்த மக்களைத் தாக்கியிருக்க வேண்டும் என்றும், நாளடைவில் அந்த மக்கள் அழிந்தோ, பலங் குன்றியோ போயிருக்க வேண்டும் அல்லது வேறு இடங்களுக்குச் சென்று குடியேறியிருக்க வேண்டும் என்றும் தெரிகிறது. மாந்தசோர், ஜவ்ரா, உஜ்ஜயினி இங்கெல்லாம் கிடைத்த பாண்டங்கள் இந்தப் பழைய கலாசாரத்தின் சின்னங்களே. இந்தக் கலாசாரம் அதோடு அழிந்தும் இருக்கலாம்; இல்லாவிட்டால், தம்மை வென்ற மக்களோடு அந்தப் பழங்குடிகள் ஒன்றிப் போய் இருக்கலாம். சிந்துப் பிரதேசத்திலும் இப்படியே பல பழைய மேடுகளைத் தோண்டியபோது மண் கருகிக் கிடந்த பாகங்கள் கிடைத்தன.

அதே காலத்தைச் சேர்ந்த மற்றக் கலாசாரத்துக்கும் சம்பல் பிரதேசக் கலாசாரத்துக்கும் ஏதாவது சம்பந்தம் உண்டா என்று ஆராய்ந்ததில் சில விஷயங்கள் முடிவாகத் தெரிந்தன:

நாகதாவில் கிடைத்த பாண்டங்களில் குறுக்கும் நெடுக்குமாக அமைந்த சதுர வடிவங்களும், வளைவுகளும், கொக்கிபோன்ற அமைப்புக்களும் தீட்டியிருந்தன. ரங்கபூர், ஜூகார் இந்த இடங்களுள் கிடைத்தவற்றில் சூரிய கிரணங்களைப்போல் தீட்டியிருக்கிறது. ரங்கபூரிலும் நரு-ஜோதாரோவிலும் மேட்டின் அடிப்பாகத்தில் ஆறுவது அடுக்கு (லேயர்)ப் பகுதியில் கிடைத்த பாண்டங்கள் நாகதாவில் 7-ஆம் அடுக்கில் கண்டெடுத்த சின்னங்களைப் போலவே இருக்கின்றன. நீபவல்லி பாண்டங்களில் ஒருவிதச் சிவப்புக்கோடு இட்டிருக்கும். இதேமாதிரி பாண்டங்கள் ரங்கபூரில் ஏழாம் அடுக்கில் கிடைத்தன. லேசான மஞ்சளும், சாக்கொலேட் நிறமும் உள்ள இந்தச் சம்பல் பிரதேசப் பாண்டங்கள் ரங்கபூரில் 11, 12-ஆம் அடுக்குகளில் கிடைத்தவற்றைப் போலவே இருக்கின்றன. நாகதாவில் கறுப்பு மெருகிட்ட பாண்டங்களில் கீறியிருக்கும் கோல வேலைப்பாட்டைப் பார்த்தால், ஜோர்வியில் கற்காலத்தில் செய்த பெரிய கல் பாண்டங்களிலும் புதைதாழிகளிலும் உள்ளதைப் போலவே இருக்கிறது. குல்லியில் கிடைக்கும் பாண்டங்களில் கீறியிருக்கும் அரச இலைகளின் வடிவமும் நாகதாவில் கிடைத்தவற்றில் உள்ள ஜாவ்ரா இலைகளின் வடிவமும் ஒரே மாதிரி இருக்கின்றன. சாதாரண மான், புள்ளி மான், இன்னும் ஏதோ ஒரு பிராணியின் பின்பாகம் இவைகளையெல்லாம் கவனிக்கும் போது ஹரப்பா சித்திரங்களைப் போலவே இருக்கின்றன. இயற்

கையை ஒட்டி அமையாமல், பழம் பத்ததியில் அலங்காரத்துக்குத் தீட்டிய சித்திரங்களாகவே இவை காண்கின்றன.

தியாலா சித்திரங்களில் உள்ள ஒரு விசேஷம், அவைகளில் புள்ளி மான் இருப்பதே. சம்பல் பாண் டங்களிலும் முக்கியமாக விளங்கு வது புள்ளி மானே. இருந்தாலும், சூசா, தியாலா இந்த இடங்களி லிருந்து இந்தச் சித்திர ரீதியை இவர்கள் கையாண்டதாகச் சொல்லிவிடுவதற்கில்லை. இவை சம்பல் மண்வினைஞர் தம் சொந்த யுக்தியால் தீட்டியவையாகவே இருக்க வேண்டும். நாகதாவில் இன்னும் ஒரு விநோதப் பிராணி யின் உருவமும் இருக்கிறது; இது ஆராய்வதற்குரிய விஷயம். மற்றச் சித்திரங்களுக்கும் இதற்கும் அதிக வேற்றுமை இருக்கிறது. இது மான் சித்திரத்தைப் போல் ஒழுங்காக அமையாமல் பக்குவப் படாத கையால் தீட்டிய மாதிரி இருக்கிறது. ஆகவே, வேறு வகைச் சித்திரகாரர்கள் இதைத் தீட்டி யிருக்கலாமென்று தோன்றுகிறது.

அலங்கார ரீதியில் தீட்டிய சித்திரங்கள்-முக்கியமாக மிருகங் கள், தாவரங்கள் இவைகளைக் குறிக்கும் சித்திரங்கள் - பழம் பத்ததியில், கோலம் எழுதும் வகை யில் அமைந்துள்ளன. பாண்டங் களைச் சுற்றி இவை வட்டமாக அமைந்துள்ளன. பல பாண்டங் களில் மேல்பாகத்தில் அடுத் தடுத்து மானின் உருவம் தீட்டி யிருக்கிறது. பொதுவாகச் சிவப்பு மண் பாண்டங்களில்தான் இந்த மாதிரி அலங்காரங்களைக் காண லாம். லேசான மஞ்சள் மண் பாண்டங்களில் இப்படி விசேஷ மாக எதுவும் காணவில்லை.

தாடவாடாவில் கிடைத்த பூப் பொறித்த ஒரு முத்திரை ஜூகாரில் கிடைத்த முத்திரை களைப் போலவே இருக்கிறது. சம்பல் பிரதேசம், சிந்துநதிப் பிர தேசம் இரண்டுக்கும் வெகுதூரம் இருந்தாலும், நெருங்கிய சம்பந்தம் இருந்திருக்க வேண்டுமென்று, இதிலிருந்து தெரிகிறது. இடையே தார் பாலைவனம் பெருந்தடையாக இருந்தபோதிலும் மண் பாண்டக் கலையில் பரஸ்பரம் சில சித்திர ரீதிகளை இரண்டு இடத்து மக்களும் எடுத்துக்கொண்டார்கள் என்று தெரிகிறது. அந்தக் காலத்து மக்களின் சமூக அரசியல் உறவுக்கு இது ஒரு சான்றாக விளங்குகிறது.

இப்படிச் சிந்துப் பிரதேசத்துக் கலாசாரத்துக்கும் சம்பல் கலா சாரத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் இருந்தாலும் நாகதா, ராஜபுரா, தாடவாடா இவைகளில் கிடைத்த பாண்டங்களில் காணும் சித்திர ரீதியே அலாதியானது; அதாவது, பாண் டத்தின் சில பகுதிகளில்தான் இப்படிச் சித்திர வேலை அமைந் திருக்கிறது. குறுக்கும் நெடுக்கு மாகவுள்ள சதுரங்கள், படிபோல் அமைந்த கோலம், பல நிறத்தில் படிந்தவை மாதிரி விளங்கும் கோடுகள் இவ்வெல்லாம் சம்பல் பிரதேசத்துக்கே உரிய சித்திர அமைப்புக்கள்.

புனா சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் சங்காலியா என்பவருடைய மேற்பார்வையில் மாகிஷ்மதியைத் தோண்டிக் கண்டு பிடித்திருக்கிறார்கள். இப் படி இன்னும் பல இடங்களைத் தோண்டி எடுக்க வேண்டும்.

# கார்ட்டூன் கதம்பம்



பாகிஸ்தான் - இந்தியா சகோதரத்துவம்.

—'அமிர்தபஜார் பத்திரிகை'



அமெரிக்கப் பள்ளிக்கூடங்களில் நீக்ரோவைச் சேர்க்கக் கூடாதென்று வெள்ளைக்காரக் குழந்தைகளே எதிர்க்கின்றன.

—'சங்கர்ஸ் வீக்லி'

# முஸோலினி சிங்க வேட்டை

★

**அபூர்வ மேதை என்று இத்தாலிய சர்வாதிகாரி முஸோலினியை ஒரு சமயம் பெர்னார்ட் ஷா புகழ்ந்தார். இரண்டாவது உலக யுத்தத்தில் எதிரியாகிவிட்டபோது, அதே முஸோலினியை எல்லாரும் கேலி செய்யத் தொடங்கிவிட்டார்கள். ஆகவே, இந்த வரலாற்றை நாம் எவ்வளவு தூரம் நம்பலாமோ, அதைச் சொல்ல முடியாது. ஆயினும், இதில் வரும் வேட்டைக்காரரே சொல்லியுள்ள விவரங்களை ஆதாரமாகக் கொண்டது இந்தக் கட்டுரை.**

இத்தாலிய சர்வாதிகாரியாக இருந்து, இரண்டாவது உலக யுத்தத்தில் அடியோடு நாசமானாரே, அந்த முஸோலினியின் புகழ் உச்ச நிலையில் இருந்த காலம் அது. அப்போதுதான் அவர், நாடு பிடிப்பதற்காக அபிஸீனியா மீது படையெடுத்து வென்று அதை விழுங்கியிருந்தார். அது ஜீர்ணமாக வேண்டுமே, அதற்காக அபிஸீனியா மக்களிடம் பிரசாரம் செய்ய வேண்டி யிருந்தது. முஸோலினி ஒரு வீராதி வீரர், வேட்டையில் அசகாய சூரர் என்றெல்லாம் அபிஸீனியர் நினைக்கும்படி செய்ய வேண்டும் என்று இத்தாலியக் கல்வி மந்திரி இலாகாதார் தீர்மானித்தார்கள். அந்த இலாகாவின் போட்டோ நிபுணரான கென்னாரோ பாக்கியோ என்பவரை இந்தக் காரியத்துக்காக அனுப்பினார்கள். அலெக்ஸாண்டர் லேக் என்ற பிரபல வேட்டைக்காரரிடம் அந்தப் போட்டோ நிபுணர் சென்றார்.

வேட்டைக்காரர் ஒரு சிங்கத்துக்கு மிகவும் கிட்ட நின்றுகொண்டு சிங்கம் பாயும்போது அதைச் சுடவேண்டும். அப்போது போட்டோக்காரர் ஸினிமா படம் பிடிக்க வேண்டும். அந்தப் படத்தில் வேட்டைக்காரருக்குப் பதிலாக முஸோலினியைப் பதித்துவிடவேண்டும்; அதாவது 'டப்' செய்யவேண்டும். இந்த ஏற்பாட்டை வேட்டைக்காரரிடம் போட்டோ நிபுணர் சொன்னார்.

சிங்கமே பல நூற்றாண்டுகளாக அபிஸீனிய நாட்டின் சின்னமாக இருந்து வருகிறது. ராணுவ வீரர்கள் தலையணிகளில் சிங்கத்தின் பிடரி மயிரை இணைத்திருப்பார்கள். இது அவரவரே கொன்ற சிங்கத்திலிருந்து எடுத்த பிடரி மயிராகும். எந்த அபிஸீனிய வீரரும் அணிந்திருக்கக்கூடிய பிடரி மயிரையும்விடப் பெரிய பிடரி மயிரைத் தாம் அணிய வேண்டும் என்று முஸோலினி விரும்பினார். பயங்கரமான கர்ஜனை புரியும் சிங்கம் ஒன்றை மிக அருகே நின்று இதற்காக அவர் வேட்டையாடியது போல ஒரு ஸினிமாவைத் தயாரித்து

அபிஸீனிய மக்களுக்குக் காட்ட விரும்பினார்கள்.

வேட்டைக்காரர் இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்க முதலில் கொஞ்சம் தயங்கினார். ஏனென்றால், உறுமிப் பாயும்படி சிங்கத்தைக் கிளப்பிவிடுவது சுலபமான காரியம் அல்ல. தவிர, சிதைந்து போகாமல் சுத்தமான பிடரி மயிர் உள்ள சிங்கத்தைக் காண்பதே அசாத்தியம். ஆனால் 600 பவுனுக்கு ஒரு 'செக்'கைப் போட்டோக்காரர் நீட்டியதும் வேட்டைக்காரருக்குச் சபலம் தட்டியது. ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டார்.

பிறகு, போட்டோக்காரருக்குச் சிங்கத்தைப்பற்றிய சில ரகசியங்களை வேட்டைக்காரர் எடுத்துச் சொன்னார்:

"சிங்கங்கள் ரொம்ப அழகும் கம்பீரமும் மூர்க்கமும் தைரியமும் உள்ளவை என்றெல்லாம் ஜனங்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்களே; அது உண்மை அல்ல. சிங்கங்களை மிதமிஞ்சி உபத்திரவப் படுத்தினாலொழிய, அவை பாட்டுக்குத் தங்கள் காரியத்தைப் பார்த்துக்கொண்டு போகும்; தீனிக்காகமட்டும் கொல்லுமே தவிர, வீணே கொல்லுவதில்லை. தாமாகச் செத்த மிருகங்களைத்தான் பெரும்பாலும் அவை தின்னும். சின்ன மான் அகப்பட்டால், பெரிய மானை அவை கொல்ல மாட்டா. நோய் நொடியுள்ள அல்லது நொண்டியான மிருகம் அகப்பட்டால், ஆரோக்கியமான மிருகங்களை அவை தாக்குவதில்லை. சின்னஞ் சிறு சுண்டெலிகள் ஏராளமாக அகப்படும்போது, அவைகளையே தின்றுவிட்டுச் சிங்க ராஜா சும்மா இருந்துவிடும்.

"யானை, காண்டாமிருகம், நீர் யானை இவை பெரியவைகளாக இருந்தால், சிங்கம் அண்டுவதில்லை; இவை குட்டிகளாயிருந்தால்தான் கொல்லும். காட்டெருமையை ஒரே சிங்கம் தாக்குவதில்லை: இரண்டு மூன்று சிங்கங்கள் சேர்ந்தே தாக்கும். ஒரு சமயம் மூன்று சிங்கங்களை ஒரே ஒரு பெண் காட்டெருமை எதிர்த்து வென்றதை என் கண்ணால் பார்த்தேன். அது ஒரு சிங்கத்தை முட்டிக் குடலைக் கிழித்தது; இரண்டாவது சிங்கத்தைக் காலடியில் போட்டுத் துவைத்தது; மூன்றாவது சிங்கத்தை ஓட ஓட விரட்டியது.

"மனிதனைக் கொன்று தின்னும் சிங்கங்கள் அபூர்வம். கிழடு தட்டிய பொக்கை வாய்ச் சிங்கமும் நோயுற்றுத் தளர்ந்துபோன சிங்கமுந்தான் மனிதனைக் கொல்லும். இப்படிப்பட்ட ஒரு சிங்கத்துக்கு நாமே ஒரு மான் அல்லது ஓர் ஆட்டைப் பத்து நாளைக்கொரு தடவை தீனியாகப் போட்டுவிட்டால், இவை மனிதனை ஒன்றும் செய்யாமல், சாதுவாகிவிடும்.

"ஆணும் பெண்ணும் குட்டிகளுமாக மூன்று முதல் பதினைந்து வரைக்கும் உள்ள குடும்பங்களாகவே சிங்கங்கள் வாழ்கின்றன. அவைகளுக்கு வேண்டிய தீனி நிறையக் கிடைக்குமானால், தாங்கள் இருக்கும் இடத்தை விட்டுப் பதினைந்து மைலுக்குமேல் அவை திரிவது அபூர்வம்.

"சிங்கங்கள் பெரிய தூங்குமூஞ்சிகள். ஒரு சிங்கக் குடும்பம் முழுவதுமே திறந்த புல் வெளியில் தூங்கிக்கொண்டிருப்பதைச் சகஜமாகப் பார்க்கலாம். நான்

சில சமயம் அவைகள்மீது கல்லை விட்டெறிவதுண்டு. அவை உறுமி யெழுந்து வாலை முறுக்கும். அவ்வளவோடு, மறுபடியும் படுத்து உறங்கிக் குறட்டை விடத் தொடங்கி விடும்; அல்லது முப்பது முதல் நாற்பதடி தூரம் நடந்து மறுபடி படுத்துவிடும்.

"தாங்க முடியாத காயத்தைச் சிங்கத்துக்கு உண்டாக்கினல் தான் அது நம்மைத் தாக்கும். அப்போது அது மகா வேகமாகப் பாயும். சில செகண்டுகளுக்குள் நூறடி தாவும். முதல் தடவை சுட்டதும் அது பாயும். இரண்டாவது தடவையில் அதைக் கொல்லாவிட்டால், அது நமக்கு மிக அருகே வந்துவிடும்.

"சிங்கத்தை அதன் மார்பிலே சுடவேண்டும்; அல்லது இரண்டு கண்களுக்கும் நடுவிலே சுடவேண்டும். கண்களுக்கு நடுவே சுடும் போது குறி தவறக் கூடாது; தவறினல் அபாயம். கண்ணுக்கு மேலே அதற்கு மண்டையோடு இல்லை. பெரும்பாலும் சிங்கம் ஓட்டம் பிடிக்குமே தவிர, எதிர்க்காது. இதனல் முதுகுப்புறத்தில் சுடுவதே எளிது."

அடுத்த நாள் ஒரு சிங்கத்தைக் கண்டுபிடிப்பதற்காக வேட்டைக்காரரும் போட்டோக்காரரும் புறப்பட்டார்கள்.

வேட்டைக்காரருக்கு, ஹோரோ, ட்வாக் என்று இரண்டு வேலையாட்கள் இருந்தார்கள். ஈட்டி, வில், விஷம் தோய்த்த அம்புகள் இவைகளை எடுத்துக்கொண்டு, முன்னதாக அவர்கள் கிளம்பிச் சென்ருர்கள். காமிரா, தார் பூசிய துணி, போர்வை, சோள மாவு, சட்டிபானை இவைகளையுங்கூட அவர்கள் எடுத்துச் சென்ருர்கள். வேட்டைக்காரரின் சமையல்காரப் பையனுக்கு மோகான்ஸா என்று பெயர். இவருடைய பெரிய துப்பாக்கி ஒன்றையும் இரண்டு பாக்கட் தோட்டாக்களையும் எடுத்துக் கொண்டு அவன் கிளம்பினன். மூவி காமிரா ஒன்றையும் அதை நிறுத்துவதற்கான முக்காலி ஒன்றையும் சுமந்துகொண்டு, போட்டோக்காரர் திணறியபடி நடந்தார்.

காட்டுக்குள் போய், மேடான ஓர் இடத்தில் இவர்களெல்லாம் முகாம் போட்டார்கள். பாதி ராத்திரி வேளைக்குச் சிறிது நேரம் கழித்து, மழை வந்தது. அதைத் தொடர்ந்து சிங்கம் ஒன்றின் உறுமலும் கேட்டது. மழையும் புயலும் இல்லாத சாதாரண காலங்களில் சிங்கங்கள் பல மாத காலங்கூடச் சிறிதும் உறுமலின்றிச் சும்மா இருந்துவிடும். புயலடித்தாலோ, இரவெல்லாம் அவை முனகும்; உறுமும்; புலம்பும்.

இவர்கள் முகாம் போட்ட சமயத்தில் மூன்று நாள் இரவு பகல் இடைவிடாமல் மழை பெய்தது. நான்காவது நாள்தான் சற்று வெளிவாங்கியது. அன்று பகலில் உச்சி நேரத்தில் மேகங்களைக் கிழித்துக்கொண்டு வானத்திலே சூரியன் தென்பட்டது. அதைச் சுற்றிலும் மேகங்கள் தங்கப் பாளங்களைப் போல் ஜொலித்தன. அப்போது திடீரென்று பேரிடி போல் ஒரு சிங்கத்தின் உறுமல் கேட்டது. எட்டுத் திசையிலிருந்தும் வந்து தங்களை அது தாக்குவதுபோல் இவர்களுக்குத் தோன்றியது. கடைசியில், கண்ணுக்கு முன்னே சிங்கம் வந்து தோன்றி

விட்டது. அதன் எடை சுமார் 500 பவுண்டு இருக்கும். பிடரி மயிர் கரு கரு என்று அடர்த்தியாயிருந்தது. நல்ல உயரம். இவர்களுக்குத் தொண்ணூறு கஜ தூரத்தில் வாலை முறுக்கிக்கொண்டு, சிங்கம் நின்றது.

போட்டோக்காரர் உடனே தம் காமிராவின் போர்வையை ஒதுக்கித் தள்ளிவிட்டு, படம் பிடிக்க முஸ்தீப்பானார்.

ஹோரோ, ட்வாக் இரண்டு பேரும் வில்லிலே நாணைப் பூட்டி வளைத்தபடி சிங்கத்துக்குப் பின் புறத்திலே வந்தார்கள். ஹோரோ சிறு அம்பு ஒன்றைச் சிங்கத்தின் மீது எய்தான். சிங்கத்தின் கோபத்தைக் கிளப்பி விட வேண்டுமே; அதற்காகவே அவன் இப்படி எய்தான்.

அப்படியே சிங்கத்துக்குக் கோபம் பொங்கியது. வால்புறம் அடிபட்டதால் பின்னங்கால் களைப் பூமியிலே உதைத்து, ஏதோ அந்தரடிப்பதுபோல ஒரேயடியாய் ஆகாயத்திலே தூக்கியது. முகத்தைப் பூமியிலே முட்டியது. உறுமியது; கனைத்தது; இருமியது.

போட்டோக்காரரும் வேட்டைக்காரரும் தயாரானார்கள்.

சிங்கம் ஐம்பது கஜதூரத்தில் வந்துவிட்டது. ஆனால், அது அடுத்த தடவை எழும்பிப் பாயும் போது அதன் மார்பில் சுடலாம் என்று வேட்டைக்காரர் காத்திருந்தார். ஆனால், அப்படி அது எழும்பவேயில்லை. தள்ளாடிக் கால் இடறிப் புல்லிலே முகத்தைப் புதைத்துக்கொண்டது. பிறகு மெல்ல உடலை உலுப்பி நெளித்துக்கொண்டு தள்ளாடித் தலையைத் தொங்கவிட்டபடி உட்கார்ந்துகொண்டது.

"ஏன் சுட்டீர்கள்? முஸோலினிக்காகப் படம் எடுக்க வேண்டும் என்றேனே. அதற்குள் இப்படிச் சுட்டுவிட்டீர்களே!" என்று கண்ணீர் சொரிந்துகொண்டே சொன்னார் போட்டோக்காரர்.

"நான் சுடவில்லை" என்று விளக்கினார் வேட்டைக்காரர்.

வேலையாள் எய்த விஷ அம்புதான் சிங்கத்தை இப்படி நிலை தவறச் செய்தது. சிறிது நேரத்தில் சிங்கம் செத்தே போயிற்று.

"அருமையான சிங்கம், இப்படிப் பயன்படாமல் போய்விட்டதே!" என்று வருத்தப்பட்டார் போட்டோக்காரர்.

மூன்றே வாரத்தில் நாற்பது, ஐம்பது ஆண் சிங்கங்களை வேட்டையாடிவிட்டார்கள். ஒன்றும் முஸோலினியின் வீரத்தை ஸ்தாபிப்பதற்கு ஏற்றதாக இல்லை.

கடைசியில் ஒரு நாள் மாலையில் இவர்கள் ஓர் ஆலமரத்தை வட்டமிட்டபோது, சிங்கக் குடும்பம் ஒன்றைக் கண்டார்கள். அதில் பெரிய ஆண்சிங்கம் ஒன்றும் பெண்சிங்கங்கள் இரண்டும் சிங்கக் குட்டிகள் இரண்டும் இருந்தன.

பெரிய ஆண் சிங்கத்துக்குக் கோப மூட்ட என்ன என்னவோ செய்து பார்த்தார்கள். சுதேசி ஆட்கள் அரைவட்டமாகச் சிங்கத்துக்குப் பின்புறம் வளைத்துக் கொண்டு, அதை விரட்டினார்கள். அந்த வீரச்சிங்கம் என்ன செய்தது தெரியுமோ? தன் பட்டமகிஷிகளையும் மக்களையும் அந்தரத்தில் விட்டுவிட்டு, ஒரே தாவாய்த் தாவி ஓட்டம் பிடித்துவிட்டது!

இரண்டு நாள் கழித்துத்தான் அதை இவர்கள் கண்டுபிடிக்க

முடிந்தது. மரஞ் செடிகள் இல்லாத திறந்த புல்வெளி ஒன்றில் அது படுத்திருந்தது. அதன் பக்கத்தில் மண்ணிலே ஒரு தோட்டாவைச் சுட்டார் வேட்டைக்காரர். உடனே அது ஒரே ஓட்டமாய் ஓடி, நூறு கஜதூரத்துக்கு அப்பால் ஒரு புதருக்குப் பின் போய் நின்றுகொண்டு, இலைகளின் இடுக்கால் இவர்களை மிரள மிரளப் பார்த்தது.

சிங்கம் காதல் புரியும் சமயங்களில் இடையூறு செய்தால், அதற்கு அசாத்தியக் கோபம் வரும். இது அப்படிச் சிங்கம் காதல் புரியும் பருவம் அல்ல. என்றாலும், அதன் காதலிகளில் ஒன்றைத் தாக்கினால், ஆண்சிங்கம் கோபங் கொள்ளக் கூடும் என்று வேட்டைக்காரர் எண்ணினார். ஆகவே, இரண்டொரு நாள் கழித்து, அந்தச் சிங்கக் குடும்பத்தின் பெண் சிங்கம் ஒன்றை அவர் சுட்டுக்கொன்றார். ஆண்சிங்கம் நாலுகால் பாய்ச்சலில் ஓட்டம் பிடித்தது. ஐம்பது கஜதூரம் போனபிறகே திரும்பிப் பார்த்தது. பிறகு மெல்ல மெல்ல வந்தது. செத்துக் கிடந்த பெண் சிங்கத்தை மோந்து பார்த்தது; பாதத்தால் புரட்டியது; அதன் கழுத்தைப் பல்லால் கௌவி இழுக்க முயன்றது.

போட்டோக்காரர் சிறிது சிறிதாகச் சிங்கத்தருகே போனார். முதலில் முப்பது அடிதூரம், அப்புறம் இருபதடி தூரம், கடைசியில் பதினைந்தடி தூரம் வரைக்கும் போய்விட்டார்.

சிங்கம் தலையை நிமிர்த்தியது. போட்டோக்காரரை வெறிக்க வெறிக்கப் பார்த்தது. மறுபுறம் திரும்பிச் 'செத்தேன் பிழைத்தேன்' என்று ஓட்டம் பிடித்தது.

போட்டோக்காரருக்கா ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது. பின்னே, வராதா? இப்படிப் போட்டோ எடுத்துக்கொள்ள ஒரு சிங்கம் சம்மதிக்கவில்லையென்றால், அவருக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்?

ஆனால், என்னவோ விதி வசமாக, இந்தச் சமயத்தில் போட்டோக்காரர் தடுமாறி ஒரு சகதிக் குழியில் விழுந்துவிட்டார். நூறு கஜதூரத்தில் இருந்த சிங்கத்துக்கு, போட்டோக்காரரின் வசவுச் சத்தம் கேட்டிருக்கிறது. அவ்வளவுதான். அது திரும்பிப் பார்த்தபோது, இவர் சகதியில் விழுந்து கிடந்தார். அதோடு காமிராவையும் விடவில்லை; முஸ்தீப்பாய்த் தான் வைத்துக்கொண்டிருந்தார். பித்துப் பிடித்தவர் போலக் கூச்சலும் போட்டுக்கொண்டிருந்தார். இந்த வசதியான நிலைமையில் அது சும்மாப் போகுமா? போட்டோக்காரரைத் தாக்க வந்தது.

வேட்டைக்காரர் துப்பாக்கியுடன் ஓடி, இருபதடி தூரம் முன்னால் போய்ச் சிங்கத்தின் வழியை விட்டுச் சிறிது விலகி நின்றுகொண்டார். சிங்கம் எழும்பிப் பாய்ந்தபோது அதன் மார்பை நோக்கிச் சுட்டார். தோட்டா அதன் உடம்பில் பாய்ந்தும், சிங்கம் நிலை தவறவில்லை. முன்னங்கால் பாதத்தால், போட்டோக்காரரை அறைந்தது. போட்டோக்காரர் அசையாமல் இருந்தார். அவர் தலைக்கு மேலே போய் வாலை முறுக்கியபடி நின்றுகொண்டது. அதன் வாய் ரத்தம் கக்கியது.

வேட்டைக்காரர் மறுபடியும் சுட்டார். சிங்கம் ஆடி விழுந்தது. மீண்டும் முண்டி எழுந்து, வேட்டைக்காரர்மீது பாய ஓடி வந்தது. மறுபடியும் அதன் இரண்டு கண்களுக்கும் நடு மையத்திலே வேட்டைக்காரர் சுட்டு அதை வீழ்த்தினர்.

போட்டோக்காரரின் ஷர்ட் கிழிந்து போயிருந்தது. அதில் ரத்தம் கசிந்திருந்தது. அவருடைய தோள் சதையில் எலும்பு தெரியும்படி சிங்கத்தின், நகம் கிழித்திருந்தது. அவருடைய ஒரு கை மணிக்கட்டு முறிந்து போயிருந்தது. பிரதம சிகிச்சைப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு ஒரு வேலையாள் ஓடி வந்தான்.

போட்டோக்காரர் எழுந்து உட்கார்ந்தார். வேட்டைக்காரரை ஒரு பக்கம் தள்ளிவிட்டார். தள்ளாடியபடி, சகதிக் குழியில் இறங்கினர். அந்தக் குழியின் அடியிலே, எந்தவித ஊனமும் அடையாமல் அவருடைய காமிரா கிடந்தது. அதைத் தம் புஜத்திலே பத்திரமாக ஒரு குழந்தையைப் போல் அவர் அணைத்துக்கொண்டார். பிறகு, வேட்டைக்காரரை நோக்கித் திரும்பி, "சிங்கம் என்னைத் தாக்கும்வரையில் நான் வெறி பிடித்திருந்தேன். அதன் படம் இதோ காமிராவுக்குள் பத்திரமாக இருக்கிறது" என்ருர்.

அப்போதுதான் முதல் முதலாக அவர் முகத்திலே புன்னகை அரும்பியது.

## கம்யூனிஸ்டுகளின் தவறு

சொத்தைச் சகல ஜனங்களும் சமமாகப் பங்கு பிரித்துக் கொண்டால், அவர்கள் சகோதரர்கள் ஆகிவிடுவார்கள் என்று கம்யூனிஸ்டுகள் எண்ணுகிருர்கள். இதுதான் பெரிய தவறு. ஒரே ஆப்பிள் பழத்தைச் சில மனிதர்கள் பங்கு பிரித்துக்கொள்ளும்போது, அவர்கள் சகோதரர்கள் ஆவதில்லை; சகோதரர்களாயிருப்பவர்கள்தான் ஒரே ஆப்பிள் பழத்தைப் பங்கு பிரித்துக்கொள்ளுவார்கள்.

—ஃபுல்டன் ஜே. ஷீன்

## கனவை நனவாக்கும் வழி

ஒரு வட்டத்தை நீண்ட நேரம் நீங்கள் பார்த்துக் கொண்டேயிருந்துவிட்டு, பிறகு சுவரைத் திரும்பிப் பார்ப்பீர்களானால், அங்கேயும் ஏதோ மந்திர சக்திபோல ஒரு வட்டம் தோன்றும். வெற்றிக் கனவைப் பலமாகக் காணுங்கள்; அது நனவிலும் பலித்துவிடும். ஆனல், இந்த யுக்தியில் முதல் படி ஒன்று உண்டு. உங்களுக்கு என்ன தேவை என்பதை முதலில் நீங்கள் உணர்ந்துகொள்ளவேண்டும். உங்கள் ஆசைக் கனவு நியாயமானதாக இருக்கவேண்டும். இப்படி நீங்கள் செய்தால், மகா விசித்திரமான உங்கள் பகல் கனவெல்லாங்கூடப் பலித்து விடக்கூடிய நிலைமையை ஒரு நாள் எட்டிவிடுவீர்கள்.

—எல்மெர் விலர்

ஹரிஜனங்களுக்குள்ளேயே தோன்றி, அவர்களைச் சீர்திருத்திய சமீபகாலத்து மகான் –

# நாராயண குரு

**'பாட்டாளி'**

தொன்று தொட்டு வந்த சம்பிரதாயங்களிலும் மத வழக்கங்களிலும் தலையிடுவது நெருப்பில் கையிடுவதுபோல் ஆகும். தாழ்த்தப்பட்டவர்களைக் கை தூக்கிவிடப் பெரும் புரட்சி செய்து சாதித்தவர்கள் மகா புருஷர்களே. இப்படி வெற்றி பெற்றவர்களில் ஒருவர் நாராயண குரு. செப்டம்பர் 12-ஆம் தேதி முதல் 16-ஆம் தேதி வரையில் இவருடைய நூற்றாண்டு விழா மலையாளத்தில் நடந்தது. மலையாள மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் அதைக் கொண்டாடினார்கள். இவருடைய வாழ்க்கைச் சரிதம் பாரத நாடு முழுவதும் பரவ வேண்டியதாகும்.

நூறு வருஷங்களுக்குமுன் திருவனந்தபுரத்தை அடுத்த 'செம்பழந்தி' என்ற ஒரு சிறு கிராமத்தில் நாராயணர் பிறந்தார். இவருடைய பாலிய வயதிலேயே மலையாளத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் சமூகத்தில் பெரும் புரட்சி நடந்தது. கோயில்களில் ஹரிஜனங்களை முதலில் அநுமதித்த பெருமை திருவாங்கூர் சம்ஸ்தானத்தைச் சேர்ந்தது. அந்தப் பெரு முயற்சிக்கு மக்களின் மனத்தைப் பக்குவப்படுத்தியவர் நாராயண குருவே.

கேரளத்தில் விசித்திர முறையில் தீண்டாமை வேர் ஊன்றியிருந்தது. அங்கே ஒரு ஜாதியார் உயர் வகுப்பினரைத் தொடக் கூடாது; பல ஜாதியாரின் நிழல் கூட அவர்களின்மேல் விழக் கூடாது; சில ஜாதியார் கூப்பிடு தூரத்திலேயே நிற்க வேண்டும்; சில ஜாதியார் கண்ணெதிரிலே கூட வரக்கூடாது. இந்த முறையைக் கண்ட விவேகானந்தர் மலையாளத்தைப் 'பைத்தியக்காரர்கள் விடுதி' என்று அழைத்தாராம்.

ஸ்ரீ நாராயண குரு, தீண்டாதவர்களில் 'ஈழவர்' வகுப்பில் பிறந்தவர். விவசாயம், கள் இறக்குவது, மீன் பிடிப்பது முதலியவை இவர்களுடைய பரம்பரைத் தொழில்கள்.

நாராயண குரு தம் ஊரில் சிறு பள்ளியில் ஆரம்பக் கல்வி கற்றார். உள்ளூர்ப் பண்டிதர்களிடம் வடமொழி கற்றார். ஈழவர்களில் பலர் ஆயுர்வேதத்திலும் ஜோதிடத்திலும் சிறந்த பயிற்சி பெற்றுப் 'பண்டித'ப் பட்டம் பெற்றவர்கள். அப்படிப்பட்ட ஒருவரிடம் கல்வி பயின்ற நாராயண குரு, 'நாணு ஆசான்' என்ற பட்டம் பெற்றார். இவர் அத்வைத நூல்கள் எல்லாவற்றையும் படித்தார்.

இவருடைய மனம் ஆத்மிகத் துறையில் ஈடுபட்டது. மணம் ஆனவரானாலும் பிரம்மசரியத்தைக் கைக்கொண்டார். திருவனந்தபுரத்தை அடுத்த மலைகளிலும் காடுகளிலும் இவர் பல

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம்), பெங்களூர்.

ஆண்டுகள் மறைந்து வசித்தார். தனிமையில் தியானம் செய்வதில் இவருக்கு ஆசை அதிகம். அவதூதரைப்போல் ஊரூராய்ச் சுற்றினார்.

பிறகு முப்பதாவது வயதில் தம் சமூகத்தவரிடையே உழைக்கலானார். அந்தச் சமூகத்தினர் அப்போது மாடன், மருதன், முத்து வீராயி என்ற சில்லறைத் தெய்வங்களைத் தொழுது வந்தார்கள். நாராயண குரு முதல்முதலாக அவர்களுக்காகவே வைதிக ரீதியில் ஒரு சிவன் கோயிலைக் கட்டுவித்தார். எழுபது ஆண்டுகளுக்கு முன், பஞ்சமர் விக்கிரகப் பிரதிஷ்டை செய்வதை மற்றச் சமூகத்தினர் பார்த்துப் பொறுப்பார்களா? நாடே திரண்டு வந்து எதிர்த்தது. மகாராஜா மூலம் திருநாள், சாதுரியமாக வாயை மூடிக்கொண்டிருந்து நாராயண குருவை உற்சாகப்படுத்தினார். குரு, மற்ற வகுப்பினரிடம், "நீங்கள் ஏன் சண்டைக்கு வருகிறீர்கள்? நான் பிரதிஷ்டை செய்தது உங்களுடைய சிவ பெருமானை அல்ல; ஈழவர்களின் சிவ பெருமானை. நீங்கள் வருந்த வேண்டாம்" என்றார்.

இவர் வட மொழியில் பல நூல்களை எழுதியிருக்கிறார்; பிறவிக் கவிஞரென்றே இவரைச் சொல்ல வேண்டும். இவருடைய 'திவ்ய ஸ்தோத்ர ரத்னவளி' என்னும் மலையாள நூலைப் படித்து ஆயிரக்கணக்கான பேர் பக்தியில் ஈடுபடுகிறார்கள். இவர் எழுதியவை எல்லாம் சர்வமத சமரசமான நூல்களே. "ஓர் எலும்பைக் கூட வருத்தாத இரக்கத்தை எனக்கு அருள், தயாமூர்த்தியே! உன்னை என் மனத்தில் ஒரு நிமிஷமும் அகலாமல் இருத்தித் துதிக்கும் பக்தியைக் கொடு. நீ மானிட வடிவங்கொண்ட தெய்வமோ? திவ்ய நரரூபம் கொண்ட தருமமோ? பரமேசுவரனுடைய புனித மகனான ஏசுவோ? கருணை மூர்த்தியாகிய நபி என்னும் மனிதர் மாணிக்கமோ? மனிதனாய் உலகில் சஞ்சரிக்கும் காம தேனுவோ? அற்புதமாகிய கற்பகத் தருவோ? என்னால் அறிய முடியவில்லையே" என்ற ரீதியில் அவற்றின் கருத்து அமைந்திருக்கிறது. அவற்றைப் படித்தால் பரந்த நோக்கம் உண்டாகும்.

இப்படிப் பன்னிரண்டு ஆண்டுகள் கேரளத்தில் நகரங்களிலும் கிராமங்களிலும் தீண்டாதாருக்கென்றே இவர் பல கோயில்களை எழுப்பினார். இதனால் அந்தச் சமூகத்தில் தெய்வ பக்தியும் சுய நம்பிக்கையும் உண்டாயின. சிவகிரி என்னும் இடத்தில் இவருடைய முக்கியமான மடம் இருக்கிறது. இங்கிருந்து மற்ற இடங்களில் பூஜை செய்யவும் தருமப் பிரசாரம் செய்யவும் வடமொழி வித்துவான்களை அனுப்பினார். அந்தக் கோயில்களின் கட்டுப்பாடு, பூஜை முறை, அங்கே போய் வந்த மக்களின் பக்தி இவற்றைக் கண்டு உயர்வகுப்பினர் மூக்கின் மேல் விரலை வைத்தார்கள்.

பிற்காலத்தில் இவர் தம் கோயில்களில் விக்கிரகங்களுக்குப் பதிலாகப் பெரிய நிலைக் கண்ணாடிகளை அமைக்கத் தொடங்கினார். கோயிலின் முகப்பில், "ஓம் சாந்தி: ஓம் சாந்தி: ஓம் சாந்தி:" என்று எழுதுவித்தார்.

இந்தக் காலத்திலேயே இவர் தீண்டாதாரிடையே ஒழுக்கம் ஏற்படுவதற்கான முயற்சிகளை

எடுத்துக்கொண்டார். பிறப்பு, இறப்பின்போதும் கல்யாணக் கார்த்திகளிலும் அவர்கள் கையாண்ட வழக்கங்களை மாற்றினார். ஆடம்பரச் செலவுகளை நிறுத்தி விட்டார்.

"கள் விஷத்துக்குச் சமானம். அதைத் தயாரிக்கவும் கூடாது; கொடுக்கவும் குடிக்கவும் கூடாது" என்று கோஷித்தார். தம் பேச்சின் செல்வாக்கை அதற்கே உபயோகித்தார். தம் ஜாதிக்குள்ளேயே உயர்வு-தாழ்வு என்றிருந்த கொள்கையைக் கண்டித்தார். ஹரிஜனங்களாலேயே மட்டம் என்று ஒதுக்கப்பட்ட ஜாதியாரைத் தம் மடத்தில் வேலைக்கு வைத்துக்கொண்டார். மாமிச உணவை வெறுத்தார். கோழி வளர்ப்பைத் தடுத்தார். கோயில்களில் கோழி, ஆடு, எருமைகளைப் பலியிடும் வழக்கத்தை ஒழித்தார். முப்பது ஆண்டுகளுக்குமுன் வைக்கம் க்ஷேத்திர ஆலயப் பிரவேச சத்தியாக்கிரகத்தில் தம் சக்தி முழுவதையும் செலவிட்டார்.

சிவகிரி மடத்தில், "மனிதனுக்கு ஒரே ஜாதி; ஒரே மதம்; ஒரே தெய்வம்!" என்ற இவருடைய வாக்கின் பயனைக் காணலாம். தம் ஒப்பற்ற அருள் மொழிகளாலும் பிரசங்கத்தாலும் மலையாளத்து மக்களைத் தட்டி எழுப்பினர். தம்முடைய மற்றொரு மடத்தில், "ஜாதி பேதமும் மதத் துவேஷமும் இல்லாமல் எல்லாரும் சகோதரபாவத்துடன் வாழ்வோம். அதற்குத் தாயகமான இங்கே வாருங்கள்" என்று எழுதியிருக்கிறார். "மதத் துவேஷத்துக்குச் சமயம் காரணம் அல்ல; மதமே (திமிரே) காரணம்" என்று இவர் சொல்வது வழக்கம்.

"தியானத்தால் சாந்தி பெறுங்கள். கல்வியால் முன்னேறுங்கள்" என்று ஹரிஜனங்களை ஊக்குவித்தார். உடல் சுத்தம், வீட்டுச் சுத்தம், உணவுச் சுத்தம் இந்த மூன்றையும் வற்புறுத்தினர். இவரைப் பிட்சைக்கு அழைத்த வீடுகளில் குறைகளைக் கண்டு பிட்சை எடுக்காமல் போய்விட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. "பணத்தை நியாய வழியில் சம்பாதித்து மிதமாகச் செலவிடுங்கள்" என்று தம் சீடர்களுக்கு உபதேசித்தார். 74 ஆண்டுகள் வாழ்ந்த நாராயண குரு காலமாகி 26 ஆண்டுகள் ஆகின்றன. மலையாளத்திலும் மலையாளிகள் வசிக்கும் மலேயா போன்ற வெளிநாடுகளிலும் இவருடைய சீடர்கள் குருவின் கொள்கைகளைப் பரப்பி வருகிறார்கள். பள்ளிக்கூடம், காலேஜ், ஆஸ்பத்திரி, வாசகசாலை முதலியவற்றை நிறுவியிருக்கிறார்கள். ஹரிஜன முன்னேற்றம் எப்படிச் சாத்தியமாயிற்று, 'பாபி'களைப் புனிதராக்குவது எப்படி என்ற பிரச்னைகளுக்கு நாராயண குரு தம் செயல், பேச்சு, ஒழுக்கம், சேவை ஆகியவற்றால் பரிகாரம் தேடி உலகத்துக்கு வழி காட்டியிருக்கிறார்.

## கடவுளாலும் முடியாது

கடவுளாலும் ஆகாத காரியம் ஒன்று உண்டு; நடந்ததை நடவாததாகச் செய்ய அவராலும் முடியாது.

—அகதான் (கிரேக்க ஞானி)

சின்னக் குழந்தைகள் எல்லாமே இப்போது ஸ்டாம்பு சேர்ப்பதில் ஈடுபடுகின்றனவே; இதன் ரகசியம் என்ன?

# தபால்தலைச் செல்வம்

பி. ஜி. கிருஷ்ணையா

தபால் தலை சேகரிப்பது இப்போது பெரிய வியாபாரமாகிவிட்டது. ஐக்கிய அமெரிக்காவில் மட்டுமே ஒரு கோடியே இருபது லட்சத்துக்கு மேற்பட்ட ஸ்டாம்பு சேகரிப்போர் இருக்கிறார்களென்றால் பாருங்கள்! தமாஷுக்காகவே இவர்களில் பெரும்பாலோர் இப்படிச் சேகரிக்கிறார்கள். இருந்தாலும் இது லாபகரமான வியாபாரம் என்றோ பணப் பெருக்கத்தைக் குறைக்கும் உபாயம் என்றோ அநேகம் பேர் இதில் ஈடுபட்டு வருகிறார்கள். இன்னும் சிலர் வாரந்தோறும் நடக்கும் ஏலத்தில் இப்படி வாங்கியும் விற்றும் வருகிறார்கள். பிரபலமான நாடுகளின் ஸ்டாம்பு விலை மதிப்புச் சம்பந்தமாக ஏற்றியும் இறக்கியும் ஹேஷ்யங்கள் சொல்லி இந்தத் தொழிலில் அநேகர் ஈடுபடுவது வழக்கம்.

நியூயார்க் நகரம் ஒன்றில் மட்டுமே இப்படி லைஸென்ஸ் பெற்று ஸ்டாம்பு வியாபாரம் செய்பவர்கள் சுமார் 400பேருக்கு மேல் இருக்கிறார்கள்; ஸ்டாம்பை ஏலம் விடுவதற்கென்றே சுமார் 24 விடுதிகள் இருக்கின்றன! எச். ஆர். ஹார்மர் என்ற ஸ்தாபனத்தார் விசேஷமான ஸ்டாம்புகளை மட்டுமே சேகரித்து விற்கிறார்கள். ரூஸ்வெல்ட் தொகுத்து வைத்த ஸ்டாம்புகளை மேற்படி ஸ்தாபனத்தார் 1946-இல் 2,12,847 டாலருக்கு ஏலம் விட்டார்கள். காலஞ்சென்ற கர்னல் இ. எச். ஆர். கிரீன் என்பவர் தொகுத்து வைத்த ஸ்டாம்புகளின் விலை மதிப்புச் சுமார் 6,75,000 டாலர். ஆனால் ஏலம் விட்டபோது 10,25,000 டாலருக்குமேல் அவை விலை போயின.

ஸ்டாம்பு சேகரிப்பவர் இந்தத் தொழிலினால் எவ்வளவு லாபம் அடைகிறார்கள் என்பதைப்பற்றித் தபால் அதிகாரிகள் பல ஆண்டுகள் வரை அக்கறைப்படவேயில்லை. எப்போதாவது தோன்றினால் ஒரு முறை புது ஸ்டாம்புகள் அச்சடிப்பது வழக்கமாக இருந்தது. புழக்கத்தில் இருந்த ஸ்டாம்புகளில் வெளியான 'டிஸைன்'களோ கண்ணைக் கவரும்படியும் இருப்பதில்லை. பெரும்பாலும் விறைப்பாக நிற்கும் ஒரு மன்னர் அல்லது ராணுவ வீரரின் உருவம் அச்சிட்டிருக்கும். ஆனால் 1920-தொடக்கத்திலிருந்து தான் திடீரென்று போஸ்ட்-மாஸ்டர்கள் இந்த விஷயத்தில் விழித்துக்கொண்டார்கள்; ஒவ்வொரு தரமும் புது ஸ்டாம்பு வெளியிடும்போதும் ஸ்டாம்பு வியாபாரிகளும் அதைச் சேகரிப்பவர்களும் அதை வாங்குவதால் கோடிக்கணக்கான டாலர்களுக்கு வரும்படி உண்டு என்பதைத் தபால் அதிகாரிகள் தெரிந்துகொண்டார்கள். ஸ்டாம்பு பின்னும் கண்ணைக் கவரும்படி

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்: 25-9-'54), சென்னை.

இருந்தால் ஏராளமாக விலை போகும் என்று தெரிந்தது.

மடமடவென்று தபால் அதிகாரிகள் சித்திரம் போட்ட விசேஷ ஸ்டாம்புகளைக் கோடிக்கணக்கில் வெளியிடலானார்கள். ஹோண்டுராவில் மட்டுமே 143 விதமான ஸ்டாம்புகளும் வெனிசூயெலாவில் 205 வித ஸ்டாம்புகளும் வெளியிட்டார்கள். நிக்கராகுவாதான் எல்லாவற்றையும் மிஞ்சிவிட்டது; 265 வித ஸ்டாம்புகள் அங்கே வெளியாயின. பழங்கால ரோமன் மன்னன் அகஸ்டஸ் ஸீசரின் முடிசூட்டு விழா முதல் உறை பனியில் 'ஸ்கீ' விளையாட்டு ஆடும் உல்லாசக் காட்சி வரையில் பல சித்திரங்களை வெளியிட்டார்கள். பனமாவில் முக்கியமான சர்க்கார் அதிகாரி ஒவ்வொருவர் உருவத்தையும் ஸ்டாம்புகளில் வெளியிட்டார்கள்; இயற்கைக் காட்சிகளையும், அழகிய கட்டிடங்களின் படத்தையும், பாஸ்கட் பால், பேஸ் பால், நீச்சல், குத்துச் சண்டை, கால் பந்தாட்டம் இப்படிப் பல காட்சிகளையும் ஸ்டாம்புகளில் அச்சிட்டார்கள்.

பேராவல் கொண்ட சில போஸ்ட்-மாஸ்டர்கள் நெருங்கிய நண்பர்களுக்கோ, இவைகளை வாங்கி ஒன்றுக்கு நாலாகப் பின்னால் விலையைக் குறித்து ஹேஷ்யம் சொல்லி விற்கும் ஆசாமிகளுக்கோ மொத்தம் மொத்தமாக விற்றுவிட்டதில் அவர்கள் அப்படியே அவைகளை ஒளித்துவிட்டார்கள். இந்தமாதிரி ஸ்டாம்புகளை ஸ்டாம்பு சேகரிப்போர் சங்கங்களும் ஸ்டாம்பு அட்டவணை தயாரித்து வெளியிடும் இலாகாவும் தகுதியற்றவை என விலக்கிவிட்டன. அமெரிக்க ஸ்டாம்பு சேகரிப்போர் சங்கத்தின் தலைவரான டி. எப். லிபார்கர் என்பவர், இதைக் கண்டித்த தன்மேல், ஜனாதிபதி ரூஸ்வெல்ட்டைக் கவுரவிக்க அபிஸீனியாவில் வெளியிட்ட ஸ்டாம்புகளை இப்படித்தான் அட்டவணையில் சேர்க்காமல் விலக்கிவிட்டார்கள். அமெரிக்கக் கம்பெனி ஒன்று அப்படியே மொத்தமாக அந்த ஸ்டாம்புகளை இறக்குமதி செய்து வைத்துக்கொண்டு 1 டாலர் 20 சென்ட் மதிப்புள்ள ஸ்டாம்பை 9 டாலருக்கு விற்க ஏற்பாடு செய்தது என்று அப்போதுதான் தெரிந்தது.

சில தபால் அதிகாரிகள் வேண்டுமென்றே சில 'தவறு'களைச் செய்திருக்கிறார்கள். 1934-இல் இப்படி ஒரு சம்பவம் நடந்தது: அப்போது அமெரிக்கப் போஸ்ட்-மாஸ்டர் ஜெனரலாக இருந்த ஃபார்லி என்பவர் ஜனாதிபதிக்கும், அதிகாரிகளில் மிகவும் வேண்டியவர்களுக்கும், புதிதாக ஒரு சந்தர்ப்பத்தை உத்தேசித்து அச்சிட்ட ஸ்டாம்புத் தாள்களை அன்பளிப்பாகத் தந்தார். அவைகளில் தனித் தனியே ஸ்டாம்புகளைக் கிழிப்பதற்கு வசதியாகப் 'பெர்ஃபொரேஷன்' (துளை) குத்தியிருக்கவில்லை. ஓர் அதிகாரி 20,000 டாலருக்கு அதை இன்ஷ்யூர் செய்து நியூயார்க் ஸ்டாம்பு வியாபாரி ஒருவருக்கு உடனே அனுப்பிவிட்டார். ஆனால் அமெரிக்கக் காங்கிரஸ் சபையில் இதைப் பலர் பலமாகக் கண்டிக்கவே, தபால் இலாகா பின்னால் இந்த ஸ்டாம்புகளையெல்லாம் 'பெர்ஃபொரேஷன்' இல்லாமலே வெளியிட வேண்டியதாயிற்று. ஆகவே, 'பெர்பொ

ரேஷன் இல்லாத ஸ்டாம்பு' என்ற தனிச் சிறப்புக்கே இடம் இராது போயிற்று.

தபால்ஸ்டாம்பின் மதிப்பு அதை வாங்குபவர்களையும் விற்பவர்களையும் பொறுத்திருக்கிறது. 1863-இல் பிரிட்டிஷ் கயானாவில் ஆங்கில மாணவன் ஒருவன் தன் தாத்தாவின் மாடிக் குச்சுக்குள் பழைய சுவர்களில் ஏதாவது ஸ்டாம்பு கிடைக்குமா என்று குடைந்துகொண்டிருந்தான். அப்போது ஒரு பழைய ஸ்டாம்பு அவன் கண்ணில் பட்டது. 1856-இல் மஜெண்டா என்ற ஒருவகைச் சிவப்பு நிறத்தின்மேல் கறுப்பில் அச்சிட்ட பிரிட்டிஷ் கயானு ஸ்டாம்பு. அதுவோ பார்க்க வழங்கவில்லை; அவ்வளவு விகாரமாக இருந்தது. அதன் ஓரங்கள் விண்டிருந்தன. அதை அந்தப் பையனுடைய ஸ்டாம்பு ஆல்பத்தில் வைக்க இடமும் இல்லை. பையனேடு இந்த மாதிரியே ஸ்டாம்பு சேகரிக்கும் ஆசாமி ஒருவர் இருந்தார். அவர், "இது ரொம்பப் பழைய ஸ்டாம்பாயிற்றே! உனக்கு வேண்டாவிட்டால் நான் வேண்டுமானல் விலைக்கு வாங்கிக்கொள்கிறேன், கொடு" என்றார்.

"அப்படியா! சரி; நான் மற்ற எதை வேண்டுமானுலும் கொடுக்கிறேன். இது மட்டும் என் கிட்டவே இருக்கட்டும்" என்றான் பையன். கடைசியில் உலகத்திலேயே அந்த மாதிரி ஸ்டாம்பு அது ஒன்றுதான் என்று தெரிந்தது. அந்த நூற்றாண்டு முடிவதற்குள் கவுண்ட் ஃபெர்ராரி என்ற ஆஸ்திரியர் அந்த ஸ்டாம்பை 750 டாலர் கொடுத்து வாங்கிவிட்டார். அவருக்குப் பழைய ஸ்டாம்பு என்றால் அவ்வளவு மோகம்! அதையே 1925-இல் ஏலத்தில் விட்டபோது ஆர்த்தர் ஹிண்ட் என்ற அமெரிக்கக் கோடீசுவரர் 32,000 டாலருக்கு வாங்கினர். 17 சதவிகிதம் சர்க்கார் வரியும் செலுத்தி அதை எடுத்து வந்தார். இன்று உயர்ந்த விலை மதிப்புள்ள ஸ்டாம்புகளுக்குள் அதுவே சிறந்து விளங்குகிறது; இப்போது அதன் மதிப்பு என்ன தெரியுமா? 50,000 டாலர்!

பணக்காரர்களாக இருப்பவர்கள்தான் ஸ்டாம்பு சேகரிக்க வேண்டும் என்று யாரும் எண்ண வேண்டாம். அநேகம் சாதாரண ஸ்டாம்புகள் குறைந்த விலைக்கு, அதாவது 2 அல்லது 3 சதத்துக்குக் கிடைக்கின்றன.

ஸ்டாம்பின் மகிமையை உணர்ந்த சில அரசாங்கத்தார் ஸ்டாம்பு சேர்த்து வைப்பதற்கென்றே சில விசேஷ ஸ்தாபனங்களை நடத்தி வருகிறார்கள். அந்த ஸ்தாபனத்தாரிடமோ, சர்க்கார் தபால் ஆபீஸ்களிலோ போய் விசாரித்தால், உபயோகப்படுத்தாத பழைய ஸ்டாம்புகள் கிடைக்கலாம். ஸ்டாம்புகளை மொத்தமாக வாங்கி வியாபாரம் செய்வோர் இந்த மாதிரி ஸ்தாபனத்தாருக்கு அடிக்கடி எழுதிப் புதிது புதிதாக ஸ்டாம்பு வெளியிடும்போது ஏராளமாக வாங்கி வைத்துக்கொள்வார்கள். உபயோகப்படுத்திய ஸ்டாம்புகளைப் பெரிய பெரிய வியாபார நிலையங்கள், பாங்குகள், சர்ச்சுகளைச் சேர்ந்த மிஷன்கள் இவைகளிடமிருந்து ராத்தல் கணக்கில் எடை போட்டு வாங்கிவிடலாம்.

கவரை விட்டுக் கிழிக்காமல் அப்படியே பல ஸ்டாம்புகளை உலகில் வெவ்வேறு இடங்களில் உள்ள சில ஸ்தாபனங்கள் சேர்த்துத் தருகிற ஏஜென்ஸி மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைத்து விற்பது வழக்கம்.

அமெரிக்காவைப் பொறுத்த வரையில் ஏற்கனவே உபயோகமாகிக் கவரின் காகிதத்தோடு ஒட்டிக்கொள்ளாமல் ஒழுங்காக இருக்கும் குறைந்த மதிப்புள்ள ஸ்டாம்புகளின் விலை 100-க்கு 3 டாலர். உயர்ந்த மதிப்புள்ளவைகளாயும், ஏதாவது கொண்டாட்டத்தை உத்தேசித்து வெளியிட்டவைகளாயும் இருக்கும் பழைய ஸ்டாம்புகளாக இருந்தால் ஒரு ராத்தல் 30 சதத்துக்குக் கொடுக்கிறார்கள். முன்னெல்லாம், அங்கங்கே கவரோடு ஒட்டிக்கிடக்கும் ஸ்டாம்புகளை அப்படியே விற்றுவந்த ஏஜென்ஸிகளிடமிருந்து மொத்தத்தில் ஸ்டாம்புகள் வாங்கும்போது, ஸ்டாம்பு சேகரிப்பவர்களுக்கு நல்ல லாபம் இருந்தது. ஆனால் இப்போது அதெல்லாம் நடக்காது. அந்த ஏஜென்ஸிகளிலேயே ஸ்டாம்பு சேர்க்கும் நிபுணர்கள் இருக்கிறார்கள். இவர்கள் முன் ஜாக்கிரதையாக உயர்ந்த மதிப்புள்ள ஸ்டாம்புகளையெல்லாம் கிழித்து எடுத்துக்கொண்டு மற்றவைகளை அப்படியே கற்றையாக அனுப்பி விடுவார்கள்.

அநேகம் பேர் ஸ்டாம்பு சேர்ப்பதற்காகவே, (புதுப் புத்தகம் படிக்கக் கொடுக்கும் கிளப்புகளில் சந்தா கொடுத்து அங்கத்தினர் ஆவது போல் அதே ரீதியில் அமைந்த) 'ஸ்டாம்பு கிளப்'புகளில் சேர்கிறார்கள்.

மொத்தத்தில் இந்த ஸ்டாம்பு கம்பெனிகளெல்லாமே அவ்வப்போது அநேக ஸ்டாம்புகளைப் பொறுப்புள்ள அங்கத்தினர்களின் அங்கீகாரத்துக்கு அனுப்பி வைப்பது வழக்கம். இந்த அங்கத்தினர், மொத்தத்தையும் அலசிப் பார்த்துத் தமக்கு வேண்டியது ஏதாவது இருந்தால் எடுத்துக்கொண்டு மீதியைத் திருப்பி அனுப்பிவிடுவார்; கூடவே, எடுத்துக்கொண்ட ஸ்டாம்புக்குரிய தொகையையும் அனுப்பி விடுவது வழக்கம்.

அநேகம் பேர் விசேஷ நாட்களில் வெளியாகும் ஸ்டாம்புகளைத் தாள் கணக்கில் வாங்கிப் பாங்கிகளில் வைத்துவிடுகிறார்கள். பின்னால் ஒரு சமயம் அதன் விலை ஏறலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு. இந்த மாதிரி ஒரு வியாபாரப் பிரமுகர் என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? "இப்படி ஸ்டாம்பு வாங்கிப் பாங்கியில் வைக்கும்போது அதற்கான வட்டி நஷ்டமாகப் போகிறது; அவ்வளவுதானே? - எப்போது இருந்தாலும் ஐக்கிய அமெரிக்க ஸ்டாம்புகளின் அசல் விலை மதிப்பு என்னவோ குறைந்துவிடப் போவதில்லை. அப்படியும் மிஞ்சினால் அதைக் கடிதங்கள் எழுதும்போது உபயோகித்துக்கொண்டு விட்டால் தீர்ந்தது. ஆனால் எப்போதாவது விர் என்று அதன் மதிப்பு ஏறிவிட்டால் லாபந்தானே?" என்றுதான்.

அதற்கு இதோ ஓர் உதாரணம், பாருங்கள்: 1942-இல், ஐந்து ஆண்டுகளாக ஜப்பானிய ஆக்கிரமிப்பை எதிர்த்துச் சீன மக்கள் போரிட்டு வருவதைக் குறித்துப்

பாராட்ட அமெரிக்காவில் 5 சதம் ஸ்டாம்பு ஒன்று வெளியிட்டார்கள். அதில் ஆபிரகாம் லிங்கன், சன் - யாட் - சென், சீன நாட்டின் படம் இவைகளை அச்சிட்டிருந்தார்கள். அப்போது இந்த ஸ்டாம்பு 100 கொண்ட தாள் 5 டாலர். இன்று அதே தாளின் விலை மதிப்பு 35 டாலர்! அதாவது, அந்த நாளில் 1000 டாலர் கொடுத்து இந்த ஸ்டாம்புகளை வாங்கி வைத்திருந்தால் இப்போது 7000 டாலர் கைமேல் கிடைக்கும்!

சில பாங்கிகளும் லேவாதேவிக் கம்பெனிகளும் ஸ்டாம்புத் தாள்களை அடகு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கின்றன. நியூயார்க்கிலுள்ள 'பிராவிடெண்ட் லோன் சொசைட்டி' என்ற ஸ்தாபனத்தார் இப்படி அடகு வைத்துக்கொண்டு மாதம் ஒன்றுக்கு 100 - க்கு ¾ அல்லது ஒரு வட்டி வீதம் வாங்குகிறார்கள். இதையே முக்கியத் தொழிலாகவும் நடத்துகிறார்கள். இன்னும் சிலபேர் ஸ்டாம்பை அடகு வைத்து அப்படிக் கிடைத்த தொகையைக் கொண்டு புத்தம் புதிதாக வெளியாகும் ஸ்டாம்பை வாங்கி மறுபடியும் அடகு வைக்கிறார்கள். இப்படியே முதல் சேர்த்து ஸ்டாம்பு சேர்க்கும் வியாபாரத்தைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். மிஞ்சினால் வட்டி நஷ்டம்; அவ்வளவுதான்.

## குப்பை கூளம்

ரெயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் காலி ஸிகரெட் பாக்கட் ஒன்றைத் தண்டவாளப் பாதையில் ஒரு மனிதன் எறிவதைப் பார்த்தேன்.

"மன்னிக்கவேண்டும். இப்படி எறிகிறீரே; இதைப் பொறுக்க ஓர் ஆள் வேண்டியிருப்பதை அறிவீரா?"

"ஆஹா! அறிவேன். ஆனால் இதைப் பொறுக்காவிட்டால், அவனுக்கு வேறே என்ன வேலை?"

"அது கேள்வி அல்ல."

"ஏனும்? குப்பைக் காகிதங்களைக் கீழே போடாமல், பத்திரமாக நானே ஜேபியில் போட்டுக்கொண்டு சென்றால், ஓர் ஆளுக்கு வேலையில்லாமல் போகுமே. அது நியாயமா?"

"இதே வாதத்தின்படி, உம் வீட்டு ஜன்னல் கண்ணாடியை யெல்லாம் நான் உடைத்துத் தள்ளலாம் போல் இருக்கிறதே!"

இந்தச் சமயத்தில் ரெயில் வண்டி வந்துவிட்டது. எங்கள் விவாதம் எதிர்பாராமல் முடிந்துவிட்டது.

தெருவிலே குவியும் இந்தக் குப்பை கூளப் பிரச்னை எப்போதுதான் தீருமோ, தெரியவில்லை.

—'மான்செஸ்டர் கார்டியன்' நிருபர்

# அரைப் புளுகன்

மொழிபெயர்த்தவர்: அ. லெ. நடராஜன்

**'ஆயிரத்தோர் இரவுகள்' என்ற அற்புதக் கதைகளின் பல மொழிபெயர்ப்புகள் தமிழிலே வெளிவந்திருக்கின்றன. இந்த மொழிபெயர்ப்பு, தனிச் சிறப்புடன் பொலிகிறது. இலக்கிய நயத்தோடு, மிகவும் சரளமான நடையில் இது அமைந்திருக்கிறது. பதிப்பு மிக அருமையாயிருக்கிறது. வில்லியம் லேன் பதிப்பை ஒட்டிய இதில் உள்ள சித்திரங்கள் மிக நேர்த்தியாயிருக்கின்றன. இலக்கிய ஆர்வம் படைத்த ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்கவேண்டிய ஒரு புத்தகம் இது.**

எனக்கு வயது எட்டு நிரம்பிய காலத்திலேயே புளுகுவதில் நான் சமர்த்தனாக விளங்கினேன். வருஷத்துக்கு ஒரு முறை மட்டும் ஒரே ஒரு புளுகு புளுகி, அடிமை வியாபாரிகளிடையே பெருங் கலவரத்தை உண்டுபண்ணி விடுவது என் வழக்கம். என்னிடம் உள்ள இந்தக் குறைபாட்டை அடிமை வியாபாரியான என் எஜமானரால் சகிக்க முடியவில்லை. ஆகையால், என்னை ஒரு தரகனிடம் ஒப்புவித்து, "ஒரே குற்றம்மட்டுமுள்ள இந்த அடிமை யாருக்காவது தேவையா?" என்று விலை கூறச் செய்தார்.

"இவனிடமுள்ள பிழை என்ன?" என்று தரகனை மற்றவர்கள் விசாரித்தார்கள்.

"வருஷத்துக்கு ஒரு முறை ஒரே ஒரு பொய்மட்டும் சொல்வான் இவன்" என்றான் தரகன்.

ஒரு வியாபாரி தரகனை அணுகி, "இவனிடமுள்ள பிழையையும் சேர்த்து இந்த அடிமையின் விலை என்ன?" என்று கேட்டார்.

"அறுநூறு திர்காம்கள்" என்று பதில் அளித்தான் தரகன்.

"சரி. அப்படியானால் விலையைத் தவிர்த்து இருபது திர்காம்கள் தரகு வேறு உமக்கு நான் தந்துவிடுகிறேன்" என்றார் அந்த வியாபாரி.

ஆகையால், தரகன் அவரை அடிமை வியாபாரியினிடம் அழைத்துப் போனான். வியாபாரி கிரயத்தை வாங்கிக்கொண்டபின், தரகன் என்னை வாங்கிய புதிய வியாபாரி வீட்டுக்கு அழைத்துப் போய் விட்டுவிட்டு, தனக்குரிய தரகுப் பணத்தைப் பெற்றுக் கொண்டான்.

புதிய வியாபாரி எனக்கு ஏற்ற உடைகள் தந்து என்னை அணிந்து

காப்பிரைட்: ஆயிரத்து ஓர் இரவுகள் என்ற அரபுக் கதைகள் – இரண்டாம் பாகம் (தமிழ்ப் புத்தகம்). மலிவுப் பதிப்பு: ரூ. 4-8-0; பரிசுப் பதிப்பு ரூ. 6-0-0 வெளியிட்டோர்: அருணா புத்தக நிலையம், திருவல்லிக்கேணி, சென்னை.

கொள்ளச் செய்தார். அந்த வருஷத்தில் எஞ்சிய பாகத்தை அவருடைய இல்லத்திலேயே நான் கழித்தேன்.

புது வருஷம் பிறந்தது; இயற்கைத் தேவி தன் செல்வத்தையெல்லாம் வாரி இறைத்திருந்தாள்; தானியங்களும் பழங்களும் மலை மலையாகக் குவிந்தன. இதனால் மகிழ்ந்த வியாபாரிகள் தங்களுக்கிடையே ஒருவர் மாறி ஒருவர் விருந்து வைத்து உல்லாசமாகப் பொழுது போக்கினார்கள். என் எஜமானருடைய முறை வந்தது; சுவை மிக்க உணவு வகைகளைச் சித்தப்படுத்தி, ஊருக்கு அணித்தேயுள்ள ஒரு தோட்டத்தில் தம் நண்பர்களுக்குப் பிரமாதமாக அவர் விருந்து ஒன்று வைத்தார். எல்லோரும் ஓர் இடத்தில் அமர்ந்து உண்டு குடித்து உற்சாகமாகப் பொழுது போக்கினார்கள்; உச்சி வேளையில் என் எஜமானருக்கு ஏதோ ஒரு பொருள் தேவைப்பட்டது; உடனே, அவர் என்னைக் கூவி அழைத்து, "ஏ கப்பூர்! கோவேறு கழுதைமீது விரைவாக வீட்டுக்குச் சென்று உன் எஜமானியிடம் அந்தப் பொருளை விரைவில் வாங்கி வா" என்று சொன்னார்.

அதன்படி நான் புறப்பட்டுப் போனேன். வீட்டை அணுகியது தான் தாமதம்; பெரிய கூச்சல் போட்டுக் கதற ஆரம்பித்தேன்; என் கண்களில் நீர் மல்கியது. பேட்டையிலிருந்த ஜனங்கள் வெளியே வந்து பெரியோரும் சிறியோருமாக என்னைச் சூழ்ந்து கொண்டார்கள். என் கதறலைக் கேட்ட என் எஜமானர் மனைவியும் புதல்வியரும் கதவைத் திறந்து, "என்ன சமாசாரம்?" என்று என்னை வினவினார்கள்.

"பழைய சுவர் ஒன்றின் பக்கத்தில் நம் எஜமானரும் அவருடைய நண்பர்களும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அது திடீரெனச் சரிந்து அவர்கள்மீது விழுந்துவிட்டபடியால், அந்த விவரத்தை உங்களிடம் தெரிவிக்கக் கோவேறு கழுதைமீது ஏறி வேகமாக வந்தேன்" என்று நான் பதில் சொன்னேன்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் என் எஜமானர் மனைவியும் புதல்வியரும் கோவென்று கதறினார்கள். ஆடைகளைக் கிழித்தெறிந்து வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டார்கள். பக்கத்து வீட்டுக்காரர்கள் கும்பலாகக் கூடிவிட்டார்கள். என் எஜமானியின் துக்கம் கோர சொரூபம் எடுக்கத் தொடங்கியது. மேஜை நாற்காலிகளை எடுத்துத் தலைகுப்புறக் கவிழ்த்துப் போட்டாள்; சாமான்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்து வீசி எறிந்தாள்; திரைச் சீலைகளைக் கிழித்தாள்; ஜன்னல் கதவுகளை எல்லாம் நொறுக்கினாள்; சுவர்களில் மண்ணையும் நீலச்சாயத்தையும் அள்ளி அப்பினாள்.

பிறகு முகத்திரையை அகற்றி விட்டுத் தலையில் மட்டும் முக்காட்டைப் போட்டுக் கொண்டு, வீட்டை விட்டுக் கிளம்பினாள்; அவளுடைய புதல்வியரும் பிள்ளைகளும் அவள் கூடச் சென்றார்கள். எஜமானி என்னை நோக்கி, "ஏ கப்பூர்! நீ முன்னே சென்று எங்களுக்கு வழி காட்டு; சுவர் இடிந்து உன் எஜமானர் இறந்து புதைந்துகிடக்கும் இடத்துக்கு நாம் போகலாம்.

மண்ணையும் கற்களையும் அகற்றி, பிரேதத்தை வீட்டுக்கு எடுத்து வந்து நல்ல முறையில் அடக்கம் செய்யலாம்'' என்ருள்.

''ஐயோ எஜமான்! ஐயோ எஜமான்!'' என்று கூவிக்கொண்டே அவர்களுக்கு முன்பு நடந்து நான் வழிகாட்டினேன்.

''ஐயோ! எங்களுக்கு இப்படியா கெட்ட காலம் வரவேண்டும்! அவர் போய்விட்டாரே!'' என்று கூறிக்கொண்டே தலைவிரிகோலமாய் என் பின்னே என் எஜமானியும் அவள் குடும்பத்தினரும் வந்தார்கள்; பேட்டையிலுள்ள ஆடவர் பெண்டிர் அனைவரும்-கிழவிகள் முதல் குமரிகள் வரை எல்லோரும்-வெளிப்பட்டு, துக்கம் தாளாமல் வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு எங்கள் கூடவே வந்தார்கள்.

''ஆண்டவனை விஞ்சிய பலமோ சக்தியோ கிடையாது. எல்லாம் அவன் செயல்! சரி, நாம் சென்று இந்த விவரத்தை நீதிபதியிடம் தெரிவிப்போம்'' என்று கூறி, அவரிடம் சென்று ஜனங்கள் விவரத்தைத் தெரிவித்தார்கள். உடனே அவர் கூடைகள், மண்வெட்டிகள் சகிதமாகப் பரிவாரங்களை அழைத்துக்கொண்டு என்னைப் பின் தொடர்ந்தார்.

அவர்களுக்கு வழிகாட்டிச் சென்ற நான் அழுது கதறித் தலையில் மண்ணை அள்ளித் தூவியவாறு வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு, விருந்து நடைபெறுகிற தோட்டத்துக்கு முன்னதாகப் போய்ச் சேர்ந்தேன். என் எஜமானர் என்னைப் பார்த்தாரோ இல்லையோ, உடனே நான் வாயிலும் வயிற்றிலும் அறைந்துகொண்டு, ''ஐயோ எஜமானி! எங்களைக் கவனித்துக்கொள்ள இனி யார் இருக்கிருர்கள்? தங்களுக்குப் பதிலாக நான் போயிருக்கக் கூடாதா?'' என்று கதறினேன்.

எனது அலங்கோல நிலையைக் கண்டதும் என் எஜமானர் திகைத்துப்போனார்; அவருடைய முகம் வெளுத்துவிட்டது. அவர் என்னை நோக்கி, ''கப்பூர்! உனக்கு என்ன கஷ்டம் நேர்ந்தது? சமாசாரம் என்ன? சொல்'' என்று வினவினார்.

''ஏதோ ஒரு சாமான் எடுத்துவர என்னைத் தாங்கள் வீட்டுக்கு அனுப்பி வைத்தீர்கள் அல்லவா? அதன்படி நான் சென்று வீட்டுக்குள் நுழைந்தபோது, கூடத்தின் சுவர் இடிந்து விழுந்து கிடந்தது. கூடம் முழுதும் எஜமானிமீதும் குழந்தைகள் மீதும் விழுந்து கிடக்கிறது'' என்று பதில் சொன்னேன்.

''உன் எஜமானி உயிர் தப்பவில்லையா?'' என்று எஜமானர் வினவினார்.

''இல்லை, எஜமான்! ஒருவர் கூடப் பிழைக்கவில்லை. மூத்த மகன்தான் முதல் முதலாக இறந்து போனார்'' என்றேன்.

''அப்படியானால் என் இளைய புதல்வி என்னவானாள்?'' என்று கேட்டார் எஜமான்.

''அவரும் இறந்து போனார்'' என்று நான் தெரிவித்தேன்.

''நான் ஏறிச்செல்லும் கோவேறு கழுதையின் கதி என்னவாயிற்று? அதாவது சாகாமல் இருக்கிறதா?'' என்று வினவினார் அவர்.

''இல்லை, எஜமான்! லாயத்தின் சுவரும் இடிந்துவிழுந்து வீடு தரைமட்டமாகிவிட்டது. ஆடுகள், வாத்துகள், கோழிகள் எல்லாம்

நசுங்கி ஒரே மாமிசக் குவியலாகக் கிடக்கின்றன'' என்றேன் நான்.

''அப்படியானால் என் மூத்த மகன் என்னவானான்?'' என்று அவர் என்னைக் கேட்டார்.

''அவரும் உயிர் தப்பவில்லை, எஜமான்! வீடும் இடிந்துவிட்டது; அதில் வசித்தவர்களின் சுவடும் தெரியாதபடி செய்துவிட்டது. ஆடு, வாத்து, கோழி இவற்றையெல்லாம் பூனையும் நாயும் தின்று தீர்த்துவிட்டன'' என்று பதில் சொன்னேன்.

இதையெல்லாம் கேட்டவுடனே என் எஜமானருக்கு உலகமே இருண்டுவிட்டது. உணர்விழந்து அறிவு கலங்கியது; அவரால் நிற்க முடியவில்லை. நடுக்குவாதம் கொண்டவரைப்போல், கை கால்கள் நடுங்கிப் பலம் குன்றிப் போனார். ஆடைகளைக் கிழித்தெறிந்து, தாடியைப் பிய்த்துக் கொண்டார்; தலைப்பாகையை எடுத்து அப்பாலே வீசி எறிந்தார்; ஓங்கி ஓங்கி அறைந்துகொண்டதால் அவர் முகத்திலிருந்து ரத்தம் ஒழுகத் தொடங்கியது. ''ஐயோ, குழந்தைகளே! மனைவியே! என்ன கஷ்ட காலம்! எனக்கு இன்று நடந்ததுபோல இதுவரை வேறு யாருக்காவது நடந்திருக்கிறதா?'' என்று ஓலமிட்டுக் கதறினார்.

அவருடைய நிலைக்கு இரங்கி மற்ற வியாபாரிகளும் தோழர்களும் அவரோடு சேர்ந்து கதறினார்கள்; துக்கம் தாளாமல் ஆடைகளைக் கிழித்துக்கொண்டார்கள். என் எஜமானர் குடிவெறியில் சிக்குண்டவர்போல வாயிலும் முகத்திலும் பலமாக அடித்துக்கொண்டு தோட்டத்தை விட்டு வெளியே வந்தார். உண்மையில் தாம் ஒரு பெருந் துயரத்தில் மாட்டிக் கொண்டுவிட்டதாகவே நினைத்து அவர் புலம்பினார்.

தோட்டத்திலிருந்து வெளி வந்த என் எஜமானரும் அவருடைய நண்பர்களும், தூரத்திலே ஒரு கூட்டம் பெருங் கூச்சலிட்டபடி புழுதியைக் கிளப்பிக்கொண்டு வருவதைக் கண்டார்கள். கூர்ந்து கவனித்தபோது அது இவர்களையே நோக்கி வருவதாகத் தெரிந்தது. கூட்டத்தில் நீதிபதியும் அவருடைய பரிவாரமும் வேடிக்கை பார்க்கத் திரண்ட கும்பலும் என் எஜமானருடைய மனைவி மக்கள் ஆகியோரும் தென்பட்டார்கள். என் எஜமானருடைய குடும்பத்தார் துயரம் தாளாமல் கதறிக்கொண்டு நின்றார்கள். என் எஜமானரோடு முதல் முதலாகப் பேசியவர்கள் என் எஜமானியும் அவருடைய பிள்ளைகளுமே!

இவற்றையெல்லாம் பார்த்த என் எஜமானர் பிரமித்துப் போய் உரக்கச் சிரித்தார். ''நீங்கள் சௌக்கியமாக இருக்கிறீர்களா? உங்களுக்கு வீட்டில் என்ன நேர்ந்தது? என்ன விபத்துக்கு ஆளானீர்கள்?'' என்று அவர்களை அவர் வினவினார்.

என் எஜமானரைப் பார்த்தவுடன் அவர்களும், ''நீங்கள் பிழைத்திருக்கிறீர்களே; அதற்கு நாங்கள் ஆண்டவன் திருநாமத்தை வழுத்துகிறோம்'' என்று சொல்லி ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டார்கள். இதன் பிறகு அவருடைய குழந்தைகள் என் எஜமானரை நோக்கி, ''அப்பா! நீங்கள் உயிர் பிழைத்திருக்கிறீர்களே; அதற்காக ஆண்டவன்

திருநாமம் வாழட்டும்'' என்று கூவினார்கள்.

''நீங்கள் நன்றாக இருக்கிறீர்களே; அதுவே போதும். உங்களைப் பாதுகாத்த ஆண்டவனுடைய நாமம் வாழட்டும்'' என்று கூறினாள் என் எஜமானர் மனைவி. எதைப் பார்க்கிறோம், எதைக் கேட்கிறோம் என அறியாமல் திகைத்து அறிவு குழம்பி நின்ற அவள், தன் கணவரை நோக்கி, ''நீங்களும் உங்கள் நண்பர்களும் எப்படி உயிர் தப்பினீர்கள்?'' என்று கேட்டாள்.

''வீடு இடிந்த பிறகு நீங்கள் எப்படி உயிர் தப்பினீர்கள்?'' என்று பதிலுக்கு வினவினார் என் எஜமானர்.

''நாங்கள் சௌகரியமாகவும் சுகமாகவுந்தான் இருக்கிறோம். நம் வீட்டில் ஒரு கேடும் சம்பவிக்கவில்லை. அடிமை கப்பூர்தான் தலையில் எதவும் இல்லாமல், 'ஐயோ, எஜமான்! ஐயோ, எஜமான்!' என்று கதறி, உடைகளைக் கிழித்துக்கொண்டு வந்தான். நாங்கள், 'விஷயம் என்ன?' என்று அவனைக் கேட்டோம். 'சுவரின் அருகே இருந்த சமயம் அது இடிந்து விழுந்து நம் எஜமானர் அந்த இடத்திலேயே காலமாகிவிட்டார்!' என்று சொன்னான்'' என்று தெரிவித்தார்கள்.

''அட கடவுளே! இப்போது தானே, 'ஐயோ எஜமானி! ஐயோ எஜமானி!' என்று அவன் அலறிக் கொண்டு வந்து, 'எஜமானியும் குழந்தைகளும் இறந்துபோனார்கள்' என்று கதறினான்'' என்றார் என் எஜமான்.

பிறகு அவர் என் பக்கம் திரும்பிப் பார்த்தார். தலைப்பாகை அவிழ்ந்து விழ, தலையில் மண்ணைத் தூவியபடி கோரமாக அழுது கொண்டு நின்ற என்னை, ''இப்படி வா'' என்று கூப்பிட்டார். அதன்படி சென்றதும் வாயில் வந்தபடியெல்லாம் என்னை அவர் ஏசினார். ''நீ நாசமாய்ப் போக! தீய குணமுள்ள கசடனே! வேசிமகனே! நீ என் இப்படிச் செய்தாய்? உன் தோலை உரித்துத் தசை வேறாகவும் எலும்பு வேறாகவும் பிய்த்து எடுத்துவிடுகிறேன், பார்'' என்று உறுமினார்.

''பிழையுடன் சேர்த்தே தாங்கள் என்னை வாங்கியிருக்கிறபடியால் அப்படியெல்லாம் என்னை ஒன்றும் தாங்கள் செய்யமுடியாது. இதற்குப் போதிய சாட்சிகள் இருக்கின்றன. வருஷந்தோறும் ஒரு புளுகு நான் சொல்வேன் என்பது தெரிந்த பின்பே தாங்கள் என்னை வாங்கினீர்கள். இப்போது நான் கூறியிருப்பது அரைப்புளுகு தான்; வருஷ முடிவில் பாக்கியுள்ள அரைப் புளுகையும் கூறி முடித்துவிடுவேனானால், நான் கூற வேண்டிய முழுப் புளுகும் பூர்த்தியாகிவிடும்'' என்று நான் பதில் சொன்னேன்.

இதைக் கேட்டதும் அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது; என்னைப் பார்த்து வாயில் வந்தபடி ஏசினார். ''அடிமைகளில் கடைப்பட்டவனே! இது வா அரைப் பொய்? இதனால் விளைந்த துன்பமே எல்லை மீறிப் போய்விட்டதே! உனக்கு இப்பொழுதே விடுதலை அளித்துவிட்டேன். என் முன் நில்லாமல் உடனே இங்கேயிருந்து போய்விடு'' என்றார்.

''எஜமான், தாங்கள் எனக்கு விடுதலை அளித்தாலும் வருஷ முடிவுக்குள் நான் தங்களை விட்டுப் போகமாட்டேன். பாக்கியிருக்கும் அரைப் புளுகையும் நான்

கூறி முடித்த பிறகு, அடிமைச் சந்தைக்கு அழைத்துச் சென்று, என் குறையோடேயே என்னைத் தாங்கள் வருஷ முடிவில் விற்று விடலாம். ஜீவனோபாயத்துக்குரிய தொழில் எதவும் தெரியாத என்னைச் சட்டப்படி தாங்கள் விடுதலை செய்ய முடியாது'' என்றேன்.

எங்களுக்கு இடையே இப்படி வாக்குவாதம் நடைபெற்ற தருணத்தில் பேட்டையைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் நீதிபதியும் அவருடைய பரிவாரமும் துக்கம் விசாரிக்கக் கூட்டமாக வந்து சேர்ந்தார்கள். என் எஜமானரும் மற்ற வியாபாரிகளும் கூட்டமாகச் சென்று நீதிபதியிடம் என் வழக்கைத் தெரிவித்தார்கள். 'அரைப் புளுகுதான்' என்று நான் கூறிய கொண்டி வழக்கையும் கூறினார்கள். இந்தப் பொய்யைக் கேட்டு அங்கே நின்ற ஜனங்கள் முதலில் அதிசயித்தார்கள். பிறகு, வாயில் வந்தபடி எல்லாம் ஏசி என்னைச் சபித்தார்கள். நானோ அவர்கள் கூறியதைக் காதில் போட்டுக்கொள்ளாமல் சிரித்துக் கொண்டு நின்றேன். ''குற்றத்துடன் சேர்த்து வாங்கியிருக்கும் பொழுது என் எஜமானர் எப்படி என்னைத் தண்டிக்க முடியும்?'' என அவர்களை நான் கேட்டேன்.

வீட்டை அடைந்தபோது, அது ஒரு குப்பை மேடாகக் கிடப்பதை என் எஜமானர் கண்டார். ''வீட்டை இப்படி இடித்துப் பாத்திரம் பண்டங்களையும் பீங்கான் கோப்பைகளையும் கப்பூர்தான் உடைத்தான்'' என்று அவர் மனைவி தெரிவித்தாள். இதைக் கேட்டதும் அவருடைய உள்ளத்தில் கோபம் அபாரமாகப் பொங்கியது. ''ஆண்டவனே! இவனைப் போன்ற வேசிமகனை இதுவரை நான் என் வாழ்க்கையில் கண்டதே இல்லை! இதையே இவன் அரைப்புளுகு என்கிறானே! அப்படியானால் இவன் கூறும் முழுப்பொய் ஒரு நகரத்தையே ஏன், இரண்டு நகரங்களைக்கூடப் பாழாக்கி விடுமே!'' என்று கூறிவிட்டு, என்னை நேரே நீதிபதியிடம் இழுத்துச் சென்று, நான் மூர்ச்சித்துச் சோர்ந்து கீழே சாயும்வரை எனக்குப் பலமாக உதை வாங்கித் தந்தார். அதன் பிறகு அதிக விலையில் விற்பதற்கு ஏற்ற முறையில் என்னை அலியாக்கி அடிமைச் சந்தையில் விற்றுவிட்டார்.

விற்ற இடங்களில் எல்லாம் கோள்மூட்டிக் கலகம் செய்வதை நான் நிறுத்தவேயில்லை. இதனால் எந்த இடத்திலும் என்னால் நிலைத்து இருக்க முடியவில்லை. ஒரு பிரமுகர் வீட்டிலிருந்து இன்னொரு பிரமுகர் வீட்டுக்கும் ஓர் அதிகாரி வீட்டிலிருந்து இன்னும் ஓர் அதிகாரி வீட்டுக்குமாகப் பல முறை இடம் மாறினேன். கடைசியாக, கலீபா அவர்களின் அரண்மனைக்கு வந்து சேர்ந்தேன். இப்போது எனக்கு வயதாகி விட்டபடியால், போதிய பலமும் இல்லை; தைரியமும் இல்லை.

உடல் கெடுவதைக் குறித்து எவரும் வெட்கப்பட வேண்டும். உடல் கெட்டது என்றால், அதற்கு ஏதோ குற்றம் குறை நடந்திருக்கிறது என்றுதான் பொருள். உடலும் மனமும் முற்றும் செவ்வையாய் இருக்கும் ஒருவருக்கு ஒருபோதும் நோயே வரக்கூடாது. —மகாத்மா காந்தி

நாவல் சுருக்கம்

# மருமகள்

மூலம்: சரத்சந்திரர்

தமிழ்: த. நா. குமாரஸ்வாமி



பிரபலமான இந்த வங்காளி ஆசிரியரின் 'பரிணீதா' என்ற நாவலின் சுருக்கம் இது. ஸினிமாவிலுங்கூட இதற்கு நல்ல வெற்றி.

# மருமகள்

★

குருசரணன் ஒரு பாங்கியில் 80 ரூபாய் சம்பாதிக்கும் எளிய குமாஸ்தா. ஒட்டி உலர்ந்த உடல்; எதன்மேலும் பற்று இல்லாத சுபாவம். இருந்தும் மனைவி அப்போதுதான் ஐந்தாம் பெண் குழந்தை ஒன்றைப் பெற்றாள் என்ற சங்கதியைக் கேட்டதும் பேரிடி விழுந்தவன்போல் ஆகிவிட்டான். 10 வயது மகள் (மூன்றாம் பெண்) காளிதான் இதைத் தெரிவித்தாள்.

அதற்கு முந்திய வருஷந்தான் இரண்டாம் பெண்ணுக்கு விவாகம் செய்து முடிக்கத் தன் பிதிரார்ஜிதச் சொத்தான இந்த ஒரே வீட்டைக்கூட அடைமானம் வைத்திருந்தான். ஆறுமாத வட்டி கொடுபடாமல் அப்படியே பாக்கியாக இருந்தது. அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. ஆபீஸிலோ வேலை மும்முரம். அழுக்குத் துணியுடன் யாரும் வரக்கூடாது என்று மேலதிகாரி உத்தரவிட்டிருந்தார். இருந்தும் ஒரு வாரமாகச் சலவைக்காரனைக் காணவில்லை. துணிகள் சலவைக்குப் போகாமல் அப்படியே கிடந்தன. 'ஏதாவது மோட்டார் கார் என்மேல் ஏறி நான் சாகக்கூடாதா? பகவானே!' என்றுதான் அவன் வேண்டிக்கொண்டான். மகளை ஒரு கோப்பை குளிர்ந்த நீர் எடுத்து வரச் சொன்னான். அவள் அப்படியே கொண்டு வந்து கொடுத்தாள். அதை ஒரே விழுங்கில் குடித்துவிட்டுப் படுக்கையில் சாய்ந்தான். சற்று நேரத்துக்கெல்லாம் அவனுடைய சகோதரி மகள் லலிதா டீ எடுத்து வந்து, "மாமா! எழுந்து சாப்பிடுங்கள்" என்று எழுப்பினாள்.

தாய் தந்தையற்ற 13 வயது லலிதாவிடம் மாமனான குருசரணனுக்கு அதிக வாஞ்சை. "உன் தலைவிதி, நீயும் இந்த ஏழை மாமன் வீட்டில் வந்து கஷ்டப்பட வேண்டியிருக்கிறதே!" என்று குருசரணன் மனம் நொந்து சொன்னான்.

லலிதா சிரித்த முகத்துடன், "எல்லாரும் வேலை செய்கிறமாதிரிதான் நானும் செய்கிறேன். இதில் என்ன சிரமம்?" என்றாள்.

"இன்றைக்குச் சாப்பாடு எப்படி ஆகும் என்றுதான் தெரியவில்லை" என்றான் குருசரணன்.

"அதற்கென்ன? நான் சமைக்கிறேன். மாமியோடு பழகிப் பழகிக் கற்றுக்கொண்டேன்" என்றாள் லலிதா.

குருசரணனுக்கு இது வியப்பாக இருந்தது. "நிஜமாகவா?" என்று சொல்லி உள்ளூற அன்போடு அவளை ஆசீர்வதித்தான்.

அப்போது அடுத்த வீட்டுச் சேகர் என்ற இளைஞன் அங்கே வந்தான். கண்ணுக்கு லட்சணமாக இருப்பான் சேகர். குழந்தை பிறந்த சங்கதியைச் சொல்லிக் குருசரணன் வருத்தப்பட்டான்; சேகர் அவனுக்கு ஆறுதல் கூறினான். பிறகு லலிதாவின்

கல்யாணத்தைப்பற்றிய பேச்சு வந்தது.

"அவளுக்கோ வயசாகிறது. ஆனால் என் கையிலோ தம்படி இல்லை. வீட்டையோ உங்களிடம் அடைமானம் வைத்திருக்கிறேன். அதனால் வருத்தமில்லை. இருந்தாலும் இந்தமாதிரி சந்தர்ப்பத்தில் என்ன செய்வது?" என்று வருத்தத்துடன் சொன்னான் குருசரணன். பிறகு, "உங்கள் ஆதரவில் இருக்கிறேன், அப்பா! லலிதா சற்றுக் கறுப்புத்தான். இருந்தாலும், எப்படி யாவது காசு வாங்காமல் இவளைப் பார்த்துப் பிடித்திருக்கிறது என்று சொல்லிக் கல்யாணம் பண்ணிக் கொள்ளும் ஒரு பிள்ளையைத் தேடி ஏற்பாடு செய்யேன்" என்றான்.

சேகரும், "சரி. பார்க்கிறேன்" என்றான்.

லலிதா ஒரு தரம் சேகரை நோக்கியதும் பழையபடி தலையைத் தாழ்த்திக்கொண்டாள். அவன் முகம் சற்றே மலர்ந்தது.

சேகர் அங்கிருந்து புறப்படும் போதும் குருசரணன், லலிதாவுக்கு வரன் தேட வேண்டும் என்பதை அவனுக்கு மறுபடி ஞாபகப்படுத்தினான். அப்படியே செய்வதாகத் தலையாட்டிவிட்டுச் சேகர் விடை பெற்றுக்கொண்டான்.

* * *

சியாம் பஜாரில் ஒரு பெரிய இடத்தில் சேகருக்குப் பெண் கொடுப்பதாகப் பிரஸ்தாபம் நடந்து வந்தது. சேகரின் தந்தை நவீன ராய்க்குப் பணத்தின்மேல் கண்; அதனால் அவருக்குச் சம்மதந்தான். ஆனால் அவர் மனைவி புவனேசுவரி, மகன் நேரில் பார்த்துப் பிடித்திருக்கிறது என்று சொன்னால் ஒழியக் கல்யாணம் நிச்சயிப்பதற்கில்லை என்று சொல்லிவிட்டாள்.

நவீன ராய்க்கு எரிச்சலும் கோபமும் வந்தன. அவருக்குத் தாமதம் செய்ய மனமில்லை. அன்று வெகு நேரம் கழித்துத்தான் சாப்பிட்டார்; போய் வெளியறையில் படுத்துக்கொண்டார்.

சேகர் நாசுக்கு ஆசாமி. நாலைந்து நாளைக்குப் பின் ஒரு நாள் பிற்பகல் கண்ணாடி எதிரே நின்று ஒழுங்காக உடை உடுத்துக் கொண்டிருந்தான். அப்போது லலிதா உள்ளே வந்தாள். அடுத்தடுத்து இவர்கள் வீடு இருந்ததால் லலிதா குழந்தையாக இருந்தது முதல் அவளோடு பழகியிருந்தான் சேகர். அவன்தான் அவளுக்குப் படிப்புச் சொல்லி ஓரளவுக்குத் தேர்ச்சி பெற வைத்தான். இரண்டு வீட்டுக்கும் இடையே போய் வர வழி இருந்தது. இரு குடும்பத்தாரும் சர்வ சகஜமாக அந்த வழியே போய் வருவார்கள். சேகர் லலிதாவை நோக்கி, "பெண்ணுக்குப் பிடித்திருக்குமா, பார். நீ கொஞ்சம் ஒழுங்காக இந்த உடுப்பை யெல்லாம் போட்டுவிடேன், பார்க்கலாம்" என்றான்.

லலிதா சிரித்துவிட்டு, "நேரமில்லையே, அண்ணா. அவசரக் காரியம்; கொஞ்சம் சில்லறை வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே அவனுடைய தலையணை அடியிலிருந்து சாவியை எடுத்து, பீரோவைத் திறந்து சில ரூபாய்களை எடுத்துக்கொண்டாள். "எப்போதுதான் இந்தக் கடனை அடைக்கப் போகிறேனோ?"

என்று அவள் தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டாள்.

சேகர், "தானாக அடைகிறது" என்றான். லலிதாவுக்கு இதன் பொருள் விளங்கவில்லை. சேகர் அதை அறிந்து, "காளாவட்டத்தில் தெரியும், பார்" என்று சொல்லிவிட்டு வெளியே கிளம்பினான்.

அன்று இரவு சேகர் திரும்பி வந்ததும், அவன் தாய், "பெண் எப்படி இருக்கிறாள்?" என்று கேட்டாள்.

"நன்றாகத்தான் இருக்கிறாள்" என்றான் அவன்.

தாய், "நிறம் எப்படி? நம் லலிதா மாதிரி இருப்பாளா?" என்று கேட்டாள்.

"லலிதா மாநிறமாச்சே! அந்தப் பெண் நல்ல சிவப்பு."

"அப்படியானால் அப்பாவிடம் சொல்லி நிச்சயம் பண்ணிவிடலாமோ இல்லையோ?"

சேகர் பதிலே சொல்லவில்லை. தாய்க்கு இது வியப்பாக இருந்தது. "பெண் படித்திருக்கிறாளா?" என்றாள். சேகர், "அதையெல்லாம் விசாரிக்கவில்லை" என்றான். பின்னும் வியப்புற்றவளாய்த் தாய், "என்னடா இது! அப்படியானால் பண்ணிக்கொள்ள மாட்டாய் போல் இருக்கிறது" என்றாள்.

சேகர் ஏதோ சொல்ல வாய் திறக்கும்போது லலிதா உள்ளே வந்தாள். சேகர், "என்ன சமாசாரம்? சமையல் பண்ணாமல் இங்கே வந்திருக்கிறாயே?" என்றான்.

அப்போதுதான் புவனேசுவரிக்கு லலிதா வீட்டின் உண்மை நிலை தெரிந்தது. அவள், "என்ன, நிஜமாகவா?" என்று கேட்டு விஷயத்தை நன்றாக விசாரித்து அறிந்துகொண்டு தன் வீட்டுச் சமையல்காரியை அங்கே சமைக்க அனுப்பினாள்.

சேகருக்கு அப்போதுதான் ஒரு கவலை விட்டமாதிரி இருந்தது. அவன் நிம்மதியாகப் பெருமூச்சு விட்டான்.

* * *

ஒரு மாதம் கழித்துத் தியேட்டருக்குப் புறப்பட ஒரு நாள் லலிதா புது ஆடை உடுத்து ஒரு பத்து ரூபாய் எடுத்துப் போகச் சேகரின் அறைக்கு வந்தாள். அவன் ஏதோ நாவல் படித்துக் கொண்டேயிருந்தான். அவனைக் கேட்டு ரூபாயை எடுத்துக் கொண்டபின் லலிதா தயங்கித் தயங்கி நின்றாள். எப்போதும் சேகரிடம் சொல்லாமல் அவள் எங்கேயும் போவதில்லை. தான் சாருபாலா என்ற சிநேகிதியுடனும் அவள் மாமாவுடனும் புறப்பட்டுப் போவதாக அவன் சொன்னாள்.

சேகர், "ஓ! கொஞ்ச நாளாக அவர்கள் வீட்டில் சீட்டு ஆடப் போகிறாயாமே?" என்று கேட்டு அவளைத் திரும்பிப் பார்த்தான். அவள் புறப்படத் தயாராக இருக்கவே, "சரி; போய் வா" என்றான். அப்படியும் அவள் வெகு நேரம் தயங்கி நின்றபின், "வரட்டுமா?" என்றாள். "எதற்காக நிற்கிறாய்? போ என்றுதான் சொன்னேனே!" என்றான் சேகர்.

"பாதி நம் செலவு; மீதிப் பாதி அவர்கள் மாமா செலவு. போகலாமா?" என்று மறுபடியும் கேட்டாள் லலிதா.

சேகர், "தொந்தரவு பண்ணாதே! இஷ்டம் இருந்தால் போயேன். நல்லது, கெட்டது தெரிய உனக்கு

வயசு ஆகவில்லையா என்ன?'' என்று எரிந்து விழுந்தான்.

லலிதா திடுக்குற்று நின்றாள். அவன் எப்போதாவது இப்படி எரிந்துவிழுவது சகஜந்தான். இருந்தாலும் இன்று அவள் உற்சாகமெல்லாம் இதைக் கேட்டதும் குன்றிவிட்டது. ரோஷத்தினால் கண்களில் நீர் வர அவள் சற்று நேரம் அங்கே நின்றபின் கண்ணைத் துடைத்தபடி வீட்டுக்குச் சென்றாள். "எனக்குத் தலையை வலிக்கிறது'' என்று சொல்லிக் காளியிடம் பணத்தைக் கொடுத்து அவளை மட்டும் சாருபாலாவோடு போகச் சொல்லி விட்டாள்.

* * *

சாருபாலாவின் தாய்க்கு நன்றாகச் சீட்டு ஆட வராவிட்டாலும், லலிதா கூடத் துணையாக இருந்தால் சமாளித்துக்கொள்வாள். தியேட்டருக்கு அவள் பெண் போய்வந்த மறுநாள் நடுப்பகல் லலிதா சீட்டாட வராததால் அவளை அழைத்துவரச் சாருபாலாவை அனுப்பினாள். அப்படியும் வராது போகவே மனோரமாவே வந்து வலுக் கட்டாயமாக அவளைத் தன் வீட்டுக்கு அழைத்துப் போனாள். சாருவின் மாமா கிரீந்திரனோடு இவர்கள் ஆடுவது வழக்கம். ஆனால் அன்று லலிதாவுக்கு ஆட்டத்தின்மேல் மனம் செல்லவில்லை. விரைவில், "உடம்பு சரியில்லை'' என்று எழுந்து போய்விட்டாள்.

"இன்றைக்குச் சரி; நாளைக்கு நிச்சயமாக வந்து ஆட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும்'' என்று கிரீந்திரன் சொன்னான்.

லலிதா, "ஊஹூம்'' என்று சொல்லிப் போய்விட்டாள். சேகர் என்ன சொல்லிவிடுவானோ என்று தான் அவளுக்குத் திகில். கொஞ்ச நாளாகக் கிரீந்திரன் அவளை மிகவும் ஆதரவுடன் நோக்குவதைக் கவனித்தாள். இது அவளுக்கு என்னவோ தலையிறக்கமாக இருந்தது. அன்று அவள் சேகர் வருவதற்குள் அவன் அறையை வழக்கம் போல் ஒழித்து வைக்கப் போனாள். சேகர் அவள் குழந்தையாக இருந்தது முதல் ஆதரவோடு கவனித்து வருவது மற்றவர்களுக்குத் தெரியும். இருந்தாலும், அது இன்று எந்த நிலையில் இருக்கிறது என்பது யாருக்கும் தெரியாது; லலிதாவுக்குக்கூடத்தான்.

அன்று அவனுடைய அறையை ஒழித்துவிட்டு, வெளியே வருவதற்குள் சேகர் வரும் காலடி யோசை கேட்கவே ஓர் ஓரமாக ஒதுங்கி நின்றாள்.

வந்ததும் வராததுமாய் அவன், "நேற்று ராத்திரி வீட்டுக்குத் திரும்ப வெகு நேரமாயிற்றோ?'' என்றான்.

லலிதா பதில் சொல்லவில்லை. சேகர் ஈஸிசேரில் சாய்ந்தபடி மீண்டும் அதையே கேட்டான். பதில் வராது போகவே வெறுப்போடு, "சரி; சரி; போ! அம்மா கூப்பிடுகிறாள் கீழே'' என்றான்.

லலிதா அங்கே போய்ப் பார்த்த போது புவனேசுவரி ஏதோ சிற்றுண்டி தயாரித்துக்கொண்டிருந்தாள். "கூப்பிட்டீர்களா என்ன?'' என்று கேட்டாள் லலிதா.

"இல்லையே!'' என்று சொல்லிப் புவனேசுவரி அவள் முகத்தைக் கவனித்தாள்; "ஏன், உடம்பு சரியாயில்லையா என்ன, அம்மா?'' என்று ஆதரவோடு விசாரித்தாள்.

லலிதா 'ஒன்றுமில்லை' என்ற பாவனையில் தலையசைத்தாள்.

பிறகு புவனேசுவரி லலிதா விடம் சிற்றுண்டியைக் கொடுத்து, "அண்ணாவிடம் கொடுத்து விட்டு வா" என்றாள்.

லலிதா, அப்படியே அதை எடுத்துப் போனாள்; சேகர் ஈஸிசேரின்மேல் கைகால் கழுவாமல் கண்ணை மூடிக்கொண்டு சாய்ந்திருந்தான். "சாப்பிடவில்லையா இதை?" என்றாள் லலிதா.

சேகர் அவளைக் கவனிக்காமலே, "உம்...வைத்துவிட்டுப் போ" என்றான். அப்படியும் அவள் நிற்கவே, "சரி; கீழே போ" என்றான்.

"கீழே ஒரு வேலையும் இல்லை" என்றாள் லலிதா.

சேகர் அவளைப் பார்த்து ஏளனமாக, "ஓ! இல்லாவிட்டால் சாரு வீட்டில் வேலை இருக்கும்; போய் வா" என்றான்.

லலிதா ரோஷத்தோடு தட்டைத் 'தம்' என்று மேஜைமேல் வைத்துவிட்டு வெளியே போய் விட்டாள். அவள் கீழே வந்த போது புவனேசுவரி, "டீயை எடுத்துக்கொண்டு போகவில்லையாடி, அம்மா?" என்றாள்.

"எனக்குப் பசியாக இருக்கிறது, அம்மா! வேறு யாராவது கொண்டு போய்க் கொடுக்கட்டும்" என்று சொல்லி லலிதா உட்கார்ந்து விட்டாள்.

புவனேசுவரி சிரித்துக் கொண்டே, "சரி; நீ உட்கார். சமையல்காரியை அனுப்புகிறேன்" என்றாள்.

தான் தியேட்டருக்குப் போகாதிருந்தும் இப்படிச் சேகர் தன் மேல் கோபித்துக்கொண்டு தன்னை ஏளனம் செய்ததுதான் அவளுக்குப் பொறுக்கவில்லை. பிறகு சேகர், தான் சொன்னது தவறு என்று தெரிந்துகொண்டு அவளை வரச் சொல்லியும் அவள் போகவே யில்லை.

* * *

நாலைந்து நாள் கழித்து வழக்கம்போல் வரும் பிச்சைக்காரன், "அம்மா!" என்று லலிதாவை அழைத்தான். அவன் வரும் போதெல்லாம் லலிதா எப்படியாவது ஒரு ரூபாய் அவனுக்குக் கொடுத்துவிடுவாள். "போன ஜன்மத்தில் நீதான் எனக்குத் தாய்" என்று அவன் உறவு கொண்டாடத் தலைப்பட்டான். அன்று லலிதா என்ன செய்வதென்று தெரியாமல் சற்று விழித்த பிறகு காளியை அழைத்து, "உனக்குக் கோடி புண்ணியம் உண்டு. சேகர் அண்ணாவிடம் போய் ஒரு ரூபாய் வாங்கி வா" என்றாள்.

அப்படியே காளியும் போய் ரூபாயுடன் திரும்பி வந்தாள்.

"சேகர் அண்ணா என்ன சொன்னார்?" என்றாள் லலிதா.

"ஒன்றுமில்லையே! பீரோவிலிருந்து என்னையே எடுத்துக் கொள்ளச் சொன்னார். அவ்வளவு தான்" என்றாள் காளி.

சட்டுப் பட்டென்று பிச்சைக் காரனை அனுப்பிவிட்டாள் லலிதா. இந்த நாலைந்து நாளாகச் சீட்டாட்டம் பலமாக நடந்து வந்தது. ஆனால் இன்று லலிதா தலைவலி என்று சொல்லிவிட்டு அங்கே போகவில்லை. காளியை அழைத்து, "சேகர் அண்ணா என்னைப்பற்றி விசாரித்தாரா?" என்றாள்.

"ஆமாம். நேற்றுக் கேட்டார்; மத்தியான்னம் சீட்டாடுகிறாளா லலிதா என்றார்."

லலிதா பரபரப்புடன், "நீ என்ன பதில் சொன்னாய்?" என்றாள்.

"சாரு அக்கா வீட்டில்தான் சீட்டாடுகிறாயே; 'ஆமாம்' என்றேன்."

லலிதா திடீரென்று, "உன்னை யாரடி அதெல்லாம் சொல்லச் சொன்னார்கள்? போ! இனிமேல் உனக்கு ஒன்றும் தரமாட்டேன்!" என்று காளியின்மேல் சீறி விழுந்தாள்.

காளிக்கு ஒன்றுமே புரியவில்லை. அவள் திடுக்கிட்டுப் போய்விட்டாள்.

* * *

இரண்டு நாளாக லலிதா சீட்டு ஆட வராததால் கிரீந்திரனுக்கு என்னவோபோல் ஆகிவிட்டது. அவன், "கூடாது என்று அவள் வீட்டிலே தடுத்துவிட்டார்களா?" என்று தன் சகோதரி மனோரமாவைக் கேட்டான்.

"அவளே தான் வரவில்லை" என்றாள் மனோரமா.

"நீ போய் அழைத்து வந்தால் வருவாள்" என்று அவன் தூண்டவே, மனோரமா அப்படியே லலிதாவை அழைத்து வந்துவிட்டாள்.

அன்று ஆட்டத்தில் லலிதாவுக்குத்தான் ஜயம். இரண்டு மணிக்கெல்லாம் காளி வந்து சேகர் கூப்பிடுவதாகச் சொல்லவே லலிதாவின் முகம் வெளுத்துவிட்டது. அவள் அப்படியே சீட்டைப் போட்டுவிட்டுப் புறப்பட்டுவிட்டாள்.

அவள் போனதும் கிரீந்திரன், "நவீன பாபு இவர்களுக்கு நெருங்கின உறவா என்ன?" என்று விசாரித்தான்.

மனோரமா விஷயத்தை விளக்கி, குருசரணனின் வீட்டையே நவீன பாபு ஏப்பம் விட்டுவிடப் போகிறார் என்றாள்.

கிரீந்திரனுக்கு என்னவோ மாதிரி ஆகிவிட்டது. அவன் சற்று நேரங் கழித்து, "எனக்குத் தான் ஏராளமாகச் சொத்து இருக்கிறதே! அவர்கள் கடனை அடைத்து உதவி செய்கிறேனே!" என்றான்.

மனோரமா, "சும்மாவா?" என்றாள் ஆச்சரியத்துடன்.

"ஆமாம்" என்றான் கிரீந்திரன்.

"அதனால் என்ன லாபம்? அவர்கள் பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர்களில்லையே!"

"இராவிட்டால் என்ன? நம்மைப்போல் மனுஷர்கள் தானே?" என்றான் கிரீந்திரன். பிறகு, "அதிருக்கட்டும்; இந்த லலிதா செலவழிக்கிறதைப் பார்த்தால் இவர்கள் ஏழைகள் என்றே நினைக்க முடியவில்லையே! சாருவைக் கேட்டுப் பார், பணம் எங்கிருந்து வருகிறது என்று" என்றான் கிரீந்திரன்.

சாருவை விசாரித்தபோது சேகர்தான் கொடுத்து வருவதாகத் தெரிந்தது. மனோரமா, "பரவாயில்லை. அப்பனைப் போல இல்லை பிள்ளைகள். ஏதோ தயை தாட்சிண்ணியம் பார்க்கிறார்கள் என்று தெரிகிறது" என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள். பிறகு சாரு, "அடுத்த மாசியில் பெரிய இடத்தில் சேகர் அண்ணாவுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது" என்ற தகவலை வெளியிட்டாள்.

* * *

குருசரணனுக்கும் கிரீந்திர

னுக்கும் கொஞ்ச நாளாகத்தான் பழக்கம். இருந்தாலும், விரைவில் தன் குறைகளையெல்லாம் கிரீந்திரனிடம் உள்ளூறச் சொல்லிக் கொண்டான். "சமூகமாம் சமூகம்! என் நிலைமையைப் பார், அப்பா! வீடு வாசலோ அடைமானம். இன்னும் இரண்டு நாள் போனால் குழந்தை குட்டிகளை வைத்துக்கொண்டு நடுத்தெருவில் நிற்க வேண்டியிருக்கும். அப்போது ஊரார் யாராவது, 'என் வீட்டில் தங்கு' என்று இடங் கொடுக்கப் போகிறார்களோ? இந்தச் சமூகம் இருந்து என்ன? போய் என்ன? ஜாதியாம்! குலமாம்!" என்றான்.

லலிதா இதையெல்லாம் மாமாவின் பின்னாலிருந்து கேட்பாள்.

கிரீந்திரனும் இதை ஆமோதித்துப் பேசுவது பொருத்தமாகவே லலிதாவுக்குப் பட்டது. மாமாவுக்கு எவ்வளவு கஷ்டம் பார் என்று மனம் நொந்துகொண்டாள்.

இப்போதெல்லாம் கிரீந்திரன் அவளை 'நீ' என்றே அழைத்தான்.

* * *

ஒரு நாள் குருசரணன் முகம் வாடி வீடுதிரும்பினான். கிரீந்திரன் வழக்கம் போல் அவனைக் காண வந்தான். லலிதாவும் அங்கே இருந்தாள். "எல்லாம் தெரிந்தும் நவீன அண்ணா அப்படிக் கேட்டு விட்டாரே!" என்று குருசரணன் சொன்னபோது லலிதா, "அதெல்லாம் எதற்குச் சொல்ல வேண்டும்? மாமா, கவலைப்படாதே. எல்லாம் சரியாகி விடும்" என்று மழுப்பப் பார்த்தாள்.

ஆனால் குருசரணன், "நவீன பாபு தம் மனைவிக்கு உடம்பு சரியாக இல்லை என்றார். சீக்கிரம் அசலில் பாதியையும் வட்டி முழுவதையும் கொடுத்தாக வேண்டும் என்கிறார். நான் என்ன செய்வது?" என்றான்.

அப்போது கிரீந்திரன், "ஒன்று சொல்கிறேன்: கேட்கிறீர்களா?" என்றான் சற்றுக் கூச்சத்தோடு.

குருசரணன், "தாராளமாகச் சொல்லேன், அப்பா!" என்றான்.

"எனக்கு ஏராளமாகச் சொத்து இருக்கிறது. வீணாகத்தான் கிடக்கிறது அதெல்லாம். உங்களுக்கு வேண்டுமானால் உதவத் தயார். உங்களுக்கு என்றைக்கு முடிகிறதோ அப்போது திருப்பிக் கொடுத்தாலே போதும்" என்றான் தயங்கியபடி.

குருசரணன், லலிதா இருவருக்கும் இது ஆச்சரியமாக இருந்தது.

அப்போது காளி அங்கே வந்து, "சேகர் அண்ணா தியேட்டருக்குப் போகிறாராம். உன்னையும் தயாராக இருக்கச் சொன்னார்" என்றாள். குருசரணன், "போய் வா, அம்மா! அவர்கள் எல்லாரும் காத்துக்கொண்டிருப்பார்கள்" என்றான். போகும்போது கிரீந்திரனை நன்றியோடு நோக்கினாள் லலிதா. கிரீந்திரனும் இதைக் கவனித்தான். அவள் புது உடை உடுத்துத் திரும்பி வந்து கவனித்தபோது கிரீந்திரன் அங்கே இல்லை. குருசரணன் மட்டும் தலையணையில் முகத்தை மறைத்துக்கொண்டு படுத்திருப்பதைக் கண்டாள். அவன் கண்களிலிருந்து நீர் ஆறாய்ப் பெருகியது. அது வருத்தத்தினால் ஏற்பட்டதல்ல, ஆனந்தக் கண்ணீரே என்பதை அவள் உணர்ந்துகொண்டாள்.

அவள் அங்கிருந்து புறப்பட்டுச் சேகரின் அறையில் வந்தாள். அவள் கண்களில் நீர் சுரப்பதைக் கண்டதும் சேகர் பரபரப்போடு, "ஏன்? அழுகிருயா என்ன?" என்ருன்.

அவள் இல்லை என்ற பாவனையாகத் தலையை ஆட்டினுள். இந்த ஏழெட்டு நாளாக அவளைக் காணுமல் சேகருக்கு வெறிச்சென்று இருந்தது. அவள் முகத்தைத் தொட்டுத் தூக்கி, "நிஜமாகவே அழத்தான் அழுகிருய்! என்ன நடந்தது?" என்ருன் ஆதரவோடு.

லலிதா அதற்குமேல் சமாளிக்க முடியாமல் சேலைத் தலைப்பால் முகத்தை மூடிக்கொண்டு விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டாள்.

* * *

நவீன ராய் வட்டியும் முதலும் தம்படி பாக்கி விடாமல் வாங்கிக் கொண்டுதான் குருசரணனிடம் அடைமானப் பத்திரத்தைத் திருப்பிக் கொடுத்தார். "பணம் யார் கொடுத்தார்கள்?" என்று கேட்டார்.

குருசரணன் பணிவாகவே, "அதை மட்டும் சொல்வதற்கில்லை, மன்னிக்க வேண்டும்" என்ருன்.

ஆனுல் நவீன ராய் கிண்டிக் கிண்டி விசாரித்து, ரசீதுகூட இல்லாமல் கை பதிலாகவே இந்தப் பணம் குருசரணனுக்குக் கிடைத்திருப்பதை அறிந்துகொண்டார். வாய் தவறிக் குருசரணன், "பையன் மிகவும் நல்லவன்" என்று சொல்லிவிட்டான். பிறகு தான், 'அடாடா! இப்படிச் சொல்லிவிட்டோமே!' என்று அவனுக்குப் பட்டது.

நவீன ராய், "ஏதோ யோசித்துச் செய், அப்பா! அப்புறம் ஏதாவது சிக்கலில் மாட்டிக்கொள்ளாமல் இருந்தால் போதும்" என்று ஒப்புக்குச் சொல்லி வைத்தார்.

குருசரணன் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டு போய் விட்டான்.

* * *

ஒவ்வொரு வருஷமும் புவனேசுவரி இந்த நாளில் மேற்கே மலைச்சாரல் பக்கம் போய்க் கொஞ்ச நாள் அங்கே இருந்து வருவது வழக்கம். சேகர் தான் அவளை அழைத்துப் போவான். கூடவே லலிதாவும் போவாள். ஆனுல் இந்தத் தரம் லலிதா வரமாட்டாள் என்று தெரிந்தது.

சேகர் காளியை விசாரித்த போது லலிதாவுக்கு வரன் தேடிக் கொண்டிருப்பதாகவும் மாசி பங்குனிக்குள் விவாகம் ஆகி விடலாம் என்றும் தெரிந்தது.

இதைக் கேட்டதும் சேகர் அப்படியே அசந்து நின்றுவிட்டான். காளி கள்ளங் கபடற்ற பெண்; ஆகையால், "கிரீந்திர பாபு ரொம்ப நல்லவர். அவர் பணம் கொடுத்ததால்தான் உங்கப்பாவிடமிருந்து வீட்டை மீட்டார் எங்கள் அப்பா" என்று சொன்னுள்.

அப்போதுதான் சேகருக்கு முழு விவரமும் தெரிந்தது. அவன், "லலிதாவை உடனே இங்கே வரச் சொல்" என்ருன்.

காளி போய்விட்டாள். லலிதா வந்து பார்த்தபோது சேகர் கூரையைப் பார்த்தபடி ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பது தெரிந்தது. அவள் என்னவோ ஏதோ

என்று திகிலுடன் மெதுவாக வந்து, "கூப்பிட்டாயா என்ன, அண்ணு!" என்ருன்.

சேகர், "ஆமாம். ஊருக்குப் போகிறேம், நானும் அம்மாவும் நாளைக்கு. இந்தா சாவி, உன் செலவுக்கு வேண்டும்போல் இருந் தால் எடுத்துக்கொள்" என்று தொண்டை அடைக்கச் சொன் ஞன். பிறகு இருமிச் சமாளித்துக் கொண்டு, "அவசியமாக இருந்தால் என் விலாசத்தை அண்ணுவிட மிருந்து கேட்டுத் தெரிந்து கொண்டு கடிதம் போடு. போய் வருகிருயா? நான் அறையை ஒழிக்க வேண்டும்" என்ருன்.

"நீ போய்க் குளி. நான் ஒழித்து வைக்கிறேன்" என்ருள் லலிதா.

சேகர் சாவிக் கொத்தை அவ ளிடம் கொடுத்துவிட்டுப் போய் விட்டான். தாயை விசாரித்ததில் காளி சொன்னது நிஜந்தான் என்று தெரிந்தது. குளித்துவிட்டு உடை மாற்றிக்கொள்ள அறைக் குள் நுழைந்தான். லலிதா இன் னும் அறையைச் சுத்தம் செய்ய வில்லை; சும்மா உட்கார்ந்திருந்த வள், திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். அவள் கண்கள் செக்கச் செவேல் என்று சிவந் திருந்தன. சேகர் இதையெல்லாம் கவனித்தும் பாராதது போல் உடை மாற்றிக்கொண்டு ஆபீ ஸுக்குப் புறப்பட்டான்.

* * *

பிற்பகல் மாமாவுக்கு டீ கொடுக்க வந்தபோது மாமா அறையில் சேகர் உட்கார்ந்திருப் பதைக் கண்டாள் லலிதா. கிரீந் திரனும் வழக்கம்போல் அங்கே இருந்தான். சேகருக்கு மட்டும் அவள் டீ கொடுக்காமல் இருந் ததைப் பார்த்துக் கிரீந்திரன், "சேகர் பாபுவுக்கு - ?" என்ருன்.

அவள், "சேகர் அண்ணு டீ சாப்பிடுவதில்லை" என்ருள்.

லலிதா டீ சாப்பிடுவதில்லை என்று கிரீந்திரனுக்குத் தெரியும்; இப்போது சேகர்தான் அதற்குக் காரணம் என்று தெரிந்துகொண் டான்.

குருசரணன் பேச்சு வாக்கில், "ஒரு பையனைப் பார்த்துவிட்டுத் தான் வந்தோம். அப்படி அழகன் என்று சொல்ல முடியாவிட்டாலும் குரூபி இல்லை. படித்திருக்கிருன். ஆனல் நம் கிரீந்திரனுக்குப் பிடிக்க வில்லை" என்ருன்.

கிரீந்திரனுக்கு எந்த வரனைப் பார்த்தாலும் பிடித்திராதுதான் என்பதையும், அதன் காரணம் இன் னது என்பதையும் சேகர் ஒரு வாறு ஊகித்துக்கொண்டான்.

இருந்தாலும் சிரித்துக் கொண்டே, "என் பிடிக்கவில்லை யாம், கிரீந்திர பாபுவுக்கு?" என்று விசாரித்து வைத்தான்.

கிரீந்திரன் முகம் சற்றே சிவந் தது. சேகர் இதைக் கவனித் தான். பிறகு எழுந்து நின்று, "நாளைக்கு மேற்கே புறப்பட்டுப் போகிறேம். கல்யாணம் நிச்சயம் ஆனல் கடிதம் போட மறக்க வேண்டாம்" என்ருன்.

குருசரணன் சிரித்துக் கொண்டே, "உங்களுக்கெல்லாம் தெரியாமலா?" என்று திரும்பிப் பார்த்தபோது லலிதாவை அங்கே காணவில்லை.

"கல்யாணப் பேச்சை எடுத் ததுமே அவள்தான் ஓடியே போய் விட்டாளே!" என்ருன் சேகர்.

குருசரணன், "ஆமாம். வய சாகிறதோ இல்லையோ?" என்று சொல்லிப் பெருமூச்சு விட்டான்.

எவ்வளவோ கஷ்டங்களை அநுபவித்து ஒட்டி உலர்ந்து போன குருசரணனின் முகத்தில் தெரிந்த அன்பையும் ஆதரவையும் பார்த்ததும் சேகருக்கும் கிரீந்திரனுக்கும் உள்ளூற அவனிடம் பக்தியும் சிரத்தையும் ஏற்பட்டன.

அன்று மாலை சேகரின் அறையில் அவனுக்கு வேண்டிய துணிமணிகளைத் தயாராக வைத்துக்கொண்டிருந்தாள் லலிதா. சேகர் அறையில் நுழைந்தபோது அறையின் விளக்கு வெளிச்சம் அவன் முகத்தில் பட்டது. வழக்கில் எல்லாச் சொத்தையும் தோற்றவன் மாதிரி ஒரேமணிநேரத்தில் அவன் முகம் மாறியிருப்பதை அவள் கண்டு திடுக்கிட்டுப் போனாள்.

லலிதாவுக்கு ஏனோ அழுகை அழுகையாக வந்தது. அவள் அவன் கையைப் பிடித்துக்கொண்டு, "என்ன சேகர் அண்ணா, என்னவோ மாதிரி இருக்கிறாயே!" என்று கேட்டாள்.

"ஒன்றுமில்லை" என்றான் சேகர். அவள் தனக்காகத் தயாராக வைத்திருந்த ஓவர் கோட்டைப் பார்த்ததும், "இதைக் கூட எடுத்து வைத்திருக்கிறாயா? சொல்லவேயில்லையே!" என்றான்.

லலிதா புன்னகையோடு, "ஆமாம், போன தடவை குளிர் தாங்காமல் அவதிப்பட்டாயே, குளிர்ந்தால் மறக்காமல் இதைப் போட்டுக் கொள், தெரிகிறதா?" என்றாள்.

"சரி" என்று கண நேரம் கண் கொட்டாமல் அதைப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டுச் சட்டென்று, "ஊஹூம். அது நடக்கவே நடக்காது" என்று சொன்னான்.

"ஏன்? போட்டுக்கொள்ள மாட்டாயா?"

சேகர் தன்னைச் சமாளித்துக்கொண்டு, "இல்லை, இல்லை. வேறு ஏதோ கவனம்" என்றான். பிறகு சற்றே முகமலர்ச்சியுடன், "அதிருக்கட்டும். அடுத்த வருஷம் எனக்கு யார் இப்படியெல்லாம் எடுத்து வைத்து ஒத்தாசை செய்யப்போகிறார்கள்?" என்றான்.

"சீ போ!" என்றாள் லலிதா.

சேகர் சிரித்துக்கொண்டே, "சரி. போகத்தான் போகிறேன். ஆனால் உங்கள் மாமா மாதிரி ஒரே துணி, மேல் வேஷ்டியோடு அலைய வேண்டியதுதான்" என்றான்.

லலிதா சாவிக் கொத்தைத் தரையில் போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தாள். அவளுக்கு வெட்கம் தாங்கவில்லை. தன் வீட்டு மாடியில் ஒரு மூலையில் நிலா வெளிச்சத்தில் காளி சம்பங்கிப் பூத் தொடுத்துக்கொண்டிருந்தாள். லலிதா, "எதற்கடி?" என்றாள்.

காளி தலை நிமிராமலே, "இன்றைக்கு ராத்திரி என் பொம்மைப் பெண்ணுக்குக் கல்யாணம். அது தான் தொடுக்கிறேன்" என்றாள்.

"அடி அசடே! ரோஜாப்பூ, செவ்வந்திப் பூ மாதிரி பூவைத் தானே கல்யாணத்தில் போடுவார்கள்! போயும் போயும் சம்பங்கிப் பூவையா தொடுக்கிறாய்?" என்றாள் லலிதா.

"ஏனாம்? வேறு கிடைக்காவிட்டால் என்ன செய்கிறதாம்? அதிருக்கட்டும். சற்று இங்கேயே இரு. போய் ஏதாவது சாப்பிட்டு விட்டு உனக்கும் கொண்டு வருகிறேன்" என்றாள் காளி.

அவள் போனதும் லலிதா மாலையைத் தொடுத்து முடித்தாள். காளி திரும்பி வந்ததும், "எல்லா

ருக்கும் சொல்லிவிட்டு வந்து விட்டேன்; சேகர் அண்ணாவுக்குத் தான் சொல்லவே மறந்து விட்டேன்” என்றாள். மறுபடியும் புறப்பட்டுப் போனாள். இந்தத் தரம் திரும்பி வந்ததும், “சேகர் அண்ணாவிடம் சொன்னேன். ஒரு சரம் வேண்டுமாம் அவருக்கு. கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வருகிறாயா?” என்றாள்.

முதலில் லலிதா, “நீயே போ” என்றாள். ஆனால் மறுகணமே, “சரி. சரி. நானே போகிறேன்” என்று புறப்பட்டாள்.

சேகர் ஏதோ கடிதம் எழுதிக் கொண்டிருந்தான். அறைக் கதவண்டை வந்ததும் லலிதா சற்று நின்று, அவனைத் திடுக்கிடப் பண்ண வேண்டுமென்று கையில் இருந்த மாலையைக் கப்பென்று அவன் கழுத்தில் போட்டு விட்டாள்.

சேகர் திடுக்கிட்டு, “காளி! என்ன இது!” என்று சொல்லித் திரும்பினான். அவன் முகபாவம் மாறிவிட்டது; “என்ன லலிதா, இப்படிப் பண்ணிவிட்டாயே!” என்றான்.

“என்ன?”

சேகர் முன் போலவே முகத்தைப் பெரியதனமாக வைத்துக் கொண்டு, “தெரியாதா? இன்றைக்குப் பௌர்ணமியும் அதுவுமாக மாலை போட்டால் என்ன அர்த்தமாம்?” என்றான்.

லலிதாவுக்கு வெட்கம் தலை தூக்க முடியவில்லை. அவள், “ஊஹூம். அதெல்லாம் இல்லை” என்று சொல்லிக்கொண்டே வெளியே ஓடினாள். இத்தனை வருஷமாக அவனோடு பழகியிருந்தாள். இதுவரை அவன் இந்த மாதிரி பேசியதேயில்லை. தான் அநாதை என்றுதான் அவன் இப்படி ஏளனம் செய்கிறான் என்று அவளுக்குப் பட்டது.

மறுபடியும் சேகர் கூப்பிடுவதாக வேலைக்காரி வந்து சொன்னாள். எப்படியாவது அந்த மாலையைத் திருப்பி வாங்கி வந்துவிட வேண்டுமென்று இருந்தது லலிதாவுக்கு. அப்போதுதான் அவளுக்கு நிம்மதி ஏற்படும் போல் இருந்தது.

சேகரின் அறையில் வந்ததும் அவனைப் பார்த்து, “பரிகாசம் பண்ணாதே! அப்புறம் இங்கே வரவே மாட்டேன். அதைத் திருப்பிக் கொடுத்து விடு” என்றாள்.

“எடுத்துக்கொண்டு போயேன்.”

“நீ அங்கிருந்து போட்டுவிடு.”

“கிட்ட வந்தால்தான் தருவேன்.”

“சரி, வேண்டாம்” என்று கோபித்துக்கொண்டு போய் விட்டாள் லலிதா. போனவள் கீழே இறங்கவில்லை. மொட்டை மாடியின் கைப் பிடியைப் பிடித்தபடி நிலாவில் கம்மென்று நின்றுகொண்டிருந்தாள். அவள் கண்ணிலிருந்து ரோஷமும் வெட்கமும் தாங்காமல் நீர் பெருகியது.

சேகர் அண்ணா தன்னை இப்படி அவமானப்படுத்த வேண்டும் என்று குமுறிக்கொண்டிருந்தாள். இப்படி யோசனையில் ஆழ்ந்திருந்தபோது ஏனோ திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். சேகர் அவள் பின்னால் மௌனமாகச் சிரித்தபடி நின்றுகொண்டிருந்தான். அவன் எதிர்பாராமல் அவள் மாலை போட்ட மாதிரியே, அவனும் மாலையை அவள் கழுத்தில் விழும்படி போட்டாயிற்று!

"என்னை இப்படி ஏன் அவமானப்படுத்துகிறாய்?" என்றாள் லலிதா.

"நீ மட்டும் என்னை அவமானப் படுத்தலாமோ? ஏன் என் கழுத்தில் போட்டாய்? சரி. வெளியூர் போனாலும் நீ என் கையை விட்டுப் போகாமல் இருப்பதற்குத்தான் இப்படிச் செய்தேன்" என்றான்.

லலிதா பதில் சொல்லவில்லை; தலை குனிந்தபடி நின்றாள். அந்தப் பௌர்ணமி நிலவில் இருவரும் சற்று நேரம் மௌனமாக நின்றார்கள். கீழேயிருந்து காளி தன் பொம்மைக் கல்யாணத்துக்கு ஊதும் மங்கள சங்கம் கேட்டது.

சேகர் அவளை மார்போடு அணைத்துக்கொண்டான். லலிதாவின் உடல் முழுதும் மயிர்க்கூச்சு எடுத்தது. அவள் சற்று விலகி நின்று, "கழுத்தில் தெரியாமல் மாலை போட்டேன் என்றுதானே இப்படி என்னை.." என்று சொல்ல வாய் எடுத்தாளோ இல்லையோ, சேகர் சிரித்தபடி, "இல்லவே இல்லை. ரொம்ப நாளாகவே எனக்கு உன்மேல் ஆசைதான். இன்றைக்குத்தான் உன்னை விட்டு வாழ முடியாது என்று உள்ளூறத் தெரிந்துகொண்டேன்" என்றான்.

"உங்க அப்பாவுக்குத் தெரிந்தால் சீறி விழுவார்; அம்மாவுக்கு வருத்தமாக இருக்கும். இது கூடவே கூடாது" என்று விம்மினாள் லலிதா.

"அப்பா கோபித்துக்கொள்வார்; ஆனால் அம்மா சந்தோஷப் படுவாள். சரி..நடந்தது நடந்தாயிற்று. கீழே போய் அம்மாவை நமஸ்காரம் பண்ணு" என்றான் சேகர்.

மூன்று மாதம் கழித்துக் குருசரணன் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்துவிட்டான் என்று தெரிந்ததும் நவீன ராய் அவனைக் கண்டபடி திட்டிவிட்டார். அன்றே இரண்டு வீட்டுக்கும் சம்பந்தம் இல்லாதபடி இடைகழியில் இருந்த வாசற்படியைச் சுவர் எழுப்பி அடைத்தும் விட்டார்.

இந்தச் செய்தி வெளியூர் போயிருந்த புவனேசுவரிக்கும் சேகருக்கும் எட்டினதும் அவர்கள் பட்ட வருத்தத்துக்கு அளவேயில்லை. "சேகர், இப்படி ஜாதியைக்கூட விட்டுவிடக் குருசரணனுக்கு யார் போதனை பண்ணினார்களோ?" என்று அங்கலாய்த்துக்கொண்டாள் தாய்.

இது யாருடைய போதனையாக இருக்கும் என்று சேகர் ஊகித்துக் கொண்டான். அப்புறம் ஒரு நிமிஷங்கூட வெளியூரில் இருக்க அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் தாய்க்கும் அதே மாதிரிதான் இருந்தது. அவன், "புறப்படலாமா?" என்றதும் அவளும் உடனே சம்மதித்துவிட்டாள்.

சேகர் திரும்பி வந்தது லலிதாவைத் தவிர யாருக்குமே தெரியாது. அன்று எதிர்பாராமல் இருக்கும்போது சேகர், குருசரணன் வீட்டுக்கு வந்தான். அப்போது கிரீந்திரனும் இன்னும் ஒரு பிள்ளையாண்டானும் அங்கே இருந்தார்கள். சேகர் குருசரணனை க்ஷேமம் விசாரித்தபோது, குருசரணன் அழமாட்டாக் குறையாக, "சேகர், உனக்குத்தான் எல்லாம் தெரிந்திருக்கும். ஒரேயடியாக என்னைக் கைவிட்டு விடாதே, அப்பா!" என்றான்.

சேகர் உள்ளே போய் மாமியையும் விசாரித்துவிட்டுத் திரும்பும்போது லலிதா கதவருகில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டான். அவள் அவன் காலைத் தொட்டு நமஸ்கரித்து, "என் கடிதம் கிடைத்ததா?" என்றாள்.

"இல்லையே!"

"சரி. அதிருக்கட்டும். நான் இனிமேல் என்ன செய்ய வேண்டும்?"

சேகர் வியப்புற்று, "நான் என்ன சொல்வதற்கு இருக்கிறது?" என்றான்.

"பின்னே?"

"நான் சொன்னாலும் நீ கேட்கத்தான் முடியுமா?" என்று, குரலில் வருத்தம் தொனிக்கக் கூறினான் சேகர்.

லலிதா திகில் அடைந்தாள்; "இன்னுங் கூடவா தமாஷ்! எனக்கு இரவெல்லாம் தூக்கமே கிடையாது. நீங்கள் யாருமே இல்லையே இங்கே!" என்றாள்.

சேகர், "அது இருக்கட்டும். அம்மா உன்னை ஏற்றுக்கொள்ள மாட்டாளே! உன் மாமா தமக்குப் பணம் கொடுத்தவர்களின் பேச்சைக் கேட்டுத்தானே ஆகவேண்டும்? அதோடு நீங்கள் பிரம்ம சமாஜத்தில் சேர்ந்துவிட்டீர்களே. எப்படிச் சம்பந்தம் பண்ணிக் கொள்வது?" என்றான்.

அப்போது சமையலறையிலிருந்து காளி கூப்பிடவே, "வருகிறேன்" என்று கூவினாள் லலிதா. பிறகு, "அம்மா என்ன நினைத்தாலும் நாம் இரண்டு பேரும் பழையபடிதானே இருக்கிறோம். என்னதான் இருந்தாலும் பிள்ளைமேல் ஆசை போகுமா? ஆகவே, என்னையும் போ என்று ஒதுக்கிவிட மாட்டாள். கிரீந்திர பாபுவிடமிருந்து துட்டு வாங்கினதால்தான் இப்படி ஆயிற்று என்று தோன்றினால் திருப்பிக் கொடுத்து விட்டால் போகிறது" என்றாள்.

சேகர், "அவ்வளவு பணம் எங்கிருந்து கிடைக்கும்?" என்றான்.

லலிதா அவனை உற்று நோக்கி, "மனசு வைத்தால் நடக்காதா?" என்றாள்.

"உங்க மாமாதான் உன்னை விற்றாயிற்றே?" என்றான் சேகர்.

இருட்டில் அவன் முகம் தெரியாவிட்டாலும் அவன் குரலில் ஏற்பட்ட மாறுதலை அவள் உணர்ந்துகொண்டாள். "யார் சொன்னது? அதெல்லாம் சுத்தப் பொய்! எங்க மாமாவைப் போல் தங்கமான மனுஷர் இந்த உலகத்தில் எங்கே தேடினாலும் கிடைக்க மாட்டார். அவரைக் கிண்டல் பண்ண வேண்டாம். அவர் படுகிற கஷ்டம் யாருக்குத் தெரியும்!" என்றாள். பிறகு, "அவ்வளவு பணம் எப்படிக் கொடுத்துச் சமாளிக்க முடியும் என்று பயந்து கொடுக்காமல் நீங்கள்தான் என்னைக் கைவிடலாம். அவர் ஒன்றும் அப்படிப்பட்ட மனுஷர் இல்லை" என்று சொல்லிவிட்டுப் பதிலை எதிர்பாராமல் வேகமாக உள்ளே போய்விட்டாள்.

* * *

அன்று இரவு வெகு நேரம் வெளியே அலைந்துவிட்டுத் திரும்பினான் சேகர். 'அந்தத் துளியூண்டு லலிதாவா இன்று இவ்வளவு பேச்செல்லாம் பேசத் தெரிந்துகொண்டுவிட்டாள்!' என்று வியப்பும் கோபமும் மாறி மாறி வர எண்ணமிட்டபடி இருந்தான்.

தன் தவறு அவனுக்குத் தெரியவில்லை. அன்று இரவு நிலவில்

நடந்த விஷயம் இவ்வளவு பிரமாதமாக ஆகிவிடும் என்று அவன் எண்ணவேயில்லை. இன்றும் நிலவொளி இருந்தது. அவன் மனம் தன் இனியாளின்பால் சென்றது. 'இனி என்ன செய்வது?' என்று வேதனையுடன் பெருமூச்சு விட்டான். லலிதாவின் குணம் அவனுக்குத் தெரியும். அவளைக் கிரீந்திரனுக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுப்பதாயிருந்தால் அவள் சும்மா இருக்கமாட்டாள். நடந்ததை வெளியிட்டுவிடுவாள். 'ஆனால் அது எல்லாருக்கும் தெரிந்துவிட்டால்?' என்று எண்ணும்போது அவனுக்கு என்ன செய்வதென்றுதான் தெரியவில்லை.

"சரி, இனி லலிதாவை மறந்துவிடவேண்டியதுதான்" என்ற நிலைக்கு வந்துவிட்டான். முதல் சில நாள் வரை, விஷயத்தை லலிதா வெளியிட்டுவிட்டால் என்ன நேருமோ என்று உள்ளுக்குள்ளே அவனுக்குப் பபம். ஆனால் நாள் ஆக ஆக, மாதம் ஆக ஆக அங்கிருந்து யாரும் அவனை வந்து ஒன்றும் கேட்கவுமில்லை; ஒரு விசேஷமும் நடக்கவில்லை. கடைசியில், பெண்பிள்ளைகளுக்கு அடக்கம், நாணம் எல்லாம் உண்டு; அதனால் கொஞ்சத்தில் வாயை விடமாட்டார்கள்' என்பதை அவன் உணர்ந்துகொண்டான்.

முன்போல் மாடியில் உலாவலானான். ஆனால் அடுத்த வீட்டில் பழையபடி யாரும் கண்ணில் படுவதில்லை.

* * *

லலிதாவைத் தன் பெண்ணாகவே கருதி அவள் வேண்டும்போது புடைவைகூட வாங்கித் தருவாள் புவனேசுவரி. ஒரு நாள் லலிதா அழுக்கும் கிழிசலுமாக இருந்த சேலையை உடுத்து மாடியில் நிற்பதைப் பார்த்தபோது புவனேசுவரிக்கு வருத்தம் தாங்கவில்லை. இதைச் சேகரிடம் சொல்லி அவள் அழுதுவிட்டாள்.

சேகர், "அப்படியானால் அவளைக் கூப்பிட்டு என்ன வேண்டும் என்று விசாரிக்கிறதுதானே, அம்மா?" என்றான்.

"அப்படி விசாரித்தால் உங்க அப்பா சும்மா இருப்பாரா?" என்றாள் புவனேசுவரி. பிறகு, "கிரீந்திரனுக்கும் லலிதாவுக்கும் கல்யாணமாகும்போல் இருக்கிறது. வருகிற மாதமேகூட நடக்கலாம்" என்றாள்.

சேகர் இதை மௌனமாகவே கேட்டுக்கொண்டிருந்தான்.

இதற்குப் பின் குருசரணனுக்குக் கடும் ஜுரம் கண்டு படுத்த படுக்கையாகிவிட்டான். சேகர் ஒரு நாள் அவனுடைய உடல் நிலை எப்படி இருக்கிறது என்று விசாரிக்கப் போனபோது லலிதா கிரீந்திரனுடன் சர்வசகஜமாகப் பழகிப் பேசுவதைக் கண்டான். அவன் வந்ததை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை!

சற்று நேரம் சும்மா இருந்துவிட்டு அவன் வெளியே வந்துவிட்டான். 'லலிதா நம்மைச் சட்டைகூடச் செய்யவில்லை பார்த்தாயா? இந்தப் பெண்கள்தான் என்ன கல்நெஞ்சக்காரிகள்!' என்று தன் சோபாவில் அமர்ந்தபடி சிந்திக்கலானான். உள்ளுக்குள்ளேயே குமுறலானான்.

* * *

ஏழெட்டு நாள் கழித்து ஒரு நாள் மாலை எதிர்பாராதிருக்கும்போது லலிதா காளியுடன் அவன்

அறையில் நுழைந்தாள். அவன் மார்பு பக்பக் என்று அடித்துக் கொண்டது. "நாளைக்குப் புறப் பட்டு வெளியூர் போகிறோம், அண்ணு" என்ருள் காளி.

"மாமாவுக்கு எப்படி இருக் கிறது?" என்று விசாரித்தான் சேகர்.

"தேவலை. முங்கேரில் கிரீந்திர பாபு வீட்டில் தங்குவோம். இங்கே இருந்தால் உடம்பு சரிப் படாது என்று டாக்டர் வேறு இடம் போய் இருக்கச் சொன் ஞர்" என்ருள் காளி.

லலிதா தன்னிடமிருந்த சாவியை மேஜைமேல் வைத்துச் சிரித்தபடி, "அலமாரிச் சாவி தான். ஆனல் அதில் இருந்ததை யெல்லாம் செலவழித்தாயிற்று" என்ருள்.

காளி, "சரி, புறப்படலாமா?" என்ருள். அதற்குள் சேகர், "காளி, கீழே போய் இரண்டு வெற்றிலை கொண்டு வா" என்ருன்.

ஆனல் லலிதா அவளை நிறுத்தி, "நீ இரு. நான் கொண்டு வருகி றேன்" என்று சொல்லி வேக மாகப் போய் வெற்றிலையைக் காளியின் கையில் கொடுத்துச் சேகரிடம் சேர்ப்பித்தாள். பிறகு அவர்கள் இருவரும் அவனுக்கு நமஸ்காரம் செய்துவிட்டுப் போய் விட்டார்கள்.

லலிதா வீண் பேச்சுக்கு இடம் ஏற்படக் கூடாதென்றுதான் காளியையும் அழைத்து வந்தாள். இதைச் சேகர் அறிந்து கொண்டான். அவன் உடல் முழுதும் ஒரு வேதனை. படுக்கை யில் முகத்தை மறைத்துக் கொண்டு கிடந்தான்.

குருசரணன் காற்று மாறுதலுக் காக முங்கேர் போயும் உடம்பு சரிப்படவில்லை. ஒரு வரு ஷத்துக்கெல்லாம் இறந்து போனன். கிரீந்திரன் உள்ளூற அவன்மேல் அன்பு கொண் டிருந்தான். சாகும்போது அவனிடமே எல்லாப் பொறுப்பை யும் விட்டுவிட்டுக் குருசரணன் மூச்சை விட்டான்.

குருசரணன் வீட்டில் குடி யிருந்தவர் மூலம் விஷயம் புவ னேசுவரிக்கு எட்டியது. கொஞ்ச நாளைக்கெல்லாம் நவீன ராயும் திடீரென்று காலமாகிவிட்டார். சேகருக்கு விவாகம் நிச்சயமாகி யிருந்தது. ஆனல் தந்தை இறந்த தால் ஒரு வருஷம் தள்ளிப் போட்டுவிட்டார்கள், விவா கத்தை. காசிக்குப் போயிருந் தாள் புவனேசுவரி.

ஒரு வருஷக் கெடுவும் கடந்தது. கல்யாண ஏற்பாடெல்லாம் மும் முரமாக நடந்து வந்தன.

ஒரு நாள் சேகர் அலமாரியி லிருந்து எதையோ எடுக்கப் போகும்போது லலிதாவின் நினைவு வந்தது. அவள்தானே முன்னெல்லாம் அவனுக்காக எல்லாம் செய்வது வழக்கம்?

மூன்று வருஷமாக அவர்கள் சங்கதியே என்னவென்று தெரியவில்லை. அந்த வீட்டில் அவர்கள் குடி வைத்துவிட்டுப் போனவர்களும் காலி செய்து விட்டார்கள். சட்டென்று ஒரு நாள் பழைய வேலைக்காரி அவ னிடம் வந்து, "காளி வீட்டு அம்மா கூப்பிடுருங்க!" என்ருள்.

சேகருக்கு வியப்பாக இருந்தது. "எந்தக் காளி?" என்ருன்.

வேலைக்காரி பக்கத்து வீட்டைக் காட்டினாள்.

சேகர் உடனே அங்கே புறப்பட்டு போனான். விதவையான குருசரணன் மனைவி தன் குறையைச் சொல்லி அழுது, அவனையும் துக்கம் விசாரித்தாள். எப்படியாவது வீட்டை விற்றுத் தர ஏற்பாடு செய்யவேண்டும் என்று அவள் கேட்டுக்கொண்டாள். "ஏதோ கல்யாணம் என்று நடந்ததப்பா. இல்லாவிட்டால் லலிதா உங்களுக்கெல்லாம் கடிதம் போட்டிருக்க மாட்டாளா, அப்பா. மாப்பிள்ளையோடே இருந்துவிடலாம் என்று தீர்மானித்து விட்டேன்" என்று கிரீந்திரனைப்பற்றிப் பேச்சு எடுத்தாள். கடைசியில் இவனுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருப்பதைப்பற்றியும் விசாரித்தாள். மாலை நேரம். லலிதா விளக்கேற்றி வைத்துவிட்டுச் சற்றே நின்று மறுபடி உள்ளே போய்விட்டாள். "பிறத்தியான் மனைவியைக் கூப்பிட்டுப் பேசக் கூடாதே" என்று சேகர் கம்மென்று இருந்துவிட்டான்.

அவன் விடை பெற்றுப் போகும்போது லலிதா அவனிடம் வந்து, "அம்மாவை இன்று அழைத்து வரப் போகிறுப் போல் இருக்கிறது?" என்றாள். "ஆமாம்" என்றான் சேகர்.

அவனுடைய க்ஷேமம் பற்றியும் அவள் விசாரித்தாள். "சௌக்கியந்தான்" என்று சொல்லிவிட்டு அவன் அங்கிருந்து சீக்கிரமாகவே புறப்பட்டுவிட்டான்.

வெளியே வந்ததும் அவனுக்கு லலிதாவிடம் அருவருப்பு மூண்டது.

சேகர் தன் தாயை அழைத்து வந்துவிட்டான்.

அன்று மாலை அவன் மாடியிலிருந்து இறங்கும்போது லலிதா மேலே வருவதைக் கண்டான். அவள் அவனைப் பார்த்து, "ஒன்று சொல்ல வேண்டும்" என்றாள்.

அவன் வியப்போடு, "என்னோடா?" என்றான்.

லலிதா, "ஆமாம்" என்றாள.

"என்னோடு என்ன பேச்சு!" என்று சொல்லிக்கொண்டே சேகர் வேகமாக அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டான்.

லலிதா சற்றுநேரம் அப்படியே நின்றுகொண்டிருந்துவிட்டு, பிறகு ஒரு பெருமூச்சுவிட்டு, மெல்ல மெல்ல அங்கிருந்து போய் விட்டாள்.

மறுநாள் கிரீந்திரன் சேகரிடம் வந்து அவனுக்கு வணக்கம் தெரிவித்த பின், "நீங்கள் வீட்டை வாங்கிக்கொண்டால் சௌகரியமாக இருக்கும். மற்றப்படி..." என்று இழுத்தான்.

சேகருக்கு அவனைப் பார்த்ததும் உள்ளுக்குள் குமுறியது. "அண்ணாவிடம் சொன்னால் தேவலை" என்றான்.

கிரீந்திரன் சிரித்தபடி, "அது சரி. நீங்களே அவரிடம் சொன்னாலும் பரவாயில்லை. நானும் சொல்கிறேன். நீங்கள் மனசு வைத்தால் முடியும் என்று தங்கச்சி சொல்லிற்று" என்றான். சேகர் ஈஸி சேரில் நிமிர்ந்து உட்கார்ந்து, "யார் சொன்னார்கள்?" என்றான்.

"தங்கச்சி லலிதாதான்."

சேகருக்கு ஒரே வியப்பாக இருந்தது. அவன், "என்ன, அப்படியானால் லலிதாவுக்கும் உங்க

ளுக்கும் விவாகம் ஆகவில்லையா?" என்று கேட்டான்.

"காளியைத்தானே நான் கல்யாணம் செய்துகொண்டேன்!" என்றான் கிரீந்திரன்.

அப்போதுதான் சேகருக்குக் கிரீந்திரனின் உயர்ந்த குணம்-தியாக புத்தி-பளிச்சென்று தெரிந்தது. அவன் கண்களிலிருந்து நீர் சுரந்தது.

கிரீந்திரன் விடை பெற்றுச் சென்ற பின் சேகர் அவனிடத்தில் உள்ளூறப் பக்தி சிரத்தையுடன் அவன் நின்ற இடத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டான்.

அன்று பிற்பகல் சேகர் தன் அம்மாவைக் காணவந்தபோது லலிதாவும் அங்கேதான் இருந்தாள். "அம்மா, என்னடா!" என்று விசாரித்தபோது சற்றுச் சும்மா இருந்துவிட்டு, "என் அம்மா, கல்யாணம் பண்ணிக் கொள்ளாவிட்டால்-?" என்று சிரித்துக்கொண்டே பேச்செடுத்தான்.

புவனேசுவரி, "நீதான் க்ஷண சித்தம், க்ஷணபித்தமாச்சே! அப்படியும் செய்வாய்" என்றாள்.

சேகர், "இத்தனை நாள் கழித்து இப்போது சொல்கிறேன், அம்மா! இனிமேல் சும்மா இருந்தால் நடக்காது. நான் எவ்வளவோ தப்புச் செய்திருக்கிறேன்; மன்னித்திருக்கிறாய். நான் அங்கே சம்பந்தம் பண்ணிக்கொள்ளப் போவதில்லை" என்றான்.

புவனேசுவரி எரிச்சலுடன், "போதும்; எனக்கு எரிச்சல் மூட்டாதே! போ" என்றாள்.

அப்போது அவன், "அப்படித்தான்" என்றான் பிடிவாதமாக.

"சரி; நான் லலிதாவை அழைத்துக்கொண்டு காசிக்குப் போய்த் தொலைகிறேன். நீயே பார்த்[illegible] கொள், எல்லாவற்றையும்" [illegible]றாள் புவனேசுவரி கோபத்தோடு.

சேகர் சிரித்தபடி, "அப்படியே ஆகட்டுமே" என்றான்.

புவனேசுவரிக்கு ஒன்றும் புரியவில்லை. அப்போது சேகர் லலிதாவைக் காட்டி, "இவள்தான் அம்மா உன் மருமகள்" என்று தாயின் காலைத் தொட்டு வணங்கினான். லலிதாவும் கூடவே அவளை வணங்க வந்தபோது, புவனேசுவரி ஸ்தம்பித்துவிட்டாள். இருவரும் சேர்ந்தே அவளை வணங்கினார்கள்.

அவள் இதை எதிர்பார்க்காவிட்டாலும் அவள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. சேகருக்கு லலிதா விஷயம் இத்தனை நாள் தெரியாவிட்டாலும் புவனேசுவரிக்கு அவளுக்கு மணம் ஆகவில்லை என்பது தெரியும். ஏற்கனவே லலிதாமேல் உள்ளூறப் புவனேசுவரிக்கு அன்பு உண்டு. இப்போது மிகுந்த வாஞ்சையுடன் அவளை ஆசீர்வதித்தாள். பெட்டியைத் திறந்து நகைகளையெல்லாம் எடுத்து லலிதாவுக்குப் போட்டு அழகு பார்க்கலானாள். ★

EDITED, PRINTED AND PUBLISHED BY N RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

# எது சரி?

கிரீஸ் தேசத்தில் பிர்ரோ என்று ஒரு தத்துவதர்சி இருந்தார். "ஒரு விஷயத்தை எடுத்துக்கொண்டால், அதை இப்படிச் செய்வது புத்திசாலித்தனமா, அப்படிச் செய்வது புத்திசாலித்தனமா என்று மனிதன் தீர்மானிக்கவே முடியாது" என்று அவர் சொல்லுவது வழக்கம்.

அவருடைய வாலிப வயதில், ஒருநாள் வெளியே உலாவச் சென்றார். வழியிலே அவருடைய குரு, ஒரு குழியில் தலைகீழாக விழுந்துகிடப்பதைக் கண்டார். குருவின் தலை, அந்தக் குழியில் புதைந்திருந்தது. குரு வெளியே வர முடியாமல் தவித்துக்கொண் டிருந்தார். இந்தக் குருவிடந் தான், பிர்ரோ தம் தத்துவ சாஸ்திரத்தையெல்லாம் கற்றார்.

அப்படிப்பட்ட குரு இவ்விதம் தவித்துக்கொண் டிருப் பதைக் கண்டதும், பிர்ரோ சற்று நின்று ஏதோ யோசித்தார். பிறகு, 'இந்தக் கிழவரை வெளியே தூக்கிவிடுவதால், என்ன நன்மை விளையும்? அப்படி எதுவும் விளையும் என்று எண்ணப் போதிய ஆதாரம் ஒன்றும் இல்லை' என்று முடிவு செய்தார். பேசாமல் கையை வீசிக்கொண்டு நடந்துவிட்டார்.

மற்றவர்களுக்கு இந்த மாதிரி சம்சயம் எல்லாம் உண்டாக வில்லை. குருவை அவர்கள் கைதூக்கிவிட்டார்கள். "ஈர இறக்க மில்லாதவர் நீர்" என்று பிர்ரோவைத் திட்டினார்கள்.

குருவோ அவர்களை அடக்கிவிட்டு, "பிர்ரோ, உன் கொள்கைப்படி நீ நடந்துகொண்டதை மெச்சுகிறேன்" என்று புகழ்ந்தார்.

—பேர்ட்ராண்டு ரஸ்ஸல்

November '54 Regd. No. M. 4975

# மஞ்சரி

ஜய - கார்த்திகை


| | | |
|---|---|---|
| ஊரும் உலகமும் | | 1 |
| தண்ணீர்த் தட்டு | மணி விளக்கு | 3 |
| சித்தன்னவாசல் சித்திரங்கள் | தமிழ் நாடு | 6 |
| அத்திரி | செந்தமிழ்ச் செல்வி | 10 |
| ஞானம் அருளிய குழந்தை | | 14 |
| நீலகிரிப் படுகர் | | 18 |
| பெண்ணாக மாறும் ஆண் பூச்சி | ஸண்டே கிரானிக்கிள் | 22 |
| என்னைக் கேளுங்கள் | காப்டன் என். சேஷாத்திரிநாதன் | 23 |
| நலம் தரும் தேன் | ப்ரக்ருதி | 26 |
| குழந்தையின் கேள்வி | பேரண்ட்ஸ் மகஸீன் | 29 |
| மனித இருதயம் | புக் யூனிவர்சிட்டி ஜர்னல் | 33 |
| கங்கை விழும் இடம் | ப்ரபாவி | 36 |
| ரெயில்வே அட்டவணை | ஸவுத் ரெயில்வே மகஸீன் | 40 |
| புராதன மாளவம் | மாடர்ன் ரெவ்யூ | 44 |
| கார்ட்டூன் கதம்பம் | | 50 |
| முஸோலினி சிங்க வேட்டை | | 51 |
| நாராயண குரு | பிரஜாமத | 57 |
| தபால்தலைச் செல்வம் | ஸ்வதந்த்ரா | 60 |
| அரைப் புளுகன் (அரபுக் கதை) | அ. லெ. நடராஜன் | 65 |
| மருமகள் (நாவல் சுருக்கம்) | சரத் சந்திரர் | 71 |
| எது சரி? | பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் | (3-ஆம் அட்டை) |